Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 01 வெள்ளிக்கிழமை (15.05.2015) பக்கங்கள் 20 ஓசை - 227

## 20 ஆவது திருத்தம் நாளை விளக்க உரை

அரசியல் அமைப்பின் 20ஆவது திருத்தம் என்றால் என்ன? இது நமக்கு நன்மையையா, தீமையையா கொண்டு வரப் போகின்றது என்ற கேள்விகளுக்கு எளிமையான விளக்கங்களை, தற்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் முன்வைக் கப்பட்டுள்ள சட்ட நகலை தயாரித்த விற்பன்னர்கள் வழங்கவுள்ளார் கள். இது தொடர்பான எளிமையான விளக்க உரைகள் அடங்கிய பகிரங்க கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை முற்பகல் 10.15 மணி முதல் பம்பலப்பிட்டி மாணிக்க விநாயகர் ஆலயத்துக்கு எதி ரில் லோரன்ஸ் வீதி, இலக்கம் 8 இல் அமைந்துள்ள ஏ.வி.எஸ் மண்ட பத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

## புதிய தேர்தல் முறைமை ஆராய உபகுழு நியமனம்

(கொழும்பு)

தேர்தல் முறை மாற்றம் தொடர் பான யோசனைகளையும், பரிந் துரைகளையும் ஆராய்வதற்காக 9 பேர் கொண்ட அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப் பட்டுள்ளது.

அமைச்சரவை அல்லாத உறுப் பினர்கள் மற்றும் அனைத்து தரப பினரது கருத்துக்களையும் குறித்த குழு பெற்று எதிர்வரும் 20ஆம் திகதி அறிக்கை ஒன்றை சமர்ப் பிக்கும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவிய லாளர் மாநாடு அரசாங்கத் தக வல் திணைக்களத்தில் நேற் றுக் காலை நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரை யாற்றிய போதே அமைச்சர் இத னைக் குறிப்பிட்டார்.

குறித்த உபகுழுவில் அமைச் சர்களான சரத் அமுனுகம, எஸ்.பி. திஸாநாயக்க, லக்ஷ்மன் கிரி யெல்ல, கபீர் ஹாசிம், பாட் டலி சம்பிக்க ரணவக்க, கயந்த கருணாதிலக, ரிசாத் பதியுதீன்

19 ஆம் பக்கம் பார்க்க

# சிறுபான்மையினரைப்பாதிக்காத தேர்தல் முறை ஒன்று வேண்டும்

## ஜனாதிபதியிடம் ஈ.பி.டி.பி.கோரிக்கை



புதிய தேர்தல்முறை சிறு பான்மை இனங்களுக்கும், சிறு கட்சிகளுக்கும் நாடாளுமன்றத் தில் உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கக் கூடியவகையில் அமை யப்பெறல் வேண்டும். இவ்வாறு ஈ.பி.டி.பி. ஜனாதிபதிக்கு தேர்தல் முறைமாற்றம் தொடர்பாக நேற்று முன்தினம் கையளித்த மகஜரில் தெரிவித்துள்ளது.

கடந்த 11ஆம் திகதி ஜனா திபதி செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஜனாதிபதி ஒவ்வொரு கட்சிகளையும் கேட்டுக்கொண் டதற்கு அமைவாகவே இம்மக ஜர் கையளிக்கப்பட்டது.

அம்மகஜரில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது, வடக் குக் கிழக்கில் கடந்த மூன்று தசாப்த காலமாக இயற்கை மரண விகிதாசாரத்திலும் விட அதிகமான மரணங்கள் நடை பெற்றதாலும் பொருளாதார கார ணங்களுக்கான குடியகல்வுகளி லும் பார்க்க அதிகளவிலான குடியகல்வுகள் நடைபெற்றதா லும் ஓர் குறிப்பிட்ட காலத்திற்கு அதனை ஈடுசெய்யக்கூடிய வகை யில் நாடாளுமன்ற பிரதிநிதித் துவம் அமையவேண்டும்.

அத்துடன் புதியதேர்தல் தொகு திகள் நிர்ணயிக்கப்படும்போது இயலுமானவரை சிறுபான்மையி னரை அவர்களுடைய விகிதா சாரத்தை பிரதிநிதித்துவப்படுத் தப்படும் வகையில் அமைய வேண்டும். மேலும், கணிசமான சிறுபான்மையினர் வாழும் தேர் தல் தொகுதியில் அவர்களது பிரதிநிதித்துவத்தை உறுதி

19 ஆம் பக்கம் பார்க்க

## மாணவி கொலை; புங்குடுதீவில் கோரம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் காணாமற் போயிருந்த மாணவி ஒருவர் நேற்று சடலமாகக் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

வல்லன் என்றழைக்கப்படு கின்ற புங்குடுதீவு பத்தாம் வட் டாரத்தைச் சேர்ந்த சிவயோக நாதன் வித்தியா என்ற 19 வயது டைய உயர்தர வகுப்பு மாண வியே இவ்வாறு சடலமாக, கைகள் பின்னால் கட்டப்பட்டும், மரக் கட்டையில் கால்கள் பரப்பி கட்டப்பட்டும், இரத்த வெள்ளத் தில் கண்டுபிடிக்கப்பட்டதாக ஊர்வாசிகள் தெரிவித்துள்ளனர்.

புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவியாகிய இவர் நேற்று முன்தினம் காலை பாடசாலைக்கு புறப்பட்டுச் சென்றதாகவும்,

19 ஆம் பக்கம் பார்க்க

## வட பகுதிக்கு ரயில் சேவைகள் இரத்து

யாழ்ப்பாணத்திற்கான ரயில் சேவைகள் நாளை சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களும் யாழ்ப்பாணத் திற்கான புகையிரதத் சேவை இடம பெறாது என புகையிரத திணைக் களம் அறிவித்துள்ளது.

வவுனியாவுக்கும் மதவாச் சிக்கும் இடையில் புகையிரதப் பாதையில் திருத்த வேலைகார ணமாக இரு நாட்களும் அநு ராதபுரம் வரையும் மட்டுப்படுத் தப்பட்ட சேவையே இடம்பெற வுள்ளது. என்றும் அறிவிக்கப்பட் டுள்ளது.

## கொலையைக் கண்டித்து இன்று கண்டனப் போர்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவி வித்தியாவின் படு கொலையை கண்டித்து இன்று முழுநாளும் புங்குடுதீவு முழுவ தும் பூரண கதவடைப்புப் போராட டமும் கறுப்புப்பட்டி போராட்ட மும் இடம்பெறவுள்ளது. புங்குடு தீவு தனியார் போக்குவரத்துச் சேவைச்சங்கம், புங்குடுதீவு வர்த்த தக சங்கம், புங்குடுதீவில் உள்ள அரச திணைக்களங்கள், பொது நிறுவனங்கள், சனசமூக நிலை யங்கள், விளையாட்டுக்கழகங் கள் என்பன பூரண ஒத்துழைப்பை வழங்க முன்வந்துள்ளன. இதே போன்று இப் பிரதேச மக்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

## உள்ளூராட்சி சபைகள் கலைப்பு

### வடக்கில் கலைப்பு இல்லை



நேற்று 234 உள்ளூராட்சி மன்றங்களுக் கான பதவிக்காலம் நிறைவடைகின்றது.

இந்த உள்ளூராட்சி மன்றங்கள் இன்று முதல் விசேட ஆணையாளர்களின் கட்டுப் பாட்டின் கீழ் இயங்கவுள்ளன.

20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட் டதன் பின்னர் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவிய லாளர் சந்திப்பில் அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்று தெரிவித்தார்.

நாட்டில் 335 உள்ளூராட்சி மன்றங்கள் இயங்குகின்றன.

அவற்றில் 234 உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் இன்று நிறைவடைவதுடன், ஏனைய 65 உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் யூலை 31 ஆம்

19 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் மழைதொடரும்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் நிலவும் அசாதா ரணமான காலநிலை இன்னும் இரண்டு அல்லது மூன்று தினங் களுக்கு நீடிக்கக்கூடும். என திருநெல்வேலி வானிலை அவ தான நிலைய அதிகாரி பிர தீபன் தெரிவித்தார்.

இக்காலநிலை தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்று ஆரம பமாகும் வரை நீடிக்கக்கூடும்

19 ஆம் பக்கம் பார்க்க

## குடை சாய்ந்தது இராணுவ வாகனம்



புத்தூர் - மீசாலை பிரதான வீதியில் பயணித்துக் கொண்டிருந்த இராணுவ கெப் ரக வாகனம், நேற்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வண்ணாத்தி பாலத்துக்குள் குடைசாய்ந்துள்ளது என சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

# நாதன் குடியிருப்பில் 262 குடும்பங்களுக்கு காணி வழங்கும் நடமாடும் சேவை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புன்னைநீராவி நாதன் திட்ட மக்களுக்கான காணிகளை வழங்கும் நடமாடும் சேவை நேற்று நடைபெற்றது.

புன்னை நீராவி நாதன் குடியிருப்பில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வரும் மக்களுக்கான காணி ஆவணங்கள் வழங்கப்படாமையால், இவர்களுக்கான நிரந்தர வீட்டுத்திட்டங்கள் வழங்கப்படாது தற்காலிக வீடுகளிலேயே மீள் குடியேற்றத்தின் பின்னரான கடந்த 5 ஆண்டுகளும் வாழ்ந்து வந்தனர்.

இந்நிலையில் இவர்களுக்கான காணி ஆவணங்கள் வழங்குவதற்கான நடமாடும் சேவை நேற்று நடைபெற்றுள்ளது.

இதில் கலந்து கொண்ட கண்டாவளை பிரதேச செயலர் டி.முகுந்தன் கருத்துத் தெரிவிக்கையில்,

புண்ணைநீராவி நாதன் குடியிருபபில் வாழ்ந்து வரும் 262 குடும்பங்களுக்கு காணி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இன்று, வழங்குகின்ற காணி குடியிருப்பு காணி ஆகும். வாழ்கின்ற அதேயிடத்தில் ஒரு குடும்பத்துக்கு - அரை ஏக்கர் காணி வழங்கப்பட உள்ளது.



262 குடும்பங்களில் தகுதியானவர்களுக்கு காணிகள் வழங்கப்படுகின்றது.

இவர்கள் வாழ்கின்ற இந்தப் பகுதி மத்திய வகுப்புத்திட்டத்துக்கு உட்பட்ட பகுதியாக அடையாளப்படுத்தப்பட்ட காரணத்தால் இந்தக் காணிகளை இவர்களுக்கு வழங்குவது தடையாக இருந்தது.

தற்போது காணி ஆவணங்கள், காணி ஆணையாளர் நாயகத்தின் பரிசீலனைக்கு அமைய சரிபார்த்த போது குறித்த 262 குடும்பங்கள் வாழ்க்கின்ற பகுதி மத்திய வகுப்புத்திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிப்பதற்கு ஒதுக்கப்பட்ட காணியாகவும் அது வழங்கப்பட்டதற்கு எந்தவித ஆதாரங்களும் கிடைக்கவில்லை.

இந்தக் காணிகள் ஏற்கனவே மத்திய வகுப்புத்திட்டத்தினருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் வழங்கப்படவில்லை. காணி ஆணையாளரின் சிபாரிசின் படி அரச காணிகளாக இவை காணப்பட்டு இவை மக்களுக்கு வழங்கப்படுகின்றது.

காணிகள் வழங்குவதன் மூலம் வீட்டுத்திட்டங்களோ அல்லது ஏனைய சலுகைகள் வழங்குவதிலோ தடைகள் இருக்காது எனவும் அவர் கூறினார்.

# மன நோயால் பாதிக்கப்பட்ட யுவதி கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் மனநோயினால் பாதிக்கப்பட்டிருந்த யுவதி ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மானிப்பாய் கிழக்கு மானிப்பாயைச் சேர்ந்த சோமசுந்தரம் அனித்தா (வயது - 33) என்ற யுவதியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் காலை முதல் காணாமற் போயிருந்த நிலையில் உறவினர்கள் தேடியுள்ளனர். எனினும், நேற்று முன்தினம் இரவு வீட்டுக் கிணற்றில் யுவதி சடலமாக மிதப்பது கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் மானிப்பாய் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்டதுடன் நேற்று பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்படடிருந்தது. (இ)

# "சிறுவர் சித்திரக் கதை" நூல் வெளியீடு

(நெல்லியடி)

வடமராட்சி வலய இசை ஆசிரிய ஆலோசகர் ஆனந்தராணியின் "சிறுவர் சித்திரக் கதை" மற்றும் "பாட்டி சொன்ன கதை" (மகிழ் - 01) "செல்லப் பிராணிகள் (மகிழ் - 02) ஆகிய நூல்கள் எதிர்வரும் 23ஆம் திகதி வடமராட்சி வலயக் கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது.

தும்பளை தெற்கு "தமிழ் ஒளி" மாணவர் மன்றக் காப்பாளர் சி. மார்க்கண்டு தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சி. நந்தகுமாரும், சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் ச. சுகிர்தன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ள்னர். (17)

# கையை வெட்டிய குற்றச்சாட்டில் மேலும் 3 சந்தேக நபர்கள் கைது

(மானிப்பாய்)

மானிப்பாய் செல்லமுத்து மைதானத்தில் கடந்த மாதம் இடம் பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் பல்கலைக்கழக மாணவனின் கையை வெட்டிய குற்றச்சாட்டில் மேலும் 3 சந்தேகநபர்களைக் நேற்று கைது செய்துள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.ஏ.டி.றொகான் மகேஸ் தெரிவித்தார்.

சந்கேதநபர்களிடமிருந்து 3 வாள்கள், முச்சக்கரவண்டி, 2 மோட்டார் சைக்கிள் என்பன மீட்கப்பட்டன.

மேற்படி வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய அறுவர் கடந்த மாதம் 27ஆம் திகதி கைதாகி விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ள நிலையில், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய சூத்திரதாரி கடந்த 8ஆம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 25ஆம் திகதி செல்லமுத்து மைதானத்தில் இடம்பெற்றிருந்த இசை நிகழ்ச்சியை பார்த்துவிட்டு திரும்பிய யாழ். பல்கலைகழக மாணவர்கள் மீது மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் வாள் வெட்டை மேற்கொண்டிருந்தனர்.

இந்தச் சம்பவத்தில், வவுனியாவைச் சேர்ந்த ந.முரளிதரன் (வயது 23) என்ற மாணவனின் கை துண்டிக்கபட்டு, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அத்துடன், வவுனியாவை சேர்ந்த க.ரஜீவன் (வயது 23), முல்லைத்தீவை சேர்ந்த எஸ்.ஜெபர்ஸன் (வயது 23), ஆகிய இருவரும் கடுமையான வெட்டுக் காயங்களுக்கு உள்ளாகி யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என இதுவரையில் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கழிவு எண்ணெய் பாதிப்பு பகுதிகளுக்கு குடிநீர் வழங்க மாதாந்தம் ஒரு மில்லியன் செலவு

(தெல்லிப்பளை)

கழிவு எண்ணெய் பாதிப்புக்குள்ளாகிய பகுதிகளிலுள்ள பொது மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு மாதாந்தம் சுமார் 1 மில்லியன் ரூபாய் செலவு செய்து வருவதாக வலிகாமம் வடக்கு (தெல்லிப்பளை) பிரதேச சபைத்தவிசாளர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

எமது பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள கிணறுகளில் எண்ணெய்க் கசிவு இருப்பதாக பொதுச்சுகாதார பரிசோதகர்களால் உறுதிப்படுத்தப்பட்டு, அப்பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்கின்றோம்.

எங்களுடன் இணைந்து பிரதேச செயலகம், யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு ஆகியனவும் இணைந்து சுமார் 250 குடிநீர் தாங்கிகளை பாதிக்கப்பட்ட பகுதிகளில் வைத்து குடிநீர் விநியோகம் செய்கின்றோம்.

தொண்டைமானாறிலுள்ள நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையில் இருந்து நாளாந்தம் கட்டணம் செலுத்தி 2 பவுஸர்களின் குடிநீர் கொள்முதல் செய்து குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றது.

இதனைவிட பவுஸர் எரிபொருள், டயர், பராமரிப்புச் செலவுகள் என செய்யப்படுகின்றன. அத்துடன், குடிநீர் வழங்கலில் ஈடுபடுகின்ற பணியாளர்களுக்கு 10 பேருக்கான கொடுப்பனவு ஆகியவற்றையும் வழங்குகின்றோம் என்றார்.

## கோயிலில் திருட்டு

மீசாலை புகையிரத நிலையத்திற்கருகாமையிலுள்ள கோயிலில் நேற்று முன்தினம் இரவு திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அம்மன் ஆலய விக்கிரகத்தின் இயந்திரத் தகடு மற்றும் ஆலய ஒலிபெருக்கிச் சாதனம் என்பன திருடப்பட்டுள்ளன.

ஆலயக் கதவுகள் உடைக்கப்பட்டு இத்திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (இ)


## கேள்வி அறிவித்தல்

### யாழ். பல்கலைக்கழகம்

1) ஆனந்தகுமாரசாமி பெண்கள் விடுதி உணவகம் - திருநெல்வேலி.
2) சித்தமருத்துவத்துறை உணவகம் - கைதடி

மேற்படி உணவகங்களை நடாத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் பணிமனையில் 27-05-2015ஆம் திகதி முற்பகல் 10.00 மணி வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக் ரூபா 2000/- உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500 உம் தனித்தனியாக பல்கலைக்கழக நிதிக் கிளையில் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு உணவகத்திற்கும் தனித்தனி கேள்விப் படிவங்கள் அனுப்பப்படுதல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் **இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.**

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.** 15-05-2015
(C/3861)


## DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | வெள்ளிக்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம், பக்திப் பாடல்கள் |
| Am 07.00 | கலைக்கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | SMS Time |
| Am 9.55 | காலை செய்திகள் |
| Am 10.00 | Hello DD |
| Am 10.30 | IT.Com |
| Am 11.00 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | வாழும் கலைஞர்கள் |
| PM 01.00 | மதியச் செய்திகள் |
| PM 01.30 | சுப்பர் திரைப்படங்கள் |
| PM 03.55 | மாலைச் செய்திகள் |
| PM 04.30 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 07.30 | தமிழ் பேசும் தமிழா |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# அடைமழையால் யாழில் இயல்பு நிலை பாதிப்பு


(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நேற்றுக் காலை பரவலாக பெய்த மழையினால் இயல்பு நிலையில் பாதிப்பு ஏற்பட்டது.

கடந்த சில நாட்களாக குடாநாட்டில் தொடர்ச்சியாக அடைமழை பொழிந்துவருவதினால் தாழ் நிலப்பகுதிகளில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் சிறுதானிய செய்கை உட்பட அனைத்து பயிர்ச் செய்கைகளும் பாதிப்படைந்துள்ளன.

இந்நிலையில் நேற்றுக்காலை முதல் அடைமழை யாழ்.குடாநாட்டில் பல பகுதிகளில் பொழிந்த நிலையில் பாடசாலை மாணவர்கள், ஊழியர்கள் என பலதரப்பட்டவர்களும் பாதிப்படைந்ததுடன், இயல்பு நிலையில் என்றும் இல்லாத அளவில் ஸ்தம்பித நிலை காணப்பட்டது. (இ)

# மஹாகும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி விளைவேலி அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேக கிரியைகள் எதிர்வரும் 3 ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை 5 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி மறுநாள் வியாழக்கிழமை விஷேட சாந்தி, யாக பூஜை, ஹோமம், தீபாராதனை திருமுறை பாராயணம் எனபன இடம்பெற்று 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் மறுநாள் சனிக்கிழமை மாலை 4 மணி வரை இருநாட்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறவுள்ளது.

7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு கும்பாபிஷேக கிரியைகள் இடம்பெற்று பகல் 10.50 மணி முதல் 11.50 மணி வரையான சிம்ம லக்ன சுபமுகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம் இடம்பெற்று தொடர்ந்து மஹா அபிஷேகம் நடைபெறவுள்ளது.

இக்கும்பாபிஷேகத்தை ஆலய தர்மகர்த்தா பிரம்மஸ்ரீ ம.பரமேஸ்வர குருக்கள் தலைமையில் பிரம்மஸ்ரீ ச.ஜெயந்தி நாதக்குருக்கள் நடாத்தி வைக்கவுள்ளார். (இ)

# கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு


(மன்னார்)

மன்னார் பன்னவெட்டுவான் அ.த.க.பாடசாலையின் ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான மாலை நேர வகுப்புகளுக்கான ஆசிரியரை ஒழுங்குபடுத்தும் நிகழ்வும், அம்மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் அன்டன் லீனஸ் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் வன்னி எம்.பி சிவசக்தி ஆனந்தன், ஆசிரிய ஆலோசகர் தயானந்தன், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்துகொண்டனர். ஆசிரியருக்கான மாதாந்த கொடுப்பனவை அன்பினால் அனைவரையும் அரவணைப்போம். "அரும்புகள்" கல்வி வளர்ச்சித்திட்டம் அமைப்பினர் வழங்க உள்ளதோடு, மாணவர்களின் கற்றல் உபகரணங்களுக்கும் நிதியுதவி அளித்திருந்தனர். (160)

# சதுப்பு நிலத்தை பாதுகாப்பதில் முதல் நாடாகும் இலங்கை



சதுப்புநிலக் காடுகளை முழுமையாகப் பாதுகாக்கும் உலகின் முதல் நாடாக இலங்கை மாறவுள்ளது. இதற்கான திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சதுப்பு நிலக் காடுகள் கணிசமாக அழிக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றைப் பாதுகாத்து மீள்நடுகை செய்யும் நோக்கில், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளிட்ட 15 ஆயிரம் பெண்களுக்கு, மாற்று வருமானத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் நுண் கடன்கள் வழக்கப்படவுள்ளன.

இதன் மூலம் சதுப்பு நிலக் காடுகளை விறகுக்காக அழிக்கும், இவர்கள் அதனைத் தவிர்ப்பதுடன், சதுப்பு நிலத் தாவரங்களை மீள்நடுகை செய்து வருமானத்தை ஏற்படுத்திக் கொள்வர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

உலகின் அரைப்பகுதி சதுப்பு நிலக்காடுகள் கடந்த நூற்றாண்டில் அழிக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கையில் உள்ள சதுப்பு நிலக்காடுகள் அனைத்தையும் பாதுகாக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அரசாங்கத்தின் உதவியுடன் சுதேச என்ற அரச சார்பற்ற நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் இந்த திட்டத்தின் மூலம், சதுப்பு நிலக்காடுகள் பாதுகாக்கப்படுவதுடன், கரையோரப பகுதி மக்களின் வாழ்க்கை நிலையும் உயரும் என்று நம்பப்படுகிறது.

அறிவிக்கப்பட்டுள்ள 2.2 மில்லியன் பவுண்ட்ஸ் திட்டத்தின் கீழ், 48 கடலேரி களில் உள்ள 21,782 ஏக்கர் சதுப்புநிலக் காடுகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவுள்ளன.

9600 ஏக்கரில் சதுப்பு நிலத் தாவரங்கள் மீள் நடுகை செய்யப்படவுள்ளன.

அத்துடன், கரையோரப் பகுதிகளை இயற்கைச் சீற்றங்களான வெள்ளம், சுனாமி போன்றவற்றில் இருந்து பாதுகாக்கவும் உதவும் சதுப்பு நிலக் காடுகள், நண்டு, இறால் உள்ளிட்ட கடல் வாழ் உயிரினங்களின் இனப்பெருக்கத்துக்கான களமாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி பேரழிவின் போது, வடக்கு, கிழக்கில் பல இடங்களில் பாதிப்புகள் குறைவாக இருந்தமைக்கு, சதுப்பு நிலக் காடுகளும் முக்கிய காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

# இரத்ததான நிகழ்வும் மரநடுகையும்

வாழும் கலை நிறுவுனர் ஸ்ரீ ரவிசங்கர் குருஜியின் 59 ஆவது பிறந்த தினத்தையொட்டி யாழ். பிறவுண் வீதியில் அமைந்துள்ள வாழும் கலை நிலையத்தின் ஏற்பாட்டில் நல்லூர் முருகன் ஆலயத்திற்கு அண்மையிலுள்ள பகுதிகளில் மரம் நடுகை இடம்பெற்றது. இப் பகுதியின் வீடுகளிலும், இடங்களிலும் தென்னை, மா, நெல்லி, பலா உள்ளிட்ட பயன்தரு மரங்கள் நாட்டப்பட்டன.

இதேவேளை, ரவிசங்கர் குருஜியின் பிறந்த தினத்தை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக் கிழமை நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் குருதிக் கொடையும் இடம்பெற்றது.

இதில் 16 பேர் கலந்து கொண்டு குருதிக் தானம் செய்தனர். குறித்த குருதிக் கொடை நிகழ்வு தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த நிலையத்தின் யாழ். மாவட்ட அமைப்பாளரும், சர்வதேச வாழும் கலை ஆசிரியருமான டி.சாயிராம்ஜி, வாழும் கலை நிறுவுநர் பூஜ்ய ஹீ ரவிசங்கரின் 59 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை 16 பேர் கலந்து கொண்டு இரத்ததானம் செய்தனர்.



பிரத்தியேகமாகப் பெண்களும், இளைஞர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர்.

இந்த நாளில் இரத்த தானம் செய்ததன் மூலம் உயிர்களைக் காப்பாற்றிய மனநிறைவடைகிறோம்.

இதேவேளை, நேற்றுமுன் தினம் புதன்கிழமை ரவி சங்கர் குருஜியின் பிறந்தநாளன்று பிறந்தவர்கள் யாழ்.வாழும் கலை நிலையத்தால் அன்றைய தினம் பிற்பகல் 5 மணி முதல் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் தெற்கு வீதி வளாகத்தில் இடம் பெற்ற பிறந்ததின விழாவில் விசேடமாகக் கௌரவிக்கப்பட்டனர்

இந்த விழாவில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

# கடமைக்கு இடையூறு மீனவர்கள் கைது

(முல்லைத்தீவு)

கடற்றொழில் திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலக ஊழியர்களின் கடமைக்கு இடையூறுகளை ஏற்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் முல்லைத்தீவு கேப்பாப்பிலவு கிராமத்தைச் சேர்ந்த நான்கு மீனவர்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக முள்ளியவளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு நந்திக்கடலில் தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி தொழிலில் ஈடுபடும் மீனவர்களை பிடிப்பதற்காக குறித்த திணைக்கள அதிகாரிகள் மற்றும் மீனவ சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் நேற்றுமுன்தினம் மாலை நேரத்தில் நந்திக்கடலோரத்தில் ரோந்துக் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது குறித்த குழுவினரை சுற்றிவளைத்த நான்கு மீனவர்கள் வருகை தந்த கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள் மற்றும் மீனவ சங்க பிரதிநிதிகள் உள்ளிட்டோரிடம் தரக்குறைவாக நடந்துகொண்டதுடன், வாக்குவாதங்களிலும் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் முள்ளியவளை பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்து அந்த இடத்திற்குச் சென்ற பொலிஸார் குறித்த நான்கு பேரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரும் முள்ளியவளை பொலிஸார், கைது செய்யப்பட்ட நான்கு மீனவர்களையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர். (160)

நம்பிக்கை இல்லாத இடத்தில் முயற்சியும் இருக்கமுடியாது.
- ஜான்ஸன்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## அந்த கரட் எப்படியானது?

தனிநாடு அல்லது சிங்களவர்கள் தலையிட முடியாத ஒரு தன்னாட்சித் தீர்வு என்பதா தமிழர்களாகிய நம்முடைய கூட்டுவிருப்பம் அல்லது கூட்டுப்பிரக்ஞையில் உள்ள எதிர்பார்ப்பு?.... இருக்கலாம்.

விடுதலைப்புலிகள் ஆயுதமேந்திப் போராடிக் கொண்டிருந்த காலத்தில், அப்படி ஒரு தனித்த தேசம், சிங்களவர்களின் சம்பந்தமேயில்லாத தனித்தமிழாட்சி சாத்தியமாகிவிடப் போகிறது என்ற நம்பிக்கையில் நம்மில் பெரும்பான்மையோர் இருந்திருக்கலாம்.

ஆனால் ஆயுதப் போராட்டம் தோல்வி கண்ட பிறகு, இங்கு இனியொரு ஆயுதப் போராட்டம் குறைந்தது முப்பது நாற்பது வருடங்களுக்கேனும் சாத்தியமேயில்லை என்று தெரிந்த பிறகு, இந்தத் தீவில் இரு தேசங்களை உருவாக்க எந்தவொரு வெளிநாடும் தயாரில்லை என்பது கண்கூடான பிறகு....

நம் எண்ணங்களை மறுசீரமைத்துக்கொண்டு, நமது மக்களைக் குறைந்தபட்சம் முன்னிருந்த நிலைக்காவது மீட்டு அதிலிருந்து மேலுயர்த்தும் சாத்தியபூர்வமான ஒரு தீர்வுக்காக, புதிய கோட்பாட்டை வடிவமைத்துக்கொள்ள வேண்டியதுதானே நியாயமாகச் சிந்திப்பவர்களின் வழியாக இருக்கமுடியும்?

நடக்காது என்று தெரிந்துவிட்ட பழைய அந்த நம்பிக்கைகளிலேயே மக்களைத் தக்கவைத்திருக்க விரும்புபவர்களும், அதையே இன்றும் தமிழ்மக்களின் கூட்டுப்பிரக்ஞை கூட்டுரிமை எண்ணம் என்று சொல்லி மக்களை பழைய மாயையில் மிதக்க விடுபவர்களும் யாராக இருக்க முடியும்?

அத்தகைய உடோப்பியா (Utopia) வில் மக்களை வைத்திருந்து பயனடைய விரும்புபவர்கள் ஒன்றில் தேர்தல் வெற்றிகளை மட்டுமே குறியாய்க் கொண்டு இதைச் செய்பவர்கள் அல்லது இதன் மூலம் தொடர்ந்த நிதியீட்டத்தை எங்கிருந்தோ பெற்றுக்கொள்ள முடிவதால் மக்களைப் பொய்யான நம்பிக்கைகளில் கட்டிப்போடுகிறார்கள் என்றுதான் கொள்ளத் தோன்றுகிறது.

தமிழ்மக்களின் அந்தக் கூட்டுரிமைக் கோரிக்கை என்பது எவ்வகைப்பட்ட தீர்வென்று அதை ஒரு திட்டவரைபாக இவர்களால் முன்வைக்க முடியாது. இவர்கள் வார்த்தைகளால் ஜல்லியடிக்கும் அந்த தமிழ்மக்களின் கூட்டுநினைப்பை எதைத் தந்து திருப்திப்படுத்தலாம் என்பதையும் இவர்கள் சாத்தியபூர்வ வழிமுறைகளைச் சொல்லி வரையறுக்க மாட்டார்கள்.

கழுதைக்கு முன்னால் கட்டித் தொங்கவிடப்பட்ட கரட்டைப் போல, இவர்கள் சொல்லும் தமிழ்மக்களின் கூட்டுப்பிரக்ஞையையும், நடைமுறைச் சாத்தியமான எந்தத் தீர்வாலும் எட்டித் தொட முடியாமல் தொடர்ந்துகொண்டேயிருப்பதில்தான் இவர்களுக்கு லாபம் போலும்!

இவர்கள் சொல்லும் "தமிழ்மக்களுக்குத் திருப்தியான தீர்வு" எப்படி வரும் என்று கேட்டால், "சர்வதேச அழுத்தத்தால் வரும்" என்று சொல்லிவிட்டுத் தேர்தல்களை ஒவ்வொன்றாய்க் கடந்து போய்க்கொண்டிருப்பார்கள் பதவிகளுக்காக உள்ள அரசியல்வாதிகள்.

மேலும் புத்திசாலித்தனமாக, பூகோள அரசியலாய்வு போல "சுத்த" முயல்பவர்கள், அமெரிக்க, சீன, இந்திய முரண்பாடு முற்றி வெடிக்கையில், இந்தப் பிராந்தியத்தில் இலங்கைத் தமிழர்களைத் தங்கள் கன்னைக்கு எடுக்க வருபவர்களால் தமிழர்களின் கூட்டு உரிமை நினைப்பிற்குத் திருப்தியான தீர்வு வரும் என்ற நப்பாசையில் காத்திருக்கச் சொல்கிறார்கள்.

எதுவோ அழுகி விழும், எடுத்துச் சாப்பிடலாம் என்று நரி பின் தொடர்ந்து போய்க் கொண்டிருந்ததைப் போலத்தான் இது! இதில் ஓர் அரசியல் தூரநோக்கோ, நம் சமூகத்தை வெற்றிகரமாக மேலெடுத்துச் செல்லவல்ல ராஜதந்திரமோ இல்லை.

வெறுமனே நப்பாசையுடன் காத்திருக்கச் சொல்லும் குடுகுடுப்பைக்காரனின் ஆருடம் போன்றதுதான் அது நடைமுறைச் சாத்தியமான வழிமுறை ஒன்றைச் சொல்வதற்கு, இவர்கள் அகமெல்லாம் ஊறியிருக்கும் மாற்று இனவெறுப்பும் குறுந்தேசியவாதமும் விடாது.

- ஆசிரியர்

# அதிகாரமற்ற நிலையில் பொலிஸ் மா அதிபர்

## கூறுகின்றார் மகி...

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபருக்கு எவ்வித அதிகாரமும் இல்லை எனவும் வேறு ஒரு பிரிவினர் திட்டமிட்டுள்ள பழிவாங்கும் செயற்பாடுகளையே அவர் மேற்கொண்டு வருகிறார் எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் தமக்கு எதிராக செய்யப்பட்ட அவமதிப்புத் தொடர்பில் எதிர்காலத்தில் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லவுள்ளதாகவும் அவர் கூறினார்.

பெலவத்தை, கொரகந்துவ விகாரையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் நேற்றுமுன்தினம் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று நாட்டில் அமைச்சர்களில் அரைவாசிப் பகுதியினர் சிறையில் உள்ளனர். கைது செய்யப்படுகின்றனர். அரச வாகனங்களை பயன்படுத்துவதாகக் கூறுகின்றனர்.

என்னுடன் சட்டத்தரணி ஒருவர் பேசினார். எனக்கு எதிராக வழக்கொன்றை தாக்கல் செய்ய சிலர் ஆயத்தமாகி வருவதாகக் கூறினார்.

நான் சொன்னேன், , என்ன? பீ அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எதற்காக? டுபாயில் உள்ள மேரி... ஹோட்டலின் உரிமையாளர் நான் என்றா?.

18 மில்லியன் திருடியதாக கூறி கடிதம் அனுப்புகின்றனர். இது எனக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் செயல். மனிதனின் வரலாற்றை... கொலை செய்யும் செயல்... எதிராக நாம் நீதிமன்றம் செல்லவுள்ளோம். இதனை நீதிமன்றத்தில் முன்கொண்டு செல்லவுள்ளோம்.

இன்று நாட்டில் பொலிஸ்மா அதிபருக்கு அதிகாரம் இல்லை. சட்டமா அதிபருக்கு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை. அவருடைய அதிகாரம் எங்கு உள்ளது என்றும் தெரியவில்லை.

வேறு சிலர் பழிவாங்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். இந்த பழிவாங்கல நடவடிக்கை தொடர்கிறது என்று மகிந்த ராஜபக்ஷ மேலும் கூறினார்.

# கொரியாவில் வேலைவாய்ப்பு தனிநபருக்கு அனுமதி இல்லை

(கொழும்பு)

கொரியாவில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதற்கு எந்தவொரு தனி நபருக்கும் முடியாது என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. கொரியாவில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாக பண மோசடி இடம்பெற்று வருவதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் பிரதிப் பணிப்பாளர் மங்கள ரந்தெனிய குறிப்பிட்டுள்ளார்.

பிரதி அமைச்சரின் அமைப்பாளர் எனக் கூறிக் கொண்டு கொரியாவில் வேலை பெற்றுத் தருவதாக தெரிவித்து பெண் ஒருவரிடம் நபர் ஒருவர் 83,000 ரூபா பணத்தினைப் பெற்று ஏமாற்றியுள்ளார். குறித்த நபரை கொழும்பு கோட்டை பொலிஸார் நேற்றைய தினம் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறும் நபர்களிடம் அவதானமாக இருக்குமாறு வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

# சட்டவிரோத கடலட்டை பிடிப்பு மீனவர் வாழ்வாதாரம் பாதிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, புதுமாத்தளன் பகுதியில் சட்டவிரோதமாக கடலட்டை, சங்கு ஆகியன பிடிக்கப்படுவதால் மீன்பிடி பாதிக்கப்பட்டுள்ளதாக புதுமாத்தளன் கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், எமது கடற்றொழிலாளர் சங்கத்தில் 179 கடற்றொழிலாளர்கள் இருக்கின்றனர். அவர்கள் தற்போது தொழில் செய்ய முடியாமல் இருக்கின்றனர்.

கடலட்டை, சங்கு பிடிப்பவர்களினால் எங்கள் மீன்பிடி பாதிக்கப்பட்டுள்ளது. 18 கடல் மைல் தொலைவிலேயே கடலட்டை, சங்கு பிடிக்க முடியும். ஆனால் அவர்கள் கரையில் வெளிச்சம் பாய்ச்சி பிடிக்கின்றனர்.

கடலட்டை, சங்கு பிடிப்பதற்கு அனுமதியில்லாத நிலையில் அரசியல் செல்வாக்கு மூலம் அனுமதி பெற்றுப் பிடிக்கின்றனர். தூரமாகச் சென்று நாங்கள் மீன்களைப் பிடிக்க முடியாது அங்கு இந்திய றோலர்களின் அத்துமீறல் காணப்படுகின்றது.

ஒவ்வொரு கடற்றொழிலாளியும் தலா 6 இலட்சம் பெறுமதியான கடற்றொழில் உபகரணங்களை வைத்திருந்து தொழில் செய்ய முடியாமல் இருக்கின்றனர். தங்களின் சொந்த தேவைக்குக்கூட மீன் பிடிக்க முடியாத நிலை காணப்படுவதாக அவர் கூறினார்.

# ஐ.தே.க.வின் சதிவலையில் சிக்கிக் கொள்ளாது சு.க.

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அணைவருக்கும் வேட்பு மனுக்கள் வழங்கப்படும் என கட்சியின் பொதுச் செயலாளர் அனுரபிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கும் வேட்பு மனுக்கள் வழங்கப்படும்.

வேட்பு மனு வழங்குவதற்கு வேறும் தகுதிகள் எதுவும் தேவையில்லை. சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்ட போதிலும் அவர்கள் குற்றவாளிகள் என நிரூபிக்கப்படவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியின் சதி வலையில் நாம் சிக்க மாட்டோம். ஐக்கிய தேசியக் கட்சியின் ரவி கருணாநாயக்கவிற்கு எதிராகவும் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அவருக்கு வேட்பு மனு வழங்கப்படுமா என ஐக்கிய தேசியக் கட்சியின் செய்தியாளர் சந்திப்பில் கேள்வி எழுப்புவீர்களா என ஊடகவியலாளர்களைப் பார்த்து அனுர பிரியதர்சன யாப்பா கேள்வி எழுப்பியுள்ளார்.

குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ள அரசியல்வாதிகளுக்கு வேட்பு மனு வழங்கப்படுமா என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வழக்குத் தொடரப்பட்டுள்ள ரவி கருணாநாயக்கவிற்கு வேட்பு மனு வழங்கப்படுமா என கேள்வி எழுப்பும் முதுகெலும்புடைய ஊடகவியலாளர்கள் எவரேனும் இருக்கின்றீர்களா என அவர் கடுமையான தொனியில் மேலும் கேள்வி எழுப்பியுள்ளார்.


# இரு பெண்கள் இருந்த வீட்டில் பெறுமதியான பொருட்கள் திருட்டு

(சாவகச்சேரி)

இரு பெண்கள் வீட்டில் உறங்கிய வேளையில் துணிகரமாக புகுந்த திருடர்கள் பெறுமதியான பொருட்களை திருடிச் சென்றுள்ளனர். இச்சம்பவம் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் சாவகச்சேரி தென்மட்டுவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ஆண்களின் துணையின்றி சகோதரிகள் இருவர் வீட்டின் வெளிப்புறத்தில் உறங்கிய வேளையில் ஆளரவம் கேட்டு எழுந்த பெண் வீட்டினுள் சென்று லைற்றுக்களை போட முயற்சித்த போது இலாவகமாக வீட்டினுள் நுழைந்த திருடர்கள் அவர்களை தாக்கிவிட்டு உடு புடவைகள், கைத்தொலைபேசி மற்றும் சிறிதளவு பணத்தையும் திருடிச் சென்றது மட்டுமல்லாமல் ஒரு பெண்ணின் கழுத்தை நெரித்ததுடன் பணத்தை வைத்திருக்கும் இடத்தை காண்பிக்க வேண்டும் என மிரட்டியுள்ளனர். (இ)

# உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் பெறும் செய்மதியும் பயன்களும்



**செய்மதி தொழில் நுட்பத்தினால் பல்வேறுபட்ட துறைகள் சிறப்பாக வளர்ச்சி அடைந்துள்ளன. விவசாயம், நீர்வளம், வானிலை, காலநிலை, காடுகள், பொறியியல் துறை, அனர்த்த இடர் பகுதி கண்காணிப்பு, படவரைகலை போன்றவற்றில் செய்மதி தொழில் நுட்பத்தால் துரித வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.**

**21 ஆம்** நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் மனித இனம் தொழில் நுட்பங்களின் செயற்பாடுகளோடு பின்னிப் பிணைந்தே வாழ்க்கையை நடாத்துகின்றனர். அந்த வகையில் மனிதனால் கண்டறிந்துகொள்ள முடியாத, மனிதனால் சென்று பார்வையிட முடியாத, கண்காணிக்க முடியாத விடயங்களையும் எளிதாக அணுகப் பயன் படும் ஒரு உயரிய தொழில் நுட்பமாக செய்மதி காணப்படுகிறது. எனவே செய்மதி, அதன் பயன்பாடுகள் என்பன தொடர்பாக சிறிய அறிவை ஏற்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆரம்ப காலங்களை காட்டிலும் இன்று அதிகரித்த சனத்தொகை விளைவாக மனித தேவை-களும் அதிகரித்துக் காணப்படுகிறது. ஆனால், வளங்களோ பற்றாக்குறையாக காணப்படுகிறது. இதனால் இருக்கும் வளங்களை மக்களிடையே சமபங்கீடு செய்யவும் விரைவான வளமதிப்பீட்டை மேற்கொள்ளவும் அதாவது எங்கே என்ன வளம் எவ்வளவு தரத்தில் காணப்படுகின்றது என்பதனை முகாமை செய்யவும், புதிய வளங்களை கண்டறிந்து வளப்பற்றாக்குறையை நீக்க வேண்டிய தேவையும் உள்ளது.

மனிதனின் தேவைகள் அதிகரிக்க அவனின் அறிவு வளர்ச்சியும் புவி மேற்பரப்பு அம்சங்களை கண்டறிய வேண்டும் என்ற ஆவலும் மனிதனை புதிய பாதையில் சிந்திக்க தூண்டிய தன் விளைவால் விமானங்கள் மூலமும் செய்மதிகள் மூலமும் சென்ற புவி மேற்பரப்பம் சங்களை படமாக்கும் உணர்திறன் வாய்ந்த கருவிகளின் கண்டு பிடிப்புக்கள் விருத்தியடைந்தன. இதனால் செய்மதி மூலம் ஓர் பரந்தளவான தகவல்களை மிக விரைவாக பெறமுடிகிறது. செய்மதி என்பது an obiect in an orbitis called a satellite இவ் அடிப்படையில் இன்று புவி மேற்பரப்பம்சங்கள் தொடர்பான தரவுகளை மிக விரைவாக பெறக்கூடிய ஒரு சாதனமாக செய்மதி காணப்படுகின்றது. உணர்திறன் கருவியை தாங்கும் அடித்தளம் ஆகவும் உணர்திறன் கருவியின் மூலம் பெறப்படும் படங்களை அல்லது தரவுகளை உரிய நிலையங்களுக்கு அனுப்பும் கருவியாக செய்மதி காணப்படுகிறது. அதாவது உணர்கருவி எல்லாம் புவி மேற்பரப்பு கதிர்ப்பு செய்யும் அல்லது பிரதிபலிக்கும் சக்தியை அளவீடு செய்வதாக அமைகிறது.

இவ்வாறு ஒரு குறித்த நிலப்பரப் பிலிருந்து வெளியேற்றும் இச் சக்தியை செய்மதியில் பொருத்தப்பட்டுள்ள சக்தி மிக்க உணர்கருவிகளால் கவரப்பட்டு இவை மீளவும் அதேயளவு தகவல் பெறும் நிலையங்களுக்கு செய்மதி ஊடாகஉரிய வடிவில் அனுப்பப்படுகிறது.

செய்மதி தொழில் நுட்பத்தினால் பல்வேறுபட்ட துறைகள் சிறப்பாக வளர்ச்சி அடைந்துள்ளன. விவசாயம், நீர்வளம், வானிலை, காலநிலை, காடுகள், பொறியியல் துறை, அனர்த்த இடர் பகுதி கண்காணிப்பு, பட-வரைகலை போன்றவற்றில் செய்மதி தொழில் நுட்பத்தால் துரித வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

தரைத்தோற்றப் படம் வரைவதற்கு தரைத்தோற்றம் தொடர்பான தகவல்களை செய்மதி துல்லியமாக வழங்குகிறது. இதன்மூலம் தரைத்தோற்றங்களுக்கிடையிலான சிறிய வேறுபாடு-களையும் அறியலாம். மண் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளவும் செய்மதி பயன்படுகிறது. பிரதேசத்திற்கு பிரதேசம் மண்ணிலுள்ள கனிப்பொருள் சேதனப்பொருட்கள் போன்றன வேறுபட்டளவில் காணப்படுவதால் மண் ஆய்வு முக்கியமானதாகிறது.

மண்வள படமாக்கலுக்கு உயர்திறனும் பயன்பாடும் மிக்க சாதனமாக செய்மதி உலகளாவிய ரீதியில் அங்கீகரிக் கப்பட்டது. நீர்வளம் தொடர்பான பிரயோகத்தினையும், செய்மதியூடாக மேற்கொள்ளலாம். புவியிலுள்ள தூய்மையான நீர் பற்றிய ஆய்வினை மேற்கொள்ள NASA Level I Atmosphere Archive and distribution System- My; Aqua என்ற செய்மதி அனுப்பப்பட்டது.

நிலப்பயன்பாடு பற்றிய தகவல்களைப் பெறுவதில் செய்மதி சிறப்பான தொழில்நுட்பமாக காணப்படுகிறது. வேகமாக அதிகரித்து வரும் சனத் தொகையால் நிலம் மீதான கேள்வி அதிகரித்து வருவதுடன் இருக்கும் நிலம் மீதான அழுத்தமும் அதிகரித்து வருகிறது. எனவே, நிலப்பயன்பாட்டுத் தகவல்களை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு ஏற்கனவேயுள்ள தகவல்களை பெறுவது மட்டுமன்றி, மாறுபடும் தன்மைகளை அறிந்து கொள்ளவும் செய்மதி ஆதாரமாக அமைகின்றது. நிலப்பயன்பாடுகளை படமாக்குவதில் பாரம்பரிய முறைகள் உழியச் செறிவானதாகவும் குறுகிய காலத்தில் ஏற்படும் மாற்றங்களை புலப்படுத்தாத தன்மையிலும் காணப்பட்டன. இக்குறைபாட்டை நீக்குவதற்காக நிலப்பயன்பாடு பற்றிய கற்கைக்கு Landsat, spot ஆகிய செய்மதிகள் பயன்படுகின்றன.

விவசாய பிரயோகத்தை நோக்கினால் பயிர்விளை பரப்பு மதிப்பீடு (Crop area estimation) பயிர் விளைவு எதிர்வு கூறல் (Crop producation fore casting) போன்ற பலவற்றிற்கு செய்மதி உதவு-கிறது உதாரணமாக Distant Fields of grain (தானிய செய்கை) தொடர்பான ஆய்வுகளுக்கு Nasa Land proces Distru-bited archive center- ஆல் Tesa என்ற செய்மதி மூலம் தகவல் பெறப்பட்டது.

புல் நிலம் மற்றும் காடுகள் தொடர்பான பிரயோகத்தில் காட்டுத்தீ வலயங்களை அடையாளம் காணல் கண்காணித்தல் ஆகியன மேற்கொள்ளப்படுகின்றன. காடுகளை சிறப்பான முறையில் பராமரிக்கவும் பாதுகாக்கவும் செய்மதி பயன்படுத்தப்படுகிறது. தற்போது எவ்வளவு காடுகள் உள்ளன? எனவும் முதலிருந்த காட்டுப்பரம்பலிலிருந்து தற்போது எப்படி வேறுபட்டிருக்கிறது? காடழிப்பு காடாக்கம் எங்கு நடந்தது? தீப்பற்றிக் கொண்டிருக்கும் காடுகளை அறிதல் போன்றவற்றை இதனூடாக மேற்கொள்ளலாம்.

உதாரணமாக காடுகளின் எல்லைகள் பற்றி அறிவதற்கு Nasa Modaps Level I Atmosphere Archive and Distrubution System MdJ Terra என்ற செய்மதி மூலம் ஆய்வை மேற்கொண்டது.

பொறியியல் துறையில் அணைக்கட்டு இடத்தெரிவு ஆற்றிற்கு குறுக்காக பாலம் அமைப்பதற்கான இடத்தெரிவு போன்றவை இதனூடாக மேற்கொள்ளலாம். பெற்றோலியம் நிலக்கரி போன்ற வளங்கள் வரையறுக்கப்பட்டதாக காணப்படுவதால் மற்றைய வளங்கள் பற்றிய ஆய்வு முக்கியமாகிறது.

இந்நிலையில் பிறேசிலில் காற்றுச் சக்தியின் பயன்பாட்டை அதிகரிக்கும் நோக்கில் அது தொடர்பான ஆய்வினை மேற்கொள்ள நாசாவின் Quick Scat என்ற செய்மதி ஆய்வினை மேற்கொண்டது.

புவிசரிதவியலிலும் செய்மதியின் பயன்பாடு காணப்படுகிறது. குறிப்பாக நில அதிர்வு (Seismic Hazard) புவிமேற்கு அனர்த்தம் (Geomorphic Hazard) எரிமலை (Volcanic Haxard) பனிக்கட்டி (Glaciological Hazard) போன்றவற்றின் நிலை பற்றியும் இதனூடாக அறியலாம்.

இன்று புவியின் மேற்பரப்பு செயற்பாடுகள் அசைவுகள் பற்றிய அறிவு அனைவராலும் வேண்டப்படுகிறது. அதன் மூலமே இயற்கை அனர்த்தங்களை முன்கூட்டியே உணர முடியும். புவிநடுக்கம் எரிமலை போன்றவை ஏற்கக்கூடிய இடங்களை துல்லியமாக அடையாளங்காண செய்மதி பயன்படுத்தப்படுகிறது. அவ்வகையில் புவிமேல் ஓட்டின் செயற்பாடுகள் பற்றிய தகவல்களைப் பெற நாசாவால் Gps Receivநசள தொழில் நுட்பங்கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அகலாங்கு நெட்டாங்கு அடிப்படையில் தகவல்கள் பெறப்பட்டது புவியின் அசைவு-கள் பற்றிய அறிவும் முக்கியமாகிறது. அதற்காக Terra செய்மதி அனுப்பப்பட்டு புவி அசைவுகள் பற்றிய தகவல் பெறப்பட்டது.

வளிமண்டலவியல் வானிலை எதிர்வு கூறல் காலநிலை பற்றிய கற்கை பூகோள மாற்றம் போன்றவை தொடர்பான சிறந்த தகவல்களைப் பெற செய்மதி பயன்படுத்தப்படுகிறது. வளிமண்டல மூலகங்களான வெப்பம், அமுக்கம் காற்றின் தற்போதைய நிலைகள் பற்றியும் அவற்றில் ஏற்படும் மாற்றங்கள் பற்றியும் முற்கூட் டியே அறியலாம். எங்கு வெப்பம் உயரும்? எங்கே பனி உருகிக் கொண்டிருக்கிறது போன்ற தகவல்கள் அறியலாம். இந்நுட்பமானது முகில்களை ஆய்வு செய்து மழையின் அளவை முற்கூட்டியே தெரிவிக்கும் வானிலை மற்றும் காலநிலை தொடர்பான பல தகவல்கள் இதனூடாக வழங்கப்பட்டுள்ளன.

உதாரணமாக வளிமண்டலவியல் தொடர்பான தகவலைப் பெறுவதற்கு Aqua என்ற செய்மதி ஏவப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது அவுஸ் ரேலியாவிற்கு மேலாக காணப்படும் aerosols தொடர்பான தகவல்களைப் பெற Terra என்ற செய்மதி பயன்படுத்தப்பட்டது.

இவ்வாறு செய்மதியின் பயன்பாடானது உலகளாவிய ரீதியில் ஒவ் வொரு துறையிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்து வருவதனால் இவை பற்றி அறிந்து கொள்வதும் அவசியமான-தாகிறது.

# 20 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக அமைச்சரவையில் இணக்கப்பாடு இல்லை

தேர்தல் முறை மாற்றம் தொடர்பான 20 ஆவ்து திருத்தச்சட்டம் தொடர்பாக நேற்று முன்தினம் இரவு நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இணக்கப்பாடு ஏற்படாததால், இதுதொடர்பான முடிவு அடுத்த வாரத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், 20 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை, சிறு மற்றும் சிறுபான்மையினக் கட்சிகள் முன்வைத்துள்ள திருத்த யோசனைகளுடன் ஜனாதிபதி அதிபர் மைத்திரிபால சிறிசேன சமர்ப்பித்தார். குறித்த திருத்தங்கள் 20 ஆவது திருத்தச் சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தினார்.

இந்தக் கூட்டத்தில், இணக்கப்பாடு ஏற்படாததால், ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஆறு பேர் கொண்ட குழு திருத்தங்களை உள்ளடக்கிய சட்டமூலத்தை தயாரித்த பின்னர், அதனை அமைச்சரவையில் சமர்ப்பிக்க இணக்கம் காணப்பட்டது.

இதனால், 20 ஆவது திருத்தச சட்ட விவகாரத்தை ஆராய் வதை அமைச்சரவை ஒரு வாரத்துக்கு ஒத்திவைத்துள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னதாக, இதுபற்றிய இறுதி முடிவு எடுக்கப்பட வாய்ப்பு இல்லை என்பதால், முன்னர் திட்டமிட்டவாறு எதிர்வரும் 19 ஆம் திகதி 20 ஆவது திருத்தச் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாது என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

## அரசாங்கத்தின் ஊழல் மோசடிகளுக்கும் முறைப்பாடு பதிவு செய்யப்படும்

### எச்சரிக்கும் கம்பன்பில



புதிய அரசாங்கத்தின் 100 நாட்கள் நிறைவடைந்து விட்டன. இனி எங்களுடைய 100 நாட்களாகும் என்று தெரிவித்துள்ள பிவிதுரு ஹெல உறுமயவின் பிரதான செயலாளர் உதய கம்பன் பில, கடந்த 100 நாட்களுக்குள் அரசாங்கத்தினால் செய்யப்பட்ட ஊழல் மோசடிகள் தொடர்பில் முறைப்பாடு செய்யப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முறைப்பாடு செய்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# தேர்தலில் தனித்து போட்டியிட ஜே.வி.பி. தீர்மானம்



எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஜே.வி.பி தனித்து போட்டியிடும் என கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகையொன்றுக்கு நேற்றுமுன்தினம் அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

எந்தவொரு அரசியல் கட்சியுடனும் கூட்டுச்சேரப் போவதில்லை.

தற்போதைய அரசாங்கம் 100 நாட்களுக்காக மட்டுமே உருவாக்கப்பட்டது.

புதிய அரசாங்கத்தின் ஆட்சிக் காலம் பூர்த்தியாகியுள்ளது.

புதிய அரசாங்கம் தொடர்ந்தும ஆட்சியை நடாத்துவது பொருத்தமானதாக அமையாது.

எனவே நாடாளுமன்றம் உடனடியாக கலைக்கப்பட்டு பொதுத் தேரதல் நடாத்தப்பட வேண்டியது அவசியமானது என அனுர குமார திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

# நாட்டின் பிரதமர் பதவி குறித்து மக்களே தீர்மானிக்க வேண்டும்

### ஜனாதிபதி தெரிவிப்பு



நாட்டில் தற்போதுள்ள அரசியல் முறைப்படி, பிரதமர் பதவி குறித்து மக்களே தீர்மானிக்க வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே, ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், மக்கள் பிரதிநிதிகளும் தேர்தல் காலம் வரும் வரை காத்திருக்காமல் மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமெனவும், கிராமங்கள் தோறும் சென்று அவர்களது பிரச்சினைகளை கேட்டறிய வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

வரையறைக்குட்பட்ட கலந்துரையாடல்களினால் நாட்டிற்கும் மக்களுக்கும் எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லையென தெரிவித்த ஜனாதிபதி, கட்சியினுள் கலந்துரையாடப்படுகின்ற விடயங்களில் அனைவரும் ஒப்பந்தமின்றி செயற்பட முன்வரவேண்டுமென கோரிக்கை விடுத்தார்.

புதிய அரசாங்கத்தின் 100 நாட்கள் நிறைவடைந்த பின்னரும் ரணில், பிரதமராக பதவி வகிப்பது சட்டவிரோதமானதென மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட கட்சிகள் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நாடாளுமன்ற ஆயுட்காலத்தை நீடிக்க புதிய சட்டத்தை எதிர்பார்க்கவில்லை

## என்கிறார் பிரதமர் ரணில்



நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் நெருங்கிக்கொண்டிருக்கின்றது என்பதனால் புதிய சட்டத்தை கொண்டுவந்து அதன் ஆயுட்காலத்தை இன்னும் நீடித்து கொள்வதற்கு எதிர்பார்க்கவில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சர்வதேச ஊடக அம்மைப்புகளின் பிரதிநிதிகளை அலரிமாளிகையில் வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் 100 நாட்கள் வேலைத்திட்டத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், அந்த சட்டமூலத்தை புதிய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கே எதிர்பார்த்திருப்பதாக பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஊடக சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். நாட்டின் கொள்கையாக ஊடக சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு பதிலாக புதிய சட்டத்தை கொண்டுவருவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகவும் அதில் பயங்கரவாதிகள் பிரச்சினை மட்டுமன்றி வெளிநாடுகளில் செயற்படும் பயங்கரவாத அமைப்புகள் இலங்கையை தளமாக பயன்படுத்துவதை தடுக்கும் வகையிலான சட்டங்கள் அதில் உள்ளடக்கப்படும் என்றும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு ஜனாதிபதியிடம் மங்கள கோரிக்கை

நாடாளுமன்றை கலைக்குமாறு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போதே அமைச்சர் இதனை கோரியுள்ளார்.

நர்டாளுமன்றத்தை கலைப்பதற்கு இனியும் காலம் தாமதிக்கக்கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தின்படி கடந்த மாதம் 23 ஆம் திகதியே நாடாளுமன்றத்தை கலைத்திருகக வேண்டும், எனினும் 19 ஆவது அரசியலமைப்பை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாகவே நாடாளுமன்றத்தை கலைப்பது தாமதாகி வந்தது.

இந்நிலையில் நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகளை மேலும் நீடிக்காது விரைவில் கலைக்க வேண்டும் என அமைச்சர் மங்கள சமரவீர கோரியுள்ளார்.

எவ்வாறாக இருந்த போதிலும் 20 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்பிக்காமல் நர்டாளுமன்றத்தை கலைக்கக்கூடாது என அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை தற்போதைய அரசாங்கத்தின் மீது காணப்பட்ட நம்பிக்கை சிறிது சிறிதாக வலுவிழந்து வருகின்றது என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிளாஸ்ரிக் தராசுகளை பயன்படுத்த தடை

பிளாஸ்ரிக் தராசுகளைப் பயன்படுத்தி வியாபாரம் செய்வதற்கு முற்றாக தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், அவ்வாறான தராசுகளை உபயோகிக்கும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நிறுத்தல் அளவைச் சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் பிரேமசிறி குமார தெரிவித்தார்.

இவ்வாறான தராசுகளில் நிறுக்கப்படும் உணவுப் பண்டங்களை வாங்குவதை தவிர்த்துக் கொள்ளுமாறு நுகர்வோரிடம் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

முத்திரையிடப்பட்ட தராசுகள் வர்த்தக நிலையங்களுக்கு விநியோகிக்கப்படும். அவற்றை கொள்வனவு செய்து பொருட்களை நிறுக்குமாறும் திணைக்களம் வர்த்தகர்களிடம் கோரியுள்ளது.

திணைக்களத்தின் பணிப்பை மீறி பிளாஸ்ரிக் தராசுகளை பயன்படுத்துவோர் தொடர்பில் 011-2587199 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முறையிடுமாறும் கோரப்பட்டுள்ளது.

# உள்ளூராட்சி சபைகள் கலைப்பு இன்னும் முடிவு எட்டப்படவில்லை

உள்ளூராட்சி சபைகளைக் கலைப்பது தொடர்பான எந்த முடிவையும் அரசாங்கம் இன்னமும் எடுக்கவில்லை என்று பொது நிர்வாக உள்ளூராட்சி மற்றும் ஜனநாயக நல்லாட்சி அமைச்சர் கருஜெய சூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 231 உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் இன்றுடன் முடிவுக்கு வரவுள்ளது.

மேலும் 65 உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம், வரும் யூலை 31 ஆம் திகதியுடனும், மேலும், 21 உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம், செப்ரெம்பர் 21 ஆம் திகதியுடனும், மேலும் 2 சபைகளின் பதவிக்காலம், செப்ரெம்பர் 30 ஆம் திகதியுடனும் முடிவுககு வருகிறது.

எல்லா உள்ளூராட்சி சபைகளினதும் பதவிக் காலம் வரும் ஒக்ரோபர் 30 ஆம் திகதியுடன் முடிவுக்கு வரவுள்ளது. என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, இன்றுடன் உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் முடிவடைந்த பின்னர், சிறப்பு ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்களின் கட்டுப்பாட்டில் அவை இயங்கும் என்று, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.



அதேவேளை, பெரும்பாலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டில் உள்ள உள்ளூராட்சி சபைகளை கலைத்து விட்டு, சிறப்பு ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்களின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு மகிந்த ராஜபக்ஷ தரப்பு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# குஞ்சுக்குளம் தொங்குபாலம் சேதம் ஆபத்தை எதிர்நோக்கும் மக்கள்

## புனரமைக்க ஆனந்தன் எம்.பி.கோரிக்கை



(மன்னார்)


மன்னார் குஞ்சுக்குளம் தொங்குபாலம் சேதமடைந்துள்ள நிலையில், அதனூடாக ஆபத்தான பயணத்தை சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை மேற்கொண்டு வருகின்றனர். குஞ்சுக்குளம் கிராமத்துக்கான ஒரேயொரு பிரதான தரைவழிப் பாதையை மேவி 10 அடிக்கும் மேலாக வெள்ளம் பாய்வதால், கிராம மக்கள் வேறுவழியின்றி சேதமடைந்துள்ள தொங்கு பாலத்தை தமது போக்குவரத்துக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

மல்வத்துஓயா ஆற்றுநீர் பெருக்கெடுத்து பாய்வதனால், நடைபெற்றுக்கொண்டிருந்த புதிய கொங்கிறீட் பாலத்தை அமைக்கும் கட்டுமானப்பணிகளும் தாமதமடைந்துள்ளன. ஆற்றுநீர் பெருக்கெடுத்து பாயாத காலங்களில் குறைந்தளவான தொழிலாளர்களைக் கொண்டு மந்தகதியில் கட்டுமானப்பணிகள் இடம்பெறுவதாலேயே பாலம் அமைக்கும் பணிகள் நீண்டகாலமாக முடிவுறுத்தப்படாமல் இருப்பதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

பாலத்தை அமைக்கும் பணியை பொறுப்பேற்றுள்ள ஒப்பந்ததாரர் ஆற்றுநீர் வற்றியிருக்கும் காலத்தில் ஆளணியினரை அதிகப்படுத்தி துரிதகதியில் கட்டுமானப்பணிகளை முடிவுறுத்த வேண்டும் என்றும் மக்கள் எதிர்பார்க்கின்றனர். குஞ்சுக்குளம் கிராமமானது பல நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த கிராமம் ஆகும். வருடா வருடம் மல்வத்து ஓயா பெருக்கெடுப்பதனால் இக்கிராமத்துக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டு உணவு, மருத்துவ வசதிகளின்றி இம்மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். கடந்த ஆண்டு இறுதியிலும் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக உலங்குவானூர்திகள் மூலமாக இக்கிராம மக்களுக்கு உணவுகள் விநியோகிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கட்டுமான பணியை பொறுப்பேற்றுள்ளவர்களும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் நீர் வற்றியிருக்கும் காலத்தில் விரைவாக வேலைகளை முடிவுறுத்தி பொதுமக்களின் இலகுவான போக்குவரத்துக்கு வழியேற்படுத்திக்கொடுக்க வேண்டும். அதற்கு முன்னர் மிகவும் சேதமடைந்துள்ள தொங்குபாலத்தை அவசரமாக திருத்தம் செய்து பொதுமக்களின் பாதுகாப்பான போக்குவரத்துக்கு வழிவகை செய்ய வேண்டும் என்றும் ஆனந்தன் எம்.பி.கோரியுள்ளார். கடந்த செவ்வாய்க்கிழமை குஞ்சுக்குளம் கிராமத்துக்கு சென்றிருந்தவேளை குறித்த விடயங்களை அவதானிக்க கூடியதாக இருந்ததாக ஆனந்தன் எம்.பி.குறிப்பிட்டார். (160)

# கட்டிளமைப் பிரச்சினை மாணவருக்கு செயலமர்வு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் ஏற்பாட்டில் மாவட்டச் செயலக தேசிய சிறுவர் பாதுகாப்பு சபைப் பிரிவால் கட்டிளமைப் பருவத்தில் மாணவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் ஆலோசனை வழங்கும் செயலமர்வு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலக தேசிய சிறுவர் பாதுகாப்பு சபை உத்தியோகத்தர் இராஜரட்ணம் செந்தூரன் வளவாளராகக் கலந்துகொண்டு கருத்துரைகள் வழங்கினார். இந்த வருடத்திலிருந்து உயர்தரம் கற்கவுள்ள மாணவர்கள் 140 பேர் இந்த செயலமர்வில் கலந்துகொண்டனர். கட்டிளமைப் பருவத்தில் ஏற்படும் பிரச்சினைகள், அதற்கு முகங்கொடுப்பது, அவற்றுக்கான தீர்வை பெற்றுக்கொள்வது போன்ற விடயங்கள் தொடர்பில் இதன்போது ஆலோசனை வழங்கப்பட்டது. பிரச்சினைகளை இலகுவாக கையாள்வதற்கான வழிமுறைகளும் இதன்போது கூறப்பட்டன. கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் இருந்து வருகை தந்த அதிகாரிகள் சிலர், உயர்தரத்தில் மாணவர்கள் பாடத் தெரிவுகளைச் செய்வதற்கான வழிமுறைகள் தொடர்பிலும் விளக்கமளித்தனர். (90)

# திருநாவுக்கரசு நாயனார் திருநாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவில் முன்னெடுத்த திருநாவுக்கரசு நாயனார் திருநாள் நிகழ்வுகளும் ஸ்ரீ கணேச அறநெறிப் பாடசாலையின் 14 ஆவது ஆண்டு பரிசில் நாளும் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கொட்டும் மழையின் மத்தியிலும் இடம்பெற்றன.

தகைசார் வாழ்நாள் பேராசிரியரும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத் தலைவருமாகிய பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வுகளில், நீர்வை மணி கு.தியாகராசக் குருக்கள் ஆசியுரையையும், இந்து காலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் மா.அனந்தலட்சுமி அம்மா வாழ்த்துரையையும் வழங்கினர்.

"மின்னம்பலத்தில் நாவுக்கரசர்" என்ற பொருளில் மறவன்புலவு க.சச்சிதானந்தத்தின் சிறப்புரை இடம்பெற்றது.

தொடர்ந்து பன்முக நோக்கில் நாவுக்கரசர் என்ற பொருளில் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் "பக்தி நோக்கில் நாவுக்கரசர்" என்ற பொருளில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் "இலக்கிய நோக்கில் நாவுக்கரசர்" என்ற பொருளில் விரிவுரையாளர் கு.பாலஷண்முகன் "பண்பாட்டு நோக்கில் நாவுக்கரசர்" என்ற பொருளில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் கருத்துரைகளை வழங்கினர்.

நாவுக்கரசரின் "திருத்தாண்டகம்" தேர்ந்தெடுக்கப்பட்ட பாடற்றொகுதி நூல் வெளியீடு செய்யப்பட்டது.

இதன் வெளியீட்டுரையை நூலின் பதிப்பாசிரியரும் அரசகேசரிப் பிள்ளையார் ஆலயப் பிரதமகுருவுமாகிய சா.சோமதேவக் குருக்கள் ஆற்றினார். நூலின் முதற்பிரதியை நீர்வேலி கந்தசுவாமி கோவிற் பிரதமகுரு இரா.சுவாமிநாதக் குருக்களும் சிறப்புப் பிரதியை தொழிலதிபர் பொ.உதயன் பெற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து அறநெறிப் பாடசாலைப் பரிசளிப்பும் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன நிகழ்வுகளை தியாக மயூரகிரிக் குருக்கள் முன்னிலைப்படுத்தினார்.

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவிலில் திருநாவுக்கரசு நாயனார் பெயரால் அறப்பணிகள் பல முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் இங்குள்ள மடம், திருக்குளம், கூபதீர்த்தம் என்பன திருநாவுக்கரசரின் பெயரைத் தாங்கியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (90,11,48)

# முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த மக்களுக்கு பிதிர்க்கடன் நிறைவேற்ற ஏற்பாடு



முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த மக்களின் ஆத்மா சாந்தி அடைய வேண்டி எதிர்வரும் 18 ஆம் திகதி கீரிமலை தீர்த்தக்கரையில் பிதிர்க்கடன் நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் காரைநகர் மக்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தி.துவாரகேஸ்வரன் தெரிவித்தார்.


இது தொடர்பில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த அரசினால் இவ்வாறான செயற்பாட்டுக்கு தடை விதிக்கப்பட்டிருந்ததுடன் குழப்பமும் விளைவிக்கப்பட்டிருந்தது. ஆனால் புதிய அரசினால் இதை ஒரு இறந்தவர்களை நினைவுகூரும் தினமாக அறிவித்ததையடுத்து இம்முறையும் இறந்த அனைவருக்கும் ஆத்மசாந்தி வேண்டி கீரிமலை தீர்த்தக்கரையில் பிதிர்க்கடன் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் மகா யாகமும், இடம்பெறுவதுடன் மஹா மோட்ஷ தீபம் ஏற்றப்படவுள்ளது. இதில் எல்லா மக்களும் கலந்து கொண்டு அனைத்து உயிர்களும் மோட்சமடைய பிரார்த்திக்க வேண்டும். 100 இற்கும் மேற்பட்ட அந்தணர்கள் மூலம் இது மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான சகல பொருட்களும் அனைவருக்கும் வழங்கப்படுவதுடன் போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ,25)

## முரசின் இன்றைய பலன்

(15.05.2015 வெள்ளிக்கிழமை)

மன்மத வருஷம் வைகாசி மாதம் 01 ஆம் திகதி.
துவாதசி - திதி. அமிர்தம் - யோகம்.
ரேவதி நட்சத்திரம் பி.இ.01.39 வரை. பின் அஸ்வினி.
இராகுகாலம் 10.23-11.53 வரை சுபநேரம் 05.53-07.23 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
குடும்பத்தில் கவின் நிலை எற்பட எதிர்ப்புணர்வைக் கைவிடல்.

**ரிஷபம்**
நிறைகுறைவான பொருளையிட்டு சச்சரவு தோன்றுதல்.

**மிதுனம்**
முன்னேற்றம் ஏற்பட நாடிவரும் அதிர்ஷ்டத்தைப் பற்றிப் பிடிக்கவும்.

**கடகம்**
மேலும் ஒரு கிளை நிறுவனம் திறக்க முற்பட்டதை பிதா விரும்பாமை.

**சிம்மம்**
அனுமதிதேடி அலைந்த வேளையில் தேகநலம் பாதிக்கப்படல்.

**கன்னி**
வழக்கத்திற்கு மாறாக மனைக்கு வந்த பிள்ளையுடன் தகராறு ஏற்படல்.

**துலாம்**
ஓடிச்சென்று வாகனத்தில் ஏற முற்பட்ட பொழுது மயிரிழையில் விபத்திலின்றும் தப்பிவிடல்.

**விருச்சிகம்**
புதியபதவியுடன் தலைமேல் பொறுப்புக்களும் சுமத்த நேரிடும்.

**தனுசு**
கடன்பட்டு கட்டமுடியாது அவதிப்பட நேரிடல்.

**மகரம்**
லீசிங் வாகனம் பறிமுதலாகலாம் என அச்சப்படல்.

**கும்பம்**
துணைவரின் வாழ்வில் சூழ்ந்துள்ள மர்மத்தை அறிய முடியாது பதகளிப்படைதல்.

**மீனம்**
வழுக்கல், சறுக்கலினால் தேக உறுப்பு பாதிக்கப்படும் நிலை தக்கவைத்தல்.

# மில்லரின் சிக்சரினால் பறிபோனது கண்பார்வை



ஐ.பி.எல். தொடரில் டேவிட் மில்லர் அடித்த பந்து தாக்கியதில் மைதானத்தில் பாதுகாப்பு பணியில் இருந்த பொலிஸ் கான்ஸ்டபிளின் கண் பார்வை பறிபோனது. கடந்த மே 9ஆம் திகதியுடன் ஈடன்கார்டன் மைதானத்தில் கொல்கத்தா அணி பஞ்சாப் அணியுடன் மோதியது.

இந்தப் போட்டியில் பஞ்சாப் அணி வீரர் டேவிட் மில்லர் 11 பந்தில் 27 ஓட்டங்களைக் குவித்தார. ரசலின் பந்தில் மில்லர் அடித்த சிக்சர் ஒன்று மைதா னத்தில் இருந்த அலோக் ஏய்ச் என்ற பொலிஸ் கான்ஸ்டபிளின் கண்ணை தாக்கியது. பந்து தாக்கிய வேகத்தில் அவரது வலது கண்ணில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

இதையடுத்து அலோக்கை மருத்துவமனையில் அனுமதித்தனர். அவரை பரிசோதித்த மருத்துவர்கள், அலோக் கண் பார்வை இழந்து விட்டதாகத் தெரிவித்தனர். தற்போது 53 வயதான அலோக், இணை பொலிஸ் கமிஷனருக்கு கார் டிரைவர் பணி செய்து வருபவர். இந்தச் சம்பவத்தையடுத்து அவருக்கு வேறுவிதமான பணி கொடுப்பது குறித்து கொல்கத்தா போலிஸ் அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் கங்குலி இந்தச் சம்பவம் பற்றி கூறியதாவது இது எதிர்பாராதவிதமாக நடந்த சம்பவம். ஆகையால் இதற்கு டேவிட் மில்லர் பொறுப்பாக மாட்டார் என்றார்.

பாதிக் கப்பட்ட அலோக்கின் சிகிச்சை மற்றும் அவரது குடும்பத்திற்கு முடிந்த உதவிகள் செய்யப்படும் என கொல்கத்தா பொலீஸ் இணை கமிஷனர் ராஜீவ் மிஷரா தெரிவித்துள்ளார்.

# சம்பியன்ஸ் லீக் கால்பந்து மட்ரிட்டின் கனவு தகர்ந்தது

(மட்ரிட்)

ஜுவென்டஸ் அணிக்கு எதிரான அரையிறுதியில் தோல்வி அடைந்து சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறும் வாய்ப்பை நடப்பு சம்பியன் ரியல் மட்ரிட் அணி இழந்தது.

ஐரோப்பிய கால்பந்து சங்கங்களின் கிளப் அணிகள் மோதும் சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரின் அரையிறுதியில் நடப்பு சம்பியன் ரியல் மட்ரிட், ஜுவென்டஸ் அணிகள் மோதின.

இத்தாலியில் நடந்த அரையிறுதியின் முதல் போட்டி ஜுவென்டஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் அணியை வீழ்த்தியது. ஸ்பெயினின் மட்ரிட் நகரில் நடந்த 2ஆவது போட்டியின் ஆட்டநேர முடிவில் 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது. ரியல் மட்ரிட் சார்பில் கிறிஸ்டியானோ ரொனால்டோ (23வது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். ஜுவென்டஸ் அணிக்கு மொராடா (57 ஆவது நிமிடம்) கைகொடுத்தார்.



இரண்டு போட்டிகளின் முடிவில் கோல் அடிப்படையில் முன்னிலை வகித்த ஜுவென்டஸ் அணி 3:2 என்ற கணக்கில் வெற்றி பெற்று, 8வது முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. முன்னதாக விளையாடிய 7 இறுதிப் போட்டியில், 2இல் (1985, 1996) வெற்றி பெற்று கோப்பை வென்றது. ஐந்தில் (1973, 1983, 1997, 1998, 2003) தோல்வி அடைந்து 2ஆவது இடம் பிடித்தது.

பைனல் எப்போது: ஜெர்மனியின் பெர்லின் நகரில் வரும் ஜுன் 6ல் நடக்கவுள்ள இறுதிப் போட்டியில், ஸ்பெயினின் பார்சிலோனா அணி, இத்தாலியின் ஜுவென்டஸ் அணியை எதிர்கொள்கிறது.

விளையாட்டு செய்திகள்

# 8 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியா-பாகிஸ்தான் தொடர்




8 ஆண்டுக்கு பின் இந்தியா-பாகிஸ்தான் கிரிக்கெட் தொடரை நடாத்த மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

கடைசியாக கடந்த 2007ஆம் ஆண்டு இந்தியா வந்த பாகிஸ்தான் அணி 5 ஒருநாள், 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்றது.

இதனையடுத்து மும்பையில் கடந்த 2008இல் நடந்த பயங்கரவாத தாக்குதலுக்கு பின்னர் இரு அணிகளுக்கு இடையிலான தொடர் எதுவும் நடக்கவில்லை. 2012 ஆம் ஆண்டு மட்டும் பாகிஸ்தான் அணி 3 போட்டிகள் மட்டும் கொண்ட ஒருநாள் தொடரில் அனுமதிக்கபட்டது.

8 ஆண்டுக்குப் பின், தற்போது தான் டிசம்பர் மாத இறுதியில் முழுத்தொடர் நடக்க இந்தியாவின் மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

ஆனால் போட்டியை எங்கு நடாத்துவது என்பதில் குழப்பம் நீடிக்கிறது.

# 7 தோல்விகளுக்குப் பின்னர் பஞ்சாப்பிற்கு ஆறுதல் வெற்றி



தொடர்ந்து ஏழு தோல்விக்குப பின், ஒரு வழியாக வெற்றி பெற்றது பஞ்சாப் அணி. நேற்று முன்தினம் நடந்த லீக் போட்டியில் பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சை 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

நேற்றுமுன்தினம் நடந்த லீக் போட்டியில் பெங்களூர், பஞ்சாப அணிகள் மோதின. சண்டிகரில் பெய்த மழை காரணமாக, போட்டி துவங்க 3 மணி நேரம் தாமதம் ஆனது.

நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூர் அணி கப்டன் கோலி, களத்தடுப்பைத் தேர்வு செய்தார

பஞ்சாப் அணிக்கு சகா, வோரா ஜோடி தொடக்கம் கொடுத்தது. ஸ்டார்க் வீசிய முதல் ஓவரில் 2 பவுண்டரி அடித்த சாகா, அரவிந்த் ஓவரில் 4 பவுண்டரி, ஒரு சிக்சர் விளாச, 2 ஓவரில் பஞ்சாப் அணி 34 ஓட்டங்கள் எடுத்தது.

இந்நிலையில் 12 பந்தில் 31 ஓட்டங்கள் எடுத்த சகா அவுட்டான பின, ஓட்ட எண்ணிக்கை வேகம் குறைந்தது. வோரா (11), மெக்ஸ்வெல் (10) என, இருவரையும் ஹரஷால், ஒரே ஓவரில் அவுட்டாக்கினார்.

சகால் ஓவரில் 2 சிக்சர் விளாசிய மில்லர் (14) அவரிடமே வீழ்ந்தார். கப்டன் பெய்லி (13), குர்கீரத் (2) ஏமாற்ற, பஞ்சாப் அணி 10 ஓவரில், 6 விக்கெட்டுக்கு 106 ஓட்டங்கள் எடுத்தது. அக்சர் படேல் (20), ரிஷி தவான் (1) அவுட்டாகாமல் இருந்தனர்.

பந்துவீச்சில் பட்டேன் சகால் இருவரும் தலா 2 விக்கெட்டை கைப்பற்றினார் அடுத்து களமிறங்கிய பெங்களூர் அணிக்கு கோலி, கெய்ல் ஜோடி சுமாரான தொடக்கம் தந்தது அனுரீத் ஓவரில் 2 பவுண்டரி, 1 சிக்சர் அடித்த கோலி (19) நீடிக்கவில்லை.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட கெய்ல் (17) அணியை கைவிட்டார். அபாயகரமான டிவிலியர்சும் 10 ரன்னுக்கு அவுட்டாக, பெங்களூர் அணியின் வெற்றி கேள்விக்குறியானது.

அடுத்து தினேஷ் கார்த்திக் (2), மன்தீப் சிங் (20), சர்பராஸ் கான் (4) என, வரிசையாக திரும்ப, பெங்களூர் அணி 10 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 84 ரன்கள் மட்டும் எடுத்து, 22 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் அக்சர் பட்டேல் அனுருத்சிங் தலா 2 விக்கெட்டை கைப்பற்றினார். ஆட்ட நாயனாக அக்சர்பட்டேல் தெரிவானார்.

இன்றைய ஆட்டம்
IPL
ஹைதராபாத்-பெங்களூர்
இடம்- ஹைதராபாத்
நேரம்- இரவு 8 மணி

# சர்வதேச ரென்னிஸ் காலிறுதியில் பாம்ப்ரி

சர்வதேச ரென்னிஸ் போட்டி உஸ்பெகிஸ்தானில் உள்ள சமார்கன்டில் நடந்து வருகிறது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடந்த 2ஆவது சுற்று ஆட்டத்தில் இந்திய வீரர் யுகி பாம்ப்ரி 1-6, 7-5, 7-6 என்ற செட் கணக்கில் செர்பியாவின் லாஸ்லோவைப் தோற்கடித்து கால இறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் இந்திய வீரர் சகெத் மைனெனி 6-3, 6-2 என்ற நேர்செட்டில் தகுதி சுற்று மூலம் நுழைந்த இங்கிலாந்து வீரர் லுக் பாம்பிரிட்ஜை 64 நிமிடத்தில் தோற்கடித்து கால் இறுதிக்குள் நுழைந்தார்



# இத்தாலி ஓப்பன் ரென்னிஸ் 3 ஆவது சுற்றில் நடால்

இத்தாலி ஓப்பன் ரென்னிஸ் போட்டி, ரோமில் நடந்து வருகிறது.

இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் உலகின் 7-ம் நிலை வீரர் ரபேல் நடால் (ஸ்பெயின்) 6-2, 6-0 என்ற நேர்செட்டில் துருக்கி வீரர் மார்செல் இஹானை தோற்கடித்து 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.



பெண்கள் ஒற்றையர் பிரிவில் 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் ருமேனியா வீராங்கனை சிமோனா ஹாலெப் 6-3, 6-0 என்ற நேர்செட்டில் அலிசன் ரிஸ்கியை (அமெரிக்கா) எளிதில் தோற்கடித்து 3ஆவது சுற்றுக்குள் நுழைந்தார்.

பெண்கள் இரட்டையர் பிரிவில் சானியா மிர்சா (இந்தியா)-மார்டினா ஹிங்கிஸ் (சுவிட்சர்லாந்து) 6-4, 6-1 என்ற நேர்செட்டில் ருமேனியாவின் கமெலியா பெகு-மோனிகா ஜோடியை எளிதில் வென்று கால் இறுதிக்கு முன்னேறியது.

# கூடைப்பந்தாட்டம் யாழ்.பல்கலை வெற்றி



கொக்குவில் மத்திய சன சமூக நிலையம் நடாத்தி வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யழ்.பல்கலை அணி வெற்றிபெற்றுள்ளது.

யாழ்.பல்கலை கூடைப்பந்தாட்ட அணியும் வட்டபிளை விளையாட்டுக்கழக அணியும் இறுதிப்போட்டியில் மோதின.

யாழ்.பல்க்லையின் ஆதிக்கம் ஆட்டத்தின் ஆரம்பம் முதலே காணப்பட்ட போதிலும் வட்டபிளை விளையாட்டுக்கழக அணியும் தமது திறனை வெளிப் படுத்தத் தவறவில்லை.

இரு அணிகளும் மாறிமாறிப் புள்ளிகள் பெற்றுவந்த வணணம் இருந்த போதிலும் ஆட்டநேர முடிவில் யாழ்.பல் கலை அணி 49:39 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

மேற்படி போட்டி நேற்று முன் தினம் புதன் கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. (93)

## பூப்பந்தாட்டப் போட்டி

# வலயச் சம்பியனானது பருத்தித்துறை மெதடிஸ்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான பூப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் 15,19, வயதுப் பிரிவுகளில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி முதலிடம் பெற்றுள்ளது.

15 வயதுப் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் வல்வை மகளிர் கல்லூரியும் மோதின.

இதில் முதல் சுற்றில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாட சாலையைச் சேர்ந்த ராகவியை எதிர்த்து வல்வை மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சந்திரா களமிறங்கினார். இதில் ஆட்ட நேர முடிவில் ராகவி 2:0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

இரண்டாம் சுற்றில் பருத்தித் துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவி லக்சனாவை எதிர்த்து வல்வை மகளிர் கல்லூரி சந்திரா களமிறங்கினார்.



இதில் லக்சனா 2:0 என்ற நேர் செட் கணக்கில் சந்திராவைத் தோற்கடித்தார் இதனால் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை முதலாமிடத்துக்குத் தெரிவானது.

இப்போட்டியில் மூன்றாம் இடத்தினை நெல்லியடி மத்திய கல்லூரி பெற்றுக்கொண்டது.

19 வயதுப் பரிவில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியை எதிர்த்து பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மோதியது.

இதில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த தர்சினியை எதிர்த்து உடுப்பிட்டி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சஜிந்தா களமிறங்கினார், மூன்று சுற்றுக்களைக் கொண்ட இப் போட்டியில் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த தர்சினி 2:1 என்ற நேர் செட் அடிப்படையில் வெற்றி பெற்றார்.

இதனால் பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தரப் பாடசாலை அணி வெற்றி பெற்று வலயச் சம்பியன் பட்டத்தைச் சுவீகரித்தது.

இப்போட்டியின் மூன்றாம் இடத்தை வல்வெட்டித்துறை மகளிர் கல்லூரி பெற்றுக் கொண்டது.

மேற்படி போட்டிகள் பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தரப்பாடசாலையில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (93)

# விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டியை எதிர்வரும் 29,30,31 ஆம் திகதிகளில் நடாத்தவுள்ளது.

இதில் பங்குகொள்ள விரும்பும் வீர.வீராங்கனைகள் விண்ணப் பப்படிவங்களை யாழ்.மத்திய கல்லூரியின் உடற்பயிற்சி ஆசிரியரும் யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்க செயலாளருமாகிய சொ.சுகிர்தனிடம் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி மெய்வல்லுநர் போட்டிகள் 14,15,16,18,20,23 வயதுப்பிரிவினருக்கு நடாத் தப்படவுள்ளது. (93)

# தங்க வேட்டை





டோஹாவில் நடைபெற்ற முதலாவது ஆசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகளில் பெண்களுக்கான 400 மீற்றர் சட்டவேலி ஓட்டத்தில் யாமனி துலாஞ்சலி தங்கப் பதக்கம் பெற்றுள்ளார்.

டோஹா விளையாட்டரங்கில் இந்தப் போட்டி நடைபெற்றது. இதில் அம்பகமுவை பிரதேசத்தைச் சேர்ந்த யாமனி துலாஞ்சலி நிமிடம் 01.27. செக்கன்களில் நிறைவு செய்து தங்கப் பதக்கத்தை வென்று இலங்கைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

# சங்காவுக்கு அவமதிப்பு கொழும்பில் ஆர்ப்பாட்டம்





பிரித்தானிய சர்வதேச விமான நிலையத்தில் இலங்கை நட்சத்திர கிரிக்கெட் வீரர் குமார் சங்கக்காரவை அதிகாரிகள் அவமதித்ததாக தெரிவித்து கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடாத்தப்படவுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி நடாத்தப் படவுள்ளதாக நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப்பின் இணைப பாளர் அசேல சம்பத் தெரிவித்தார்.

கடந்த 8ஆம் திகதி ஹீத்ரோ விமான நிலையத்திற்குள் பிரவேசித்தபோது குடிவரவு அதிகாரி ஒருவர் தன்னுடன மரியாதைக் குறைந்தவாறு நடந்து கொண்டதாக குமார் சங்கக்கார தனது டுவிட்டர் தளத்தில் கடந்த 9ஆம் திகதி பதிவிட்டிருந்தார்.

லண்டனுக்கு பல தடவைகள் சென்றிருந்த போதிலும் இம் முறையே இவ்வாறான சங்கடமான சம்பவம் இடம்பெற்றிருந்ததாகவும் அவர் தனது தளத்தில் சுட்டிக்காட்டியிருந்தார்.

எவ்வாறாயினும் குமார சங்கக்கார இது குறித்து முறையிட்டால் விசாரணை நடத்தப்படும் என்று பிரித்தானிய உள் விவகார அமைச்சும், இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தின் நிர்வாகிகள் தெரிவு அடுத்த ஜனவரியில்

## அமைச்சர் நவீன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும் 2016 ஜனவரி மாதத் திற்கு முன்னர் நடாத்தப்படும் என விளையாட்டுத்துறை அமைச்சர் நவீன் திசாநாயக்க தெரிவித்தார்.

இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தின் முன்னாள் நிர்வாக சபை உறுப்பினர்களுடன விளையாட்டுத்துறை அமைச்சில் கடந்த செவ் வாய்க்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அமைச்சர் திசாநாயக்க இதனைக் குறிப்பிட்டார்.

இந்த கலந்துரையாடலில் இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தின் முன்னாள் நிர்வாகிகளான உபாலி தர்மதாச, நிஷாந்த் ரணதுங்க, மொஹான் டி சில்வா, அசங்க செனவிரட்ன, அஜித்த பஸ்க்வால் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடல் சுமுகமாக நடைபெற்றதுடன், கிரிக்கெட் விளையாட்டுத் துறையை ஊக்குவிக்கும் பொருட்டு விளையாட்டுத்துறை அமைச்சருக்கு பூரண ஆதரவு வழங்கத் தயார் என முன்னாள் அதிகாரிகள் உறுதி வழங்கியதாக விளையாட்டுத்துறை அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

முன்னாள் அதிகாரிகள் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அமைச்சர் நவீன் திசாநாயக்க, சர்வதேச கிரிக்கெட் பேரவையுடனான விடயம் சுமுகமாகவும் இணக்கப்பாட்டுடனும் தீர்க்கப்படும் என்றார்.

இந்த விடயம் தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் பேரவை யின் பிரதம நிறைவேற்று அதிகாரி டேவ் றிச்சர்ட்சன், பொதுச் சபை உறுப்பினர்கள் ஆகியோரை டுபாய் அலுவலகத்தில் சந்தித்து விளக்கிக் கூறியதாகவும் அவர்கள் இந்த விடயங்களை சீர்தூக்கிப் பார்ப்பதாக உறுதி வழங்கியதாகவும அமைச்சர் கூறினார்.

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் செயற்றிறன்மிக்க உறுப்பு நாடாக இலங்கை இயங்கி வருவதாகவும் குறிப்பிட்ட அமைச்சர், இடைக்கால நிர்வாக சபையின் அவசியத்தை எடுத்துக் கூறியதுடன் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் மற்றும் நிர்வாகிகள் தெரிவு என்பன ஜனவரி மாதம் நடைபெறும் என்றார்.

கடந்த கால சபை உறுப்பினர்கள் மோசடிகளில் ஈடுபட்டதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக பேசிய அமைச்சர், இந்த விடயம் தொடர்பாக விசாரணைகளை நடத்துவதற்கு குழு ஒன்று நியமிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் இடைக்கால நிர்வாக சபையின் செயலாளர் பிரகாஷ் ஷாப்டர், விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கே.டி.எஸ். ருவன்சந்தர, சட்ட மாஅதிபர் ஜனப்ரித் பெர்னாண்டோ ஆகியோரும் கலந்து கொண்டனர்

# காலநிலை சீரடையும் வரை போட்டிகள் இடம்பெறாது

(யாழ்ப்பாணம்)

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடாத்தும் யாழ் மாவட்ட ரீதியான 7 நபர் கொண்ட மாபெரும் லீக் முறையிலான உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி மழை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது.

கால நிலை முற்றாக சீர் அடையும் மறு அறிவித்தல் வரும் வரை போட்டிகள் இடம்பெறமாட்டாது என கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் அறிவித்துள்ளது



# மஹிந்த வேறு வழி பார்த்துக் கொள்ள வேண்டி வரும்!

எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையிலிருந்து.

மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் ஆவார். மஹிந்த ராஜபக்ஷ அக் கட்சியின் போஷகர்களில் ஒருவர். ஆனால், ஒரு கட்சியின் தலைவர்கள்



இருவரிடையே நடைபெறும் பேச்சுவார்த்தையாக கடந்த புதன்கிழமைப் பேச்சுவார்த்தை நடைபெறவில்லை.

எதிரிகளாக இருக்கும் இரு குழுக்களிடையே நடைபெறும் பேச்சுவார்த்தையாகவே அது நடைபெற்றது.

உண்மையிலேயே ஒரே கட்சியில் இருந்த போதிலும் அவ்விரு சாராரும் எதிரிகளே. மஹிந்தவை தோற்கடித்தே மைத்திரிபால ஜனவரி 8ஆம் திகதி ஜனாதிபதியாக பதவிக்கு வந்தார்.

இரு சாராருக்கும் இடையிலான அந்தப் பகை தேர்தலுக்குப் பின்னரும் வளர்ந்து வந்துள்ளது. மஹிந்த இனி ஜனாதிபதியாக வர முடியாத வகையில் மைத்திரிபால, அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை நிறைவேற்றிக் கொண்டார்.

அரசாங்கத்தின் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளின் கீழ் மஹிந்தவின் ஆதரவாளர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மஹிந்தவும் சும்மா இருக்கவில்லை. அவரும் நாள் தோறும் கூட்டங்களை நடாத்தி மைத்திரிபாலவின் ஆட்சிக்கு எதிராக மக்களை தூண்டுகிறார்.

இந்தப் பின்னணியில் தான் மைத்திரிபால-மஹிந்த பேச்சுவார்த்தை நடைபெற்றது. ஒரு சாராரும் நேர்மையாக பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவில்லை.

ராஜபக்ஷ ஸ்ரீ.ல.சு.க.வுக்குள் மிகவும் பிரபல்யம் வாய்ந்தவர் என்பதை மைத்திரிபால அறிந்துள்ளார். எனவே கட்சிக் காரர்களை பகைத்துக் கொள்ள அவர் விரும்பவில்லை. கட்சியின் சிலர் மஹிந்தவுடன் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்த போது அதனை எடுத்த எடுப்பில் நிராகரிக்க மைத்திரபால முற்படாததற்குக் காரணம் அதுவே.

ஆனால், ராஜபக்ஷவுக்கு கட்சிக்குள் மைத்திரிபால பெரிதாக இடம் கொடுக்கப் போவதில்லை என்பதும் தெளிவாகத் தெரிகிறது. இந்தப் பேச்சுவார்த்தைக்கு சில நாட்களுக்கு முன்னர் ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் சிலர் ஜனாதிபதியை சந்தித்து எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக களத்தில் இறக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

ராஜபக்ஷவுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுக்கள் இருப்பதனால் அதைச் செய்ய முடியாது என ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

இனி ராஜபக்ஷ பெறக்கூடிய அதி உயர் பதவி பிரதமர் பதவியே. அதற்கும் மைத்திரிபால வாய்ப்பு அளிக்காவிட்டால் அதுவும் வெறும் கனவாகிவிடும்.

உண்மையிலேயே ஸ்ரீ.ல.சு.க ஐக்கியப்பட்டால் ஐ.தே.க பெரும் நெருக்கடியை சந்திக்கும். ஏனெனில் நீண்ட காலமாக தொடர்ந்து தேர்தல்களில் தோல்வியடைந்து வந்த காரணத்தினால் ஐ.தே.க.வில் அமைப்பு ரீதியான பிரச்சினைகள் இருக்கின்றன. அதனால் ஸ்ரீ.ல.சு.க ஐக்கியப்பட்டால் ஐ.தே. கட்சி வெற்றி பெறுவது கடினம்.

ஆனால், மைத்திரிபால மஹிந்தவை உள்வாங்க மாட்டார் என்பதற்கே கூடுதலான அறிகுறிகள் தென்படுகின்றன. மஹிந்த மீண்டும் அரசியல் ரீதியாக பலம் பெறுவதானது தமது அழிவுக்கு வழி சமைத்துக் கொள்வதாகும் என்பதை மைத்திரிபால அறிந்திருக்கிறார்.

அதனால் தான் மஹிந்தவை சந்திப்பதற்கு முதல் நாள் அந்த சந்திப்பைப் பற்றிய அறிக்கை ஒன்றில் தமக்கு வாக்களித்த 63 இலட்சம் வாக்காளர்களின் நம்பிக்கைக்கு துரோகமிழைப்பதில்லை என ஜனாதிபதி கூறியிருந்தார்.

அவருக்கு வாக்களித்தவர்களில் பெரும்பான்மையினர் ஐ.தே.க ஆதரவாளர்களே. அந்த ஐ.தே.க ஆதரவாளர்களின் நம்பிக்கைக்கு துரோகமிழைப்பதில்லை என்றே அவர் கூறுகிறார்.

மறுபுறத்தில் மஹிந்தவை உள்வாங்கினால் ஸ்ரீ.ல.சு.க.வுக்கு சிறுபான்மையினரின் வாக்குகள் கிடைக்காது என அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கூறியிருந்தார்.

உண்மையிலேயே ஸ்ரீ.ல.சு.க. எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது சிறுபான்மை மக்களின் வாக்குகளை பெறுவதில் பெரும் சவாலை எதிர்நோக்கும்.

ஏனெனில், அவர்கள் கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது ஐ.தே.க.வுடன் சேர்ந்து மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தனர்.

பொதுத் தேர்தலின் போது ஐ.தே.க ஒரு பக்கமும் மைத்திரிபால மற்றொரு பக்கமுமாக நின்று போட்டியிட்டால் எந்தக் கட்சியை ஆதரிப்பது என்ற நிலை பல சிறுபான்மையினருக்கு ஏற்படலாம்.

ஆனால், ஸ்ரீ.ல.சு.க.இற்குள் மஹிந்த உள்வாங்கப்பட்டால் அவர்கள் எவ்வித தயக்கமுமின்றி ஐ.தே.க.வை ஆதரிப்பார்கள்.

தாம் சிறுபான்மையினரிடமிருந்து அந்நியப்பட்டுவிட்டோம் என்பதை மஹிந்தவும் இப்போது உணர்ந்துள்ளார் போலும்.

எனவே தான், தாம் நோர்வே மற்றும் அமெரிக்க சதியொன்றின் காரணமாக தோல்வியடைந்ததாகவும் பொது பல சேனாவின் மூலமே அந்த சதி நடைமுறைப்படுத்தப் பட்டதாகவும் அண்மையில் அவர் இந்திய ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியொன்றில் கூறியிருந்தார்.

கடந்த வாரம் அவர் தம்மை ஆதரிக்கும் ஒரு சில முஸ்லிம்களை அழைத்துப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். இவ்வாறு கூட்டம் நடாத்தினாலும் இந்நாட்டு சிறுபான்மை மக்கள் அவரை இந்த விடயத்தில் நம்புவார்களா? என்பது சந்தேகமே.

ஏனெனில், அவர் சதி என்றெல்லாம் கூறிய போதிலும் அவரது ஆட்சிக் காலத்தில் சிறுபான்மை மக்கள் பாதிக்கப்படும் போது தாம் நடந்து கொண்ட முறை பிழையானது என்பதை அவர் எங்கும் இன்னமும் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஸ்ரீ.ல.சு.க.இற்குள் பிரச்சினை இல்லாவிட்டாலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் மஹிந்தவை உள்வாங்க ஜனாதிபதிக்கு இடமளிப்பார்களா என்பதும் கேள்விக்குறியே.

எனவே, மஹிந்த வேறு வழி பார்த்துக் கொள்ள வேண்டி வரும் என்றே தெரிகிறது. இது விமல் போன்றோர்களுக்கு சாதகமான நிலைமையாகும் ஏனெனில் மஹிந்தவை தம்மோடு நேரடியாக இணைத்துக் கொண்டு மஹிந்த ஆதரவாளர்களின் வாக்குகளை தம் வசம் இழுத்துக் கொள்ள அவர்களுக்கு அதனால் வாய்ப்பு கிடைக்கும்.

# தனியும் தானும் அத் தையலும் ஆயினான்

- சிவா கிருஷ்ணமூர்த்தி.

1

தமிழில் ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான கம்பராமாயணப் பாடல்களை வைத்து நிறைய புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன, பட்டிமன்றங்கள், விவாதங்கள் நடைபெறுகின்றன, திரைப்படப் பாடல்கள் எழுதப்பட்டுக் கொண்டே இருக்கின்றன குறிப்பிட்ட கம்பராமாயண பாடல் வரிகளும் கிட்டத்தட்ட தேய்வழக்கு (cliche) என்று சொல்லக்கூடிய அளவிற்கு திருக்குறள் போல நம்மிடையே புழங்கிக் கொண்டிருக்கின்றன.

தினந்தோறும் அதே சூரியன், சந்திரன்தான், மேகங்கள்தான், ஆனால் புதிது புதிதாக சலிக்கமாட்டாமல்.கம்பராமாயணத்திலும் இருளும் சூரிய, சந்திர உதயங்களும் அஸ்தமனங்களும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. ஒவ்வொரு முறை குறிப்பிடப்படும் போதும் அந்த வர்ணணைகளும் அன்றைய தினத்தைப் போல் புதிதாகவே இருக்கின்றன.

நிலக் காட்சிகள், இயற்கை வருணனைகள் இங்கிலாந்தின் lush and green போல காப்பியத்தில் எங்கும் நிறைந்திருக்கின்றன.

இவற்றில் சிலவற்றைப் பற்றியாவது பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

**இருள்:**

விசுவாமித்திர முனிவரும் இராமனும் இலட்சுமணனும் பொன் மதில்கள் சூழ்ந்த மிதிலை நகருக்குள் போகிறார்கள்.

நகர வீதிகளில் பல்வேறு காட்சிகள் காண்கிறார்கள். பின் அரண்மனையை நெருங்குகிறார்கள். கன்னி மாடத்தில் கொல்லும் வேலும் கூற்றவனையும் என்ன என்று கேட்கும் மதர்க்கும் விழிகள் கொண்ட சீதை நிற்கிறாள்.



இராமனும் சீதையும் ஒருவரையொருவர் அடையாளம் கண்டு கொள்ளும் - அண்ணலும் நோக்கி அவளும் நோக்கும், பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ - பாடல் வரிகள் மிகவும் புகழ் பெற்றவை எனவே இந்த வரிகளைப் பற்றி நான் இங்கு குறிப்பிடப்போவதில்லை.

பின் நின்றவர் நடந்து போய் ஜனக அரசனைக் கண்டு, உபசரிக்கப்பட்டு ஓர் மாட மாளிகையில் தங்க வைக்கப்படுகின்றனர்.

அன்றிரவு விசுவாமித்திர முனிவரும் தம்பி இலட்சுமணனும் அவரவர்க்கு அளிக்கப்பட்டிருந்த படுக்கையறைகளுக்கு போனவுடன், தனது அறையில் தனியாக இருக்கிறான், இருட்கனி போன்ற இராமன்.

**முனியும் தம்பியும் போய், முறையால் தமக்கு இனிய பள்ளிகள் எய்தியபின்’**

இராமனைத் தனிமை சூழ்ந்திருக்கிறது. இருள் சூழ்ந்திருக்கிறது. திங்கள் சூழ்ந்திருக்கிறது. பின் சீதை நினைவு சூழ்ந்திருக்கிறது.

தன்னை சூழ்ந்தவை எல்லாமாகவே இராமன் ஆகிறான். தனிமை, இரவு, திங்கள் அப்புறம் தையல்

**‘இருள்**
**கனியும் போல்பவன் கங்குலும் திங்களும்**
**தனியும் தானும் அத் தையலும் ஆயினான்**

மாடத்தில் தெரிகின்ற திங்களாக ஆகிறான்.

அந்த இரவாகிறான்.

அங்கு சூழ்ந்திருக்கும் தனிமையாக ஆகிறான்.

பின் அந்தத் தையலாக, சீதையாக அவள் நினைவாகவே ஆகிவிடுகிறான்.

இராமன் அங்கிருந்த எல்லாமாகவே ஆகிறான்.

பின்னிரவில் மாளிகையில் ஒவ்வொரு விளக்காக அணைக்கப்பட்டு வருவதைப் போல் படிப்படியாக இரவாக, திங்களாக, அந்த தனிமையில் கலந்து தனிமையாக மாறி பின்னர் கடைசி சுவிட்சும் அணைக்கப்பட்டு தன்னுணர்வு இன்றி சீதையின் நினைவாகவே, மாறிவிடுகிறான் இராமன்.



# பிராவோ நடனம்!

மேற்கிந்திய தீவு அணியின் ட்வைன் பிராவோ சிறந்த பாடகர், இசை அமைப்பாளர், நடனக் கலைஞர் என பன்முக திறமை கொண்டவர். நடிப்பிலும் ஆர்வம் கொண்ட பிராவோ, கடந்த முறை ஐ.பி.எல்.சீசனுக்காக சென்னை வந்திருந்த போது "உலா" பட படப்பிடிப்பில் கலந்து கொண்டார். இவருக்காக உருவாக்கப்பட்ட பாடலுக்கு நடனமாடினார். இந்த முறை ஐ.பி.எல். சீசனுக்காக சென்னை வந்திருக்கும் பிராவோ "சலோ சலோ" எனும் இசைப் பேழையை வெளியிட்டுள்ளார். கரீபியன் இசையை மேற்கத்திய இசையோடு கலந்து, இந்திய இசையையும் இணைத்து இந்த இசைப்பேழை தயாரிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் சென்னையில் நடந்த வெளியீட்டு விழாவில் சென்னை அணியின் கப்டன் தோனி உள்ளிட்ட வீரர்கள் கலந்து கொண்டனர். சென்னையில் உலக தரத்திலான நடனப்பள்ளியை தொடங்குவதை தன் எதிர்கால திட்டமாக அறிவித்துள்ளார் பிராவோ.

# ரஜனியை இயக்கும் ரஞ்சித்!



"லிங்கா"வின் தோல்வி, அதன் பின்னான சர்ச்சைகள், பேச்சுவார்த்தைகள் என ரஜனியின் வட்டாரம் தொடர் சலசலப்புகளைச் சந்திக்க, இனி வரும் படங்கள் சற்று வித்தியாசமாக இருக்க வேண்டும் என நண்பர்களிடம் மனம் விட்டு பேசி வந்தார் ரஜினி. இருந்தும், ஷங்கர் போன்ற ஆளுமைகள்தான் ரஜனியின் சந்தைமதிப்புக்கு ஏற்றாற் போல் படம் கொடுக்க முடியும் என்பது பலரின் கருத்தாக இருந்தது. ரசிகர்களும் அதை எதிர்பார்த்திருந்த வேளையில், "அட்டக் கத்தி", "மெட்ராஸ்" படங்களை இயக்கி தமிழ் சினிமாவில் தனி முத்திரை பெற்ற பா.ரஞ்சித்தை தனது அடுத்த பட இயக்குநராக தேர்வு செய்திருக்கிறார் ரஜனி. நட்சத்திர பிம்பத்தை தவிர்த்து வெகு ஜன திரைப்படங்கள்தான் இப்போதைய சினிமா என்பதை உணர்ந்ததாலேயே ரஜனி இந்த முடிவுக்கு வந்துள்ளதாக தெரிகிறது. ரஞ்சித்திடம் கதையின் லைன் கேட்ட ரஜனி, "இதை இன்னும் விரிவாக கொண்டு வாருங்கள்" என்று சொல்லியிருக்கிறார். காத்திருந்தது போல முழுக்கதையும் சொல்லப்பட, அந்த இடத்திலேயே 45 நாட்கள் கொடுத்து படப்பிடிப்பை ஆரம்பிக்கச் சொல்லியுள்ளார் ரஜனி.

அந்த இரவு நம் கண்ணெதிரில் விரிந்து படிப்படியாக ஒவ்வொன்றாக ஆகி வருவது அழகான காட்சி. கடைசியில் ஒன்று மட்டுமே எல்லாமாகவே இருக்கிறது.

ஒரு பாடல் தரும் வாசிப்பு அனுபவத்தை வாசகர்கள் நெருக்கமாக உணரும்போது அது அவரவருக்கான அனுபவமாக ஆகிவிடுகிறது. ஒரே app-தான், ஆனால் அவரவருக்கான தனித் தனி session!

**முனியும் தம்பியும் போய். முறையால் தமக்கு**
**இனிய பள்ளிகள் எய்தியபின். இருட்**
**கனியும் போல்பவன் கங்குலும் திங்களும்.**
**தனியும் தானும் அத் தையலும் ஆயினான்.**

இந்தப் பாடலில் எனது அடிக்கோடு வார்த்தை:

இருட்கனி போன்ற இராமன் - கறுத்த, ஆனால் சுவை மிக்க கனி! விளக்கம் தேவையில்லை-இருளின் திரட்சி.

இருள் மெல்ல மெல்ல வந்து உலகின் மேல் கவியத்தொடங்க, சீதை வருந்தி புலம்பிக்கொண்டு இருக்கிறாள்.

இருள் மெல்ல வந்து உலகைத் தன்னுள் செலுத்தி தனதாக மாற்றிக்கொண்டிருக்கிறது.

ஆலகால விஷம் உலகம் முழுவதும் பரவுவதைப் போன்று". சற்றே நிறுத்தி யோசித்தாலே இருள் பூமிப்பந்தின் ஒரு பக்கத்தை விரைவாக விழுங்கிக் கொண்டிருப்பதை விஷம் பரவும் சித்திரமாக கண்டுகொள்ள முடிகிறது.

கருங்கடல் கிளர்ந்து எழுந்ததைப் போன்று.

**ஆலம் உலகில் பரந்ததுவேர்**
**ஆழி கிளர்ந்ததோ, அவர் தம்**
**நீல நிறத்தை எல்லோரும்**
**நினைக்க அதுவாய் நிரம்பியதோ,**
**காலன் நிறத்தை அஞ்சனத்தில்**
**கலந்து குழைத்துக் காயத்தின்**
**மேலும் நிலத்தும் மெழுகியதோ,**
**விளைக்கும் இருள் ஆய் விளைந்தவே.**

**நீல நிற ராமனை எல்லாரும் நினைக்க,** நினைக்க உலகமே கருநீல நிறமாக மாறிவிடுகிறது. அதுவும் எப்படி? எமனது கருநிறத்தை மையோடு குழைத்து வானத்தின் மீதும் பூமியின் மீதும் பூசியது போன்று.

**(மீதி நாளை)**

# ஊரும் உலகமும்

## அமைச்சரிடம் விளக்கம் கேட்டார் பொலிஸ்மா அதிபர்



கண்டி மாவட்டம் ஹேவாஹெட்டவில் முல்லோயா தோட்டத்தில் 1940 ஜனவரி மாதம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். நாளடைவில் இந்த வேலை நிறுத்தம் பெரிய அளவுக்கு வளர்ந்தது. தோட்டத்துறை விடுத்த அழைப்பின் பேரில் வந்த பொலிஸார் சுட்டதில் கோவிந்தன் என்ற தொழிலாளி மரணமடைந்தார். பொலிஸார் சில தொழிலாளரைக் கைது செய்து சட்ட விரோதமாகத் தோட்டத்துக்குள் பிரவேசித்ததாக வழக்குத் தாக்கல் செய்தனர். கோவிந்தன் கொலை பற்றிக் கலாநிதி என்.எம். பெரேராவும் பிலிப் குணவர்த்தனவும் சட்ட சபையில் பிரச்சினை கிளப்பியதைத் தொடர்ந்து அது பற்றி விசாரிப்பதற்கு ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. ஆணைக்குழுவின் விசாரணை முடியும் வரை தொழிலாளருக்கு எதிரான வழக்கை ஒத்திவைப்பது என்றும் சட்ட சபை தீர்மானித்தது. வழக்கை ஒத்திவைக்கும்படி சட்டத் தரணிகள் விடுக்கும் கோரிக்கையை நீதிமன்றத்தில் ஆட்சேபிக்க வேண்டாம் என்று உள்விவகார அமைச்சர் டி.பி. ஜயதிலக பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டார். ஆனால் நீதிமன்றத்தில் நடந்ததோ வேறு. வழக்கைத் தள்ளிப் போடுவதற்கும் பொலிஸார் ஆட்சேபனை தெரிவித்ததால் வழக்கு விசாரிக்கப்பட்டுத் தொழிலாளருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இது தொடர்பாக அமைச்சர் விளக்கம் கோரியபோது நீதித்துறையில் தலையிட உமக்கு என்ன அதிகாரம் இருக்கின்றது என்று அமைச்சரைப் பார்த்துக் கேட்டார் ஆங்கிலேயரான பொலிஸ்மா அதிபர். பொலிஸ்மா அதிபரை பதவியிலிருந்து நீக்குமாறு அமைச்சர் செய்த சிபார்சை ஆளுநர் நிராகரித்தார். இதற்கு ஆட்சேபனை தெரிவித்து அமைச்சர்கள் எல்லோரும் இராஜினாமா செய்தனர். எனினும் நீண்ட நாட்கள் இந்த நிலை நீடிக்கவில்லை. ஆளுநரும் அமைச்சர்களும் சமரசம் செய்துகொண்டனர்.

## ஜே.ஆரின் மதவெறிப் பிரசாரம்

களனித் தொகுதியில் 1943 மே மாதம் நடைபெற்ற இடைத்தேர்தலில் போட்டியிட்டு சட்ட சபைக்குத் தெரிவாகியதன் மூலம் ஜே.ஆர்.ஜயவர்த்தன தனது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தார். அந்தத் தேர்தலில் ஜே.ஆரை எதிர்த்துப் போட்டியிட்ட சிரேஷ்ட அரசியல்வாதியான ஈ.டபிள்யூ.பெரேரா ஒரு கிறிஸ்தவர். பௌத்தர்களின் புனித வணக்கத்தலம் அமைந்துள்ள களனியை ஒரு கிறிஸ்தவர் பிரதிநிதித்துவப் படுத்தலாமா என்ற கேள்வியே ஜே.ஆரின் பிரதான பிரசாரமாக இருந்தது.

## நெருப்பைக் கண்டுபிடித்தவர்

மனிதன் நெருப்பைக் கண்டுபிடித்ததும் காட்டுப் பிராணிகளை வீட்டுப் பிராணிகளாக பழக்கும் கலையைக் கற்றுக்கொண்டதும் மனித சமுதாயத்தின் வளர்ச்சியில் முக்கிய பாத்திரம் வகித்தன. ஆங்கீரஸர் என்பவர் நெருப்பை கண்டுபிடித்ததாக இருக்கு வேதம் கூறுகிறது. ஆங்கீரஸர் ஆரியர்களின் பொதுவான மூதாதையரில் ஒருவர்.

# கோடைக்கு ஏற்ற காய்கறிகள்



- கோலிபிளவர்: நல்ல ஈரப்பதம் கொண்ட கோலிபிளவரில் விற்றமின் சி சத்து ஏராளமாக இருக்கிறது. இது கோடையில் உண்டாகும் சூட்டைத் தணிக்கும் சக்தி கொண்டது. மூலச்சூட்டிற்கும் இது மிகவும் நல்லது.
- சர்க்கரைப் பூசணிக்காய்: உடல் சூடு காரணமாக ஒருவரது உடல் மெலிந்து கொண்டே இருந்தால் சர்க்கரைப் பூசணிக்காயைத் தொடர்ந்து சாப்பிட வேண்டும். அதிலும் பிஞ்சு சர்க்கரைப் பூசணிக்காய் உடல் சூட்டைப் போக்கும். இதில் உள்ள தண்ணீர் சத்து, மாச்சத்து, வெல்லச் சத்து ஆகியவை கோடைக்கு இதமானது.
- வெள்ளை முள்ளங்கி: எளிதில் ஜீரணிக்கக்கூடிய முள்ளங்கியில் தொண்ணூறு சதவதம் தண்ணீர்ச் சத்து அடங்கி இருப்பதால் அது உடல் சூட்டைத் தணிக்கிறது. முள்ளங்கி சாப்பிடுவதால் சிறுநீர்ப்பை சுத்தமாகும். வாதநோய்க்காரர்கள் சாப்பிடக் கூடாது. மாதவிலக்கு நாளில் சாப்பிட்டால் அதிக உதிரப்போக்காகி கோடையில் களைப்பு ஏற்படும்.
- வாழைத்தண்டு, வாழைக்காய், வாழைப்பூ மூன்றுமே கோடைக்கு இதம் தரும் காய்கறிகளாகும். உடல் சூட்டைத் தணிக்கும்.

## பாட இணைபாட விதான செயற்பாடுகளில் பல சாதனைகளை நிலை நாட்டிவரும்

# இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி

### கல்லூரி வரலாறு

1877ஆம் ஆண்டு பல சிரமங்களுக்கு மத்தியில இளவாலையில் ஒரு பாடசாலை நிறுவப்பட்டது. 1904 இலிருந்து ஆங்கிலமும் கற்பிக்கப் பட்டது. திருச்சபை அதிகாரிகள் இளவா லைப் பங்கின் துணையாளராகக் கடமை யாற்றிய L. றொட்றிக்கோ அடிகளாரின் தலை மையில் 1907இல் புதிய பாடசாலை ஒன்றை ஆரம் பித்துப் புனிதரான ஹென்றியரசர் நாமத் தைச் சூட்டினார். இரு ஆசிரியர்கள் நியம னம் பெற்றனர்.

1917இல் அருள்மிகு சாள்ஸ் மத்தியூஸ் அடிக ளாரின் அயரா முயற்சியின் பயனாக கல்வி யமைச்சின் அங்கீகாரத்துடன் புனித ஹென்றி யரசர் ஆங்கிலப் பாடசாலையாக உயர் பதிவு பெற்றது.

1919இல் E.S.L.C பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் முதலிடத்தைப் பெற்ற ஆ. வைரவப் பிள்ளை என்பவருக்கு ஹேவாவித்தாரண விருது கிடைத்தது.

1926ஆம் ஆண்டில் கல்வியமைச்சினால் புனித ஹென்றியரசர் உயர்தர ஆங்கிலக் கல்லூரி யாகப் பதிவு செய்யப்பட்டது.

1927இல் இல்லங்களுக்கிடையில் கிரிக்கெட் விளையாட்டு புகுத்தப்பட்டது.

1927இல் 'மார்கழி பச்சையும் வெள்ளையும்' சஞ்சிகை வெளியிடப்பட்டது.

1929இல் யாழ் மத்திய கல்லூரியை வென்று (கிரிக்கெட்) மாவட்ட மட்டம் வெற்றிக் கேட யம் பெற்றனர்.

1931இல் 'உதய சூரியன் கல்லூரிச் சஞ் சிகை' வெளியிடப்பட்டது.

1937இல் 40 ஆண்டுகள் சேவையாற்றிய புனித வளனார் சபைத்துறவிகளின் நிர்வாகம் கைமாற்றப்பட்டது.


அருள்மிகு சாள்ஸ் மத்தியூஸ் அடிகளார் கடின உழைப்பால் எதனையும் வெல்லலாம் என்ற விருதுவாக்கை உருவாக்கினார். நேரமுகாமைத்துவம், நேர்மை, ஒழுக்க நெறியுள்ள மாணவர் உருவாக்கப்பட்டனர்.

1957இல் 'The Henrician மலர்' வெளி யிடப்பட்டது.(ஆங்கிலமொழியில்)

17 வருடங்கள் தனியார் கல்லூரி யாக இயங்கி வந்த எமது கல்லூரி 1.1.1977 அரசாங்கத்திடம் கையளிக் கப்பட்டது.

1976 The Henrician மீண்டும் வெளிவந்தது.

போர்ச்சூழல் காரணமாக 1992.08.20 ஆம் திகதி மானிப்பாய் இந்துக் கல்லூரியில் மாலை நேரப் பாட சாலையாக இயங்கியது. 1994.01.15 காணி வாடகைக்கு எடுக்கப்பட்டு காலை நேரப்பாடசாலையாக இயங் கியது. 1996.05.13 மீண்டும் கல் லூரி வளாகத்தில் ஆரம்பிக்கப்பட் டது. 2007ஆம் ஆண்டு நூற் றாண்டுவிழா கொண்டாடப்பட் டது.



Rev.Fr.Joseph Anthonippillai Jesuthas (B.A.,B.Th,Dip in Ed,MA in Ed,SLPS-I)

### க.பொ.த. (சா/த) பரீட்சை தமிழ்மொழி மூலம்

| பாடங்கள் | சித்தியடைந்த வீதம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
| கிறிஸ்தவம் | 100 | 91 | 100 | 100 | 100 | 95 |
| சைவசமயம் | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| தமிழ் | 79 | 93 | 95 | 81 | 98 | 89 |
| ஆங்கிலம் | 23 | 29 | 13 | 21 | 21 | 22 |
| கணிதம் | 72 | 71 | 58 | 60 | 90 | 81 |
| விஞ்ஞானம் | 36 | 50 | 32 | 38 | 68 | 54 |
| வரலாறு | 56 | 70 | 73 | 49 | 62 | 78 |
| புவியியல் | 88 | 89 | 73 | 100 | 100 | 84 |
| குடியுரிமைக்கல்வி | 67 | 95 | 69 | 56 | 97 | 82 |
| வர்த்தகம் | 93 | 93 | 88 | 81 | 94 | 82 |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 92 | 100 | 100 | 100 | 100 | 100 |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 98 | 93 | 100 | 77 | 100 | 98 |
| சித்திரம் | 48 | 100 | 71 | 100 | 82 | 90 |
| சங்கீதம் | 93 | 100 | 100 | 100 | 100 | 100 |
| நாடகம் | 86 | 100 | 93 | 100 | 100 | 100 |

### க.பொ.த. (உ/த) பரீட்சை தமிழ்மொழி மூலம்

| பாடங்கள் | சித்தியடைந்த வீதம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
| கிறிஸ்தவ நாகரிகம் | 100 | 100 | 100 | 100 | 100 | 94 |
| இந்து நாகரிகம் | 100 | 75 | 89 | 75 | 100 | 90 |
| தமிழ் | 90 | 93 | 80 | 73 | 100 | 79 |
| புவியியல் | 100 | 94 | 71 | 85 | 73 | 70 |
| அரசியல் விஞ்ஞானம் | 100 | 80 | 50 | 77 | 83 | 60 |
| சித்திரம் | 100 | 100 | 100 | 100 | - | 67 |
| நாடகமும் அரங்கியலும் | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| பொருளியல் | 90 | 71 | 80 | 100 | 83 | 70 |
| வணிகக்கல்வி | 88 | 100 | 54 | 86 | 83 | 90 |
| கணக்கியல் | 75 | 71 | 15 | 86 | 50 | 50 |
| பௌதீகவியல் | 63 | 67 | 67 | 50 | 71 | 33 |
| இரசாயனவியல் | 50 | 0 | 100 | 75 | 50 | 100 |
| இணைந்த கணிதம் | 75 | 0 | 100 | 50 | 89 | 33 |
| உயிரியல் | 100 | 50 | 67 | 100 | 80 | 50 |
| பல்கலைக்கழக அனுமதி கலை | 86 | 81 | 64 | 70 | 77 | 19 |
| பல்கலைக்கழக அனுமதி வர்த்தகம் | 75 | 71 | 15 | 88 | 50 | 8 |
| பல்கலைக்கழக அனுமதி கணிதம் | 75 | 0 | 0 | 30 | 33 | 4 |
| பல்கலைக்கழக அனுமதி விஞ்ஞானம் | 25 | 0 | 0 | | 60 | 2 |

### இணைபாடவிதானச் செயற்பாடு 2014

| செயற்பாட்டு விபரம் | | மட்டத்தில் பெறப்பட்ட நிலை | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | தேசிய | மாகாண | மாவட்ட | வலய | [illegible] |
| | | | | | | |
| நாடகம் (தமிழ்) | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| Copy writing | | | | | | |
| Solo Acting | | | | | | |
| Recitation | | | | | | |
| Rolyplay | | | | | | |
| Group Singing (Junior) | | | | | | |
| Group Singing (Senior) | | | | | | |
| | | | | | | |
| Drama (Dialogue) Unior | | | 1st | | | |

### தரம் 9 மாகாணமட்டப் பரீட்சை


| பாடங்கள் | சித்தியடைந்த வீதம் | | | | |
|---|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
| சமயம் | 99 | 100 | 100 | 100 | 96 |
| தமிழ் | 100 | 100 | 100 | 100 | 99 |
| ஆங்கிலம் | 40 | 31 | 29 | 68 | 27 |
| கணிதம் | 87 | 100 | 66 | 83 | 49 |
| விஞ்ஞானம் | 87 | 100 | 97 | 98 | 56 |
| வரலாறு | 100 | 100 | 100 | 95 | 68 |
| புவியியல் | 100 | 100 | 100 | 100 | 86 |
| குடியுரிமைக்கல்வி | 100 | 100 | 97 | 100 | 85 |
| சுகாதாரமும் உடற்கல்வியும | 100 | 100 | 100 | 100 | 80 |
| அழகியல் | 9 | 100 | 100 | 100 | 84 |
| செய்முறைத்தொழில்நுட்பம் | - | 100 | 100 | 100 | 97 |



17வயது கால்பந்து அணி



19வயது கால்பந்து அணி



PT SQ




வடமாகாணத்தில் ஆங்கில நாடகத்திற்காக சம்பியன்பெற்றோர்



ஆசிரியர் குழாம்

# ஊர்காவற்றுறை மீன் சந்தை திறந்து வைத்தார் டக்ளஸ்



ஊர்காவற்றுறையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொது மீன்சந்தைக்கான கட்டடத் தொகுதியினை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா உத்தியோக பூர்வமாக திறந்து வைத்தார்.

ஊர்காவற்றுறைக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட செயலாளர் நாயகம் புதிய மீன் சந்தையை திறந்து வைத்தார்

மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இப்புதிய மீன் சந்தை நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை சந்தைக் கட்டடத் தொகுதியில் மீன்சந்தைக்கான நிரந்தர கட்டடம் இல்லாத நிலையில் வியாபாரிகளும் மக்களும் பல்வேறுபட்ட இடர்பாடுகளை சந்தித்து வந்தனர்.

இந்நிலையில் மீன்சந்தைக்கான கட்டடம் செயலாளர் நாயகத்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு அமைவாக பிரதேச சபையின் 2.5 மில்லியன் நிதியுதவியுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த மீன் மற்றும் மரக்கறி வியாபாரிகளுடன் கலந்துரையாடிய செயலாளர் நாயகம் அவர்களது ஏனைய பிரச்சினைகள் மற்றும் தேவைப் பாடுகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென ரின் (உதயன்) பிரதேச செயலர் திருமதி அன்ரன் யோகன் எழிலரசி, ஊர்காவற்றுறை பிரதேச சபை தவிசாளர் ஜெயகாந்தன், உபதவிசாளர் அல்பேட், பிரதேச சபை செயலாளர் சுதர்ஜன், யாழ். மாநகர முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தமிழ் பொலிஸாரை நியமிக்குமாறு கோரிக்கை

நெல்லியடிப் பகுதியில் உள்ள பொலிஸ் நிலையத்தில் தமிழ் தெரிந்த பொலிஸார் இடமாற்றப்பட்டுள்ளனர். அவர்களின் இடத்திற்கு தமிழ் பொலிஸார் இதுவரையும் நியமிக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் அங்கு ஒரு சில பொலிஸாரே இருப்பதனால் தமிழில் முறைப்பாடு செய்வதற்கு மக்கள் சிரமங்களை எதிர் நோக்கி வருவதுடன் சிங்களம் தெரிந்த பொலிஸாரும் தமிழ் முழுமையாகப் பேசக்கூடிய நிலையில் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

35000 உடுப்பிட்டி தொகுதி மக்களும் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் இருந்து, 45-50 இடையான பொலிஸாரே கடமையில் இருப்பதாக்வும் அதிலும் தமிழ் தெரிந்த பொலிஸார் அதிகமாக தேவையாக இருப்பதாகவும் பொது மக்களின் கஸ்ரங்களை நீக்குவதற்கு நெல்லியடி பொலிஸ் நிலையத்திற்கு கூடுதலாக தமிழ் பொலிஸ் சேவை ஆற்றுவதற்கு, நியமிக்குமாறும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (18)

# பதிவிருக்கப் பெட்டகம்

ஜோன் கெரியின் விஜயத்தின் போது அவர் ஆற்றியிருந்த உரைகளில், அவர் எங்கும் வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கென பிரத்தியேக பிரச்சினைகள் இருப்பதை அங்கீகரிக்கும் வகையில் எதனையும் குறிப்பிட்டிருக்கவில்லை. மோடியின் விஜயத்தின் போது ஆகக் குறைந்தது 13ஆவது திருத்தச் சட்டம் குறித்தாவது அவர் பேசியிருந்தார். ஆனால், கெரி தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விவகாரம் தொடர்பில் எந்தவொரு சொல்லையும் உச்சரித்திருக்கவில்லை. இலங்கை வெளிவிவகார அமைச்சில் பேசுகின்ற போது கெரி கடுமையான விடயங்களை கையாளுவதற்கு ஜனாதிபதியோ, பிரதமரோ மற்றும் வெளிவிவகார அமைச்சரோ பயப்பட வேண்டிய அவசியம் இல்லை என்னும் சாரப்பட உரையாற்றியிருந்தார். அதாவது, முன்னைய ஆட்சியாளர்கள் தொடர்பில் கடுமையான நடவடிக்கைகள் எதனையும் எடுப்பது தொடர்பில் புதிய அரசு தயங்க வேண்டியதில்லை, அவ்வாறு நீங்கள் நடவடிக்கைகளை எடுக்கும் போது உங்களுக்குப் பக்கபலமாக அமெரிக்கா வரும் என்பதே கெரி மறைமுகமாக உணர்த்தியிருக்கும் விடயம்.

இதேபோன்று அவர் லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் ஆற்றிய உரையிலும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் எந்தவொரு கருத்தையும் குறிப்பிடவில்லை. இங்கு பேசிய கெரி குறிப்பிட்டிருக்கும் ஒரு விடயம் இலங்கை தொடர்பில் அமெரிக்க தலையீட்டின் எல்லையை மிகவும் துல்லியமாக படம்பிடித்து காட்டியிருக்கின்றது. "ஒரு விடயத்தில் நான் தெளிவாக இருக்கிறேன். யுத்தம் வலிகளை கொண்டுவருவதாக இருப்பினும்கூட, சிலவேளைகளில் யுத்தத்திற்குச் செல்வது அவசியமானதாகவே இருக்கிறது. முன்னைய அரசு விடுதலைப் புலிகளுடன் எவ்வாறு சண்டையிட்டது என்பது தொடர்பில் என்னுடைய நாட்டிற்கு உடன்பாடின்மைகள் இருந்தது. ஆனால், கொலைகார பயங்கரவாதக் குழுவான (murderous terrorist group) தமிழீழ விடுதலைப் புலிகளும் அவர்களால் விதைக்கப்பட்ட அச்சமும் அழித்தொழிக்கப்பட வேண்டும் என்பதில் என்னுடைய நாடு தெளிவான விளக்கத்தைக் கொண்டிருந்தது".

கெரி இவ்வாறு குறிப்பிடுவது தொடர்பில் இப்போதும் என்னுடைய தேசியத் தலைவர் பிரபாகரன்தான் என்று கூறித்திரிபவர்களின் நிலைப்பாடு என்ன? இப்படியானதொரு கருத்தை கூட்டமைப்பின் சுமந்திரன் ஏற்றுக் கொள்வதில் சிரமமிருக்காது. ஏனெனில், சுமந்திரனின் கருத்தும் அதுதான். ஆனால், என்னுடைய தேசிய தலைவர் பிரபாகரன்தான் என்று சொல்லிவரும் ஏனையோரின் கருத்து என்ன? விடுதலைப் புலிகள் அழிவுற்று ஐந்து ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும்கூட, இன்றுவரை அமெரிக்கா புலிகளை சர்வதேச பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலிலிருந்து நீக்கவில்லை. இது தொடர்பில் எவரும் வாய்திறப்பதுமில்லை.

இன்று உலகத் தமிழர் பேரவையின் தலைவராக இருக்கின்ற மதகுரு இம்மானுவல், ஒரு காலத்தில் பிரபாகரனை ஜீஸஸ் என்று வர்ணித்தார். ஆனால், அந்த ஜீஸஸை ஒரு கொலைகார பயங்கரவாதக்குழுவின் தலைவர் என்கிறது அமெரிக்கா. ஆனால், இது பற்றி உலகத் தமிழர் பேரவையோ அல்லது பிரித்தானிய தமிழ் பேரவையோ இதுவரை ஏன் வாய்திறக்கவில்லை. நீங்கள் இப்போதும் பிரபாகரனின் விசுவாசிகளாக இருந்தால் மட்டும்தான் இது பற்றி பேச வேண்டும். இல்லாவிட்டால் இது ஒரு விடயமல்ல. இல்லாவிட்டால் பிரபாகரனை நீங்கள் உங்களின் அற்ப அரசியல் இலாபங் களுக்காக பயன்படுத்துகின்றீர்கள் என்பதை ஒப்புக்கொள்ளுங்கள். – யதீந்திரா

அமெரிக்க இராஜாங்கச் செயலருடனான சந்திப்பைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சிலாகித்து ஆளுக்கு ஆளாக அறிக்கைகள் விடுகிறார்கள். இவர்களது அரசியல் வியூகம் அல்லது சர்வதேச அரசியல் ஞானம் எந்தளவு என்பதை சாதாரண அரசியல் அறிவு பெற்ற தமிழ் மக்கள் தான் அளந்து கூற வேண்டும். தமிழர் தரப்பில் அமெரிக்க மோகமும் விசுவாசமும் அரசியல் கருத்தளவில் மட்டுமன்றி ஜோன் கெரியைச் சந்தித்த வேளை அவர்கள் அணிந்திருந்த அமெரிக்க ஐரோப்பிய கோட், சூட் உடைகளிலும் வெளிப்பட்டிருந்தன. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தமது தமிழ்த்தேசிய உடைகளில் ஏன் செல்லவில்லை என தமிழ் மக்கள் கேட்கிறார்கள். ஜனாதிபதி மைத்திரிபாலவிற்கு இருந்த தேசியப் பற்றின் காரணமாக அவர் தனது எளிமையான தேசிய உடையில் இருந்தவாறே அவர் அமெரிக்க இராஜாங்க செயலருடன் உரையாடிக்கொண்டார். பிரதமர் ரணில் மேற்கத்தைய உடையில் இருந்தமை அவரது நிலைப்பாட்டிற்குரியதே ஆகும். ஆனால் தமிழ் மக்களுக்கும் அவர்களது வாக்குகளுக்கும் தமிழ்த் தேசிய உடை அணிந்து அரசியல் செய்யும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களின் கோட்சூட் உடையானது அவர்களது உள்ளக் கிடக்கையை நன்கு வெளிப்படுத்திக் கொண்டது. இது வடக்கிற்கு ஒரு வேடமும் தெற்கிற்கு இன்னொரு வேடமும் சர்வதேசமென இவர்களால் அழைக்கப்படும் அமெரிக்க ஐரோப்பிய எசமானர்களுக்கு வேறொரு வேடமும் காட்டப்படுவதையே எடுத்துக்காட்டுகிறது. தேசிய இனப்பிரச்சினையையும் அதில் குறிப்பாக தமிழர் தரப்பையும் அமெரிக்க ஐரோப்பிய வல்லாதிக்க சக்திகள் தமது தேவைகள் நோக்கங்களுக்கு பயன்படுத்தி வருகிறார்களே தவிர வேறு எதுவுமில்லை. – காலகண்டன்

## வெள்ளி நற்சிந்தனை...



# சான்றோர் வழியில்

சான்றோர்கள் பலரும் தம் வாழ்நாளில் கண்ட உண்மைகளை மக்களுக்கு எடுத்துக் கூறினர் சங்ககாலம் தொட்டு இன்றுவரை இது நடைபெற்று வருகிறது. நரிவெரூ உத் தலையார் என்னும் சங்கப் புலவர் ஒருவர் நமக்கு அழகியதொரு வாழ்க்கைத் தத்துவத்தைத் தந்து சென்றுள்ளார். வாழ்வில் நாமும் வாழ்ந்து பிறரையும் வாழ வைக்க வேண்டும். நல்லதையே செய்ய வேண்டும் முடியவில்லையெனில் தீயதைச் செய்யாமல் இருந்து விட வேண்டும்.

"நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஒம்புமின்"

இது தான் நரிவெரூஉத் தலையாரின் வாழ்க்கைத் தத்துவம், இதன்படி ஒவ்வொருவரும் நடக்கத்தலைப்பட்டுவிட்டால் உலகில் சண்டை இல்லை சச்சரவில்லை: கூச்சல் இல்லை: குழப்பம் இல்லை.

வாழ்வில் எல்லாருக்கும் எல்லாம் வாய்த்து விடுவதில்லை. நல்லது கெட்டது எல்லாம் கலந்தே நடக்கும். இது நமது முயற்சியிலும் இல்லை "ஊழ்வினை உடுத்து வந்து ஊட்டும் என்பது இளங்கோ அடிகளார் கூற்றாகும். தீதும் நன் றும் பிறர்தரவாரா" என்பதும் நாம் அறிந்ததே இதைத தான் கண்ணதாசன் தமக்கே உரிய பாணியில்,

"நன்மைகள் தீமைகள் நடப்பன யாவையும்
சக்கரச் சுழற்சியில் சமமெனக் கருது நீ"

என்று பாடியுள்ளார். நாம் எவ்வளவு தான் முயன்று உழைத்தாலும் நமக்குச் சேர்வதுதான் சேரும், சும்மா இருந்தாலும் கூடச் சிலருக்குச் சில நேரங்களில் ஏதோ ஒரு வகையில் எப்படியோ செல்வம் சேர்ந்து விடும் சேர்கின்ற செல்வமும் சிலநேரங்களில் வந்தது போலவே சென்று விடுவதுண்டு.

வாழ்வில் தமக்கு வேண்டுவனவற்றை எல்லாம் கவிஞர்கள் எண்ணிப்பார்த்து இறைவனிடம் விண்ணப்பிப்பதுண்டு வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளாரும்,

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர்தம் உறவு கலவாமை வேண்டும்"

என்று தொடரும் பாடலில் தமது விருப்பத்தைத் தெரிவித்து விண்ணப்பஞ்செய்துள்ளார். பொய் பேசாது புறம் கூறாத நல்லவர்களின் நட்புக் கொண்டு வாழவேண்டும் என்பது வள்ளலாரின் கருத்து அவரைப்பின்பற்றிப் பாரதியாரும் தமது வாழ்வில் நினைத்ததை முடித்து நெஞ்சுரத்தோடு வாழவேண்டும் என்று ஆசைப்பட்டார்.

அந்த ஆசையை "மனதில் உறுதிவேண்டும் வாக்கினிலே இனிமைவேண்டும், நினைவு நல்லது வேண்டும்." என்னும் அழகிய கவிதையாக மலர்கிறது தூய நெஞ்சும் துணிவான போக்கும் பாரதியாரின் இருவிழிகள் அந்த வழியிலே வந்த கண்ணதாசனும் தமது வாழ்க்கையின் குறிக்கோளாகச் சிலவற்றைக்கொண்டிருந்தார் கண்ணன் மீது பற்றும் நம்பிக்கையும் கொண்டிருந்ததால் அவனிடமே,

"கண்ணா உனைநான் கனிவுடன் கேட்பேன்
எண்ணும் செல்வம் எவை இலை,யேனும்
நல்லவன் அன்பன் நன்றி மிகுந்தவன்
என்னும் பெயரே எனக்கருள்வாய் நீ"

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# ஜனாதிபதியின் ஆணையாளர் நியமனம் ஏற்க மாட்டாது சுதந்திரக் கட்சி



பிரதேச சபைகள், நகர சபைகள் உள்ளிட்டவற்றின் பதவிக் காலத்தை நீடிக்காமல் இருப்பதற்கு ஜனாதிபதி எடுத்த தீர்மானத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஏற்றுக்கொள்ளாது.

மட்டுமன்றி ஜனாதிபதியின் தீர்மானத்தை ஏற்க முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பதவிக் காலம் முடிவடைந்த உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் நீடிக்கப்பட வேண்டுமென அமைச்சரவைக் கூட்டத்தில் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடாத்தப்படும் வரையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஆணையாளர்கள் நியமிக்கப்பட வுள்ளதாக ஜனாதிபதி அண்மையில் பயாகல பிரதேசத்தில் வைத்து தெரிவித்திருந்தார்.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் நீடிக்கப்பட வேண்டும் என்பதே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு என அவர் தெரிவித்துள்ளார

# இலங்கையிலும் நிலநடுக்கம் புவியியல் நிபுணர் எச்சரிக்கை




(கொழும்பு)

இலங்கையில் எதிர்காலத்தில் பாரிய நில நடுக்கம் ஏற்படக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக புவியியல் நிபுணர் சீ.பி.திஸாநாயக்க எச்சரித்துள்ளார்.

இந்து அவுஸ்ரேலிய பூமித் தட்டுக்களில் உருவாகியுள்ள மாற்றமே இவ்வாறு இலங்கையில் நில நடுக்கம் ஏற்படக் காரணமாக அமையும்.

இலங்கைக்கு 500 முதல் 700 கிலோ மீற்றர் தொலைவில் இந்த புதிய பூமித் தட்டுப்பகுதி காணப்படுகின்றது. 50 மில்லியன் ஆண்டுகளாக இந்த பூமித்தட்டுக்கள் நகரத் தொடங்கியுள்ளன. இந்து அவுஸ்ரேலிய பூமித் தட்டு ஏற்கனவே வெடிக்கத் தொடங்கியுள்ளது.

இலங்கையின் மத்திய மலைநாட்டுப் பகுதியில் மண் சரிவுகள் ஏற்படவும் இது ஏதுவாக அமையும்.

நேபாள நிலநடுக்கத்தினால் இந்தியாவிற்கு உள்ளக அதிர்வுகள் ஏற்பட்டு அது இலங்கையை பாதிக்கலாம். எதிர்காலத்தில் இலங்கையில் மண் சரிவு சம்பவங்கள் அதிகரிக் கக் கூடும். இலங்கையில் பூமியதிர்வு ஏற்படாது என நாம் நிம்மதியாக இருக்க முடியாது.

ஏனென்றால் கடந்த காலங்களில் இலங்கையில் பாரியளவு நில நடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன.1615ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி இடம் பெற்ற நில நடுக்கத்தில் கொழும்பைச் சேர்ந்த 200 பேர் கொல்லப்பட்டதுடன், பாரியளவில் சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. போர்த்துக்கலில் இது பற்றிய விபரங்கள் காணப்படுகின்றன.

2012 ஆம் ஆண்டு இந்து அவுஸ்திரேலிய பூமியோட்டில் அதிர்வு ஏற்பட்டது. எதிர்காலத்தில் இலங்கையில் நில நடுக்கம் ஏற்படக் கூடும்.

நில நடுக்கத்தினை எதிர்நோக்க தற்போது இருந்தே ஆயத்தமாக வேண்டுமென புவியியல் நிபுணர் பேராசிரியர் சீ.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

# மீளவும் அமுலுக்கு வருகிறது கிராமிய விபரக்கொத்து

நாட்டிலுள்ள அனைத்து கிராமங்கள் மற்றும் நகரங்களினது சரியான பெயர்களை சட்டரீதியாக அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கும் வகையில், இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தின்போது நடைமுறையில் இருந்த கிராமிய விபரக்கொத்தை மீண்டும் அமுல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.


இந்த நடவடிக்கையின் பிரகாரம், சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பெயர்கள் குறிக்கப்படும் அதேவேளை, அப்பெயர்களை சரியான முறையில் உச்சரிப்பது முதல் அனைத்து விடயங்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படும் என இலங்கை நில அளவைத் திணைக்களம் தெரிவித்தது.

இடங்களின் பெயர்கள் தொடர்பான தரவுகள் எழுத்து மூல அறிவிப்பாக விடுக்கப்படும் அதேவேளை, இந்த நடவடிக்கையை முன்னெடுப்பதற்காக நில அளவைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையின் கீழ் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

அக்குழுவின் அங்கத்தவர்களாக, பொது நிர்வாகப் பதிவுகள் திணைக்களம், தொல்பொருளியல் ஆராய்ச்சி திணைக்களம், அரச கரும மொழிகள் திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிபுணர்களுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலிருந்து சிங்களம் மற்றும் வரலாறு தொடர்பான பேராசிரியர்கள் இருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிராமிய விபரக்கொத்தில் உள்ளடக்கப்படாத கிராமங்கள் மற்றும் நகரங்கள் பல உருவாக்கப்பட்டுள்ள நிலையில், நாட்டின் மூலை முடுக்கெங்கும் சென்று சரியான தரவுகளைப் பெற்று இந்நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை நில அளவைத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# அனுமதிப்பத்திரமின்றிய 15 யானைக்குட்டிகள் மீட்பு



(கொழும்பு)

சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த 15 யானைக் குட்டிகள் வனஜீவராசிகள் திணைக்களத்தால் மீட்கப்பட்டுள்ளன.

நீதிமன்ற உத்தரவின் பேரில் இந்த யானைக் குட்டிகள் மீட்கப்பட்டதாக வனஜீவராசிகள் பணிப்பாளர் நாயகம் எச்.டி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அனுமதிப் பத்திரம் இன்றி பராமரிக்கப்பட்டு வந்த யானைக் குட்டிகளே மீட்கப்பட்டுள்ளன.

மேலும் மரணித்ததாக கூறப்படும் யானைக் குட்டிகள் இரண்டு மஹரகம பிரதேச விகாரை வளாகத்தில் புதைக்கப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படும் நிலையில் அவற்றைத் தோண்டி எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலதிக நீதவான் ஒருவர் வசம் இருந்ததாகக் கூறப்படும் யானைக் குட்டிகள் பத்தரமுல்ல வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது.



## பரமர் சங்கமம்

'புலிகளுக்குப் புரியும் பாசையில் பதிலளித்தாலே அவர்களுக்கு விளங்க வைக்க முடியும்.' மூன்று தசாப்த காலங்களின் முற்பகுதியில் அவர்களின் தாக்குதலுக்கு முகம்கொடுத்த அரசுத் தலைவராக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்னா ஒரு சமயம் அப்புடிச் சொல்லியிருந்தார்.

இதே நிலைமை கிட்டடிலை பரமருக்கும் ஏற்பட்டது. நீண்ட காலமாகப் பரமரோடை பகைமையை நீறு பூத்த நெருப்பாகக் கனன்றும், வெளியாக மனிதநேய சிநேக முகமூடியோடும் ஓடும் புளியம்பழம் போலை புளங்கிக் கொண்டு வந்த சாதாரண எழுத்தாளரொருவரின் உண்மை ரூபம் வெளியான போது ஜே.ஆரின் பதிலடியையே கையாள வேண்டியும் நேர்ந்து விட்டது.

அநேகமான பத்திரிகைகளில் பரமரின் படைப்புகளைப் பாத்துப் பொறாமை கொண்டிருந்த எழுத்தாளர் ஒரு சமயம் சுதந்திரப் படைப்பாளி சுதந்திரமாக எல்லாப்பத்திரிகைகளிலும் எழுதுகிறேன் எண்டதும் நீரப்படிச்சொல்லாதேம் அப்புடிச் சொல்லக்கூடாதெண்டு வரம்பொண்டைக் கூறி நல்ல பாம்பு வேடம் போட்டார்.

பாம்பின் காலைப் பாம்பறியுமெண்டும் சும்மாவே சொல்லி வைச்சினம் . பாம்புக் காதிருக்கிற பரமருக்கு பாம்பாகவும் மாறுறே பெரிய விசயமே அவரை மேலும் வழிக்கிழுக்க ரெண்டு சிற்றிதழ்களைச் சுட்டிக்காட்டி அதுகளுக்கு எழுது றேல்லை தரமான இதழ்களோ எனக் கேட்டதும் வெகுண்டே போனார்.

ஒண்டுக்குப் பத்து விடயங்களை எழுதேக்கை பத்துப் பத்திரிகைகளுக்கும் அனுப்பும் தேவை ஏற்படுகிறது. அவையும் பிரசுரிக்கின்றன. இதனைக் குறைந்தளவில் எழுதும் அவரால் ஜீரணிக்க முடியாமல் அச்சிற்றிதழ்கள் பரமரின் விடயங்களைப் பிரிசுரிக்காதென வக்கிரகத்தைக் கக்கினார்.

பல பத்திரிகைகளிலும் எழுதுவதால் எழுத்தாளரின் சுயமரியாதை கெட்டுவிடாது. அவனது படைப்பைத் தான் அவை ஏற்றுப் பிரசுரிக்கின்றன. ஒரு சிலர் எழுதுவதைப் பத்திரிகைகள் பிரசுரிக்காததால் இப்படிக்கூறித்திரிய வேண்டியதுதானை எண்ட பரமரின் கூற்றை தாங்கிக்க மாட்டாமல் அப்புடி எல்லாத்துக்கும் எழுதுவதுக்கும் வேசித்தனத்துக்கும் வித்தியாசமில்லை எண்ட எழுத்தாளருக்கு பதிலளிக்க பரமர் இரண்டு தசாப் தங்கள் முன்பாக முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெய வர்த்தன சொன்ன புரியும் பாசையில் சொன்னால் விளங்கு மெண்டு பரமர் இப்புடிச் சொன்னார்..

'அவருக்கு சுவாரஸ்யமாக இருப்பதேன் மற்றவர்களுக்கு வலிக்கிறதெனக் கேட்டதும் அந்த எழுத்தாளர் ஒண்டுமே பேசமுடியாமல் வாயடைச்சுப் போனார்.

எவருக்கும் புரியும் படியாக எதையும் சொன்னாத்தானே விளங்கும்? இலக்கியங்களேம் எத்தனை பேர் விளங்காத மொழியிலை எழுதிக் கொண்டிருக்கினம் இல்லையே பின்னை சொல்லுங்க பாப்பம்...

# வெள்ளை வான் கடத்தலென அச்சப்படக்கூடாது மகிந்த

## கூறுகிறார் அமைச்சர் கரு



வெள்ளை ,வான் கடத்தல், தாக்குதல்கள் இடம்பெறும் என்று மகிந்த ராஜபக்ஷ அச்சமடையத் தேவையில்லை. ஊழல், மோசடி தொடர்பில் இடம்பெறும் அனைத்து விசாரணைகளும், கைதுகளும், சுயாதீனமாகவே இடம்பெறுகின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ அல்லது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ இதில் தலையிடுவதில்லை என்று அரச நிர்வாக, உள்ளூராட்சி மற்றும் ஜனநாயக ஆட்சி தொடர்பான அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

கொழும்பு-நாரஹேன்பிட்டியிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஊடகவியலாளர் தமது கேள்வியில், கடந்த அரசில் இருந்த அமைச்சர்கள், எம்.பிக்கள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவின்பேரில் கைது செய்யப்படுகின்றனர் என்றும், புலம்பெயர் தமிழர்களின் தேவைக்கேற்ப தம்மீது வேறு விதத்தில் அரச பழி வாங்கல் நடவடிக்கையை முன்னெடுக்கிறது என்றும், இதற்கமைய தம்மைக் கைது செய்யவும் அரசு முயற்சிக்கின்றது என்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார். இவரின் குற்றச்சாட்டுக்கு அரசின் பதில் என்ன எனக் கேட்டார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் கரு ஜயசூரிய நீதித்துறையும், பொலிஸும் சுயாதீனமாகச் செயற்படுகின்றன. ஜனாதிபதியோ, பிரதமரோ இவற்றில் எந்தத் தலையீடும் செய்வதில்லை செய்யத் தேவையுமில்லை.

தற்போது நாட்டில் நல்லாட்சி இடம்பெறுகின்றது. முன்னைய ஆட்சியைப் போல வெள்ளை வான் கடத்தல், தாக்குதல் இடம்பெறுவதில்லை. அதனால் மஹிந்த ராஜபக்ஷ அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றார்.

61. நாளொன்றில் இரவுப்பொழுது தொடங்கும் போது சத்தம் எழுப்பக்கூடிய பிராணி
1) நுளம்பு   2) பூரான்   3) சில்வண்டு   4) தவளை

62. இலையான் முட்டையின் நிறம்
1) கறுப்பு   2) கபிலம்   3) மஞ்சள்   4) வெள்ளை

63. எதிரியை கண்டதும் வாலை சிலிர்த்துக்காட்டுவது எது?
1) முள்ளம்பன்றி   2) அணில்   3) கபறகொயா   4) ஆமடில்லா

64. பின்வரும் விளையாட்டுக்களில் மெய்வல்லுநர் விளையாட்டு எது?
1) நீளம் பாய்தல்   2) றகர்   3) டெனிஸ்   4) பூப்பந்து

65. பின்வரும் பூக்களில் இரட்டை இதழ் அமைப்புடைய பூ எது?
1) ஐந்தூரியம்   2) வெட்சி   3) அலரி   4) நித்தியகல்யாணி

66. மருந்தாகவும் உணவாகவும் பயன்படக்கூடியது
1) வாகை   2) முருங்கை   3) கோப்பைக்கீரை   4) குப்பைமேனி

67. கம்பி ஒன்றை வெட்டப்பயன்படுவது
1) டெஸ்டர்   2) சத்தியல்   3) குறடு   4) திருகாணி செலுத்தி

68. விலங்குகளினால் பரவி பெருகும் வித்து எது?
1) வேங்கை   2) பொன்னொச்சி   3) புலிநகம்   4) எருக்கலை

69. கிழங்குகளை நாட்டி கன்றுகளை பெறக் கூடிய தாவரம் எது?
1) மரவள்ளி   2) முள்ளங்கி   3) வள்ளி   4) வள்ளலை

70. தேனை நீண்டகாலம் கெடாது வைப்பதற்காக தேனில் இட்டு வைக்கும் வித்து எது?
1) கோப்பி   2) மிளகு   3) பப்பாசி   4) வெந்தயம்

71. இலங்கைக்கே உரித்தான விலங்கு எது?
1) கிளி
2) நெருப்புக்கோழி
3) குயில்
4) மீன்கொத்தி

72. கரட் கிழங்கில் அதிகம் அடங்கியுள்ள போசணைச்சத்து எது?
1) விற்றமின் B
2) விற்றமின் C
3) விற்றமின் A
4) விற்றமின் D

73. காந்தத்தை அருகில் கொண்டு வரும் போது பின்வரும் எப்பொருள் கவரப்படும்?
1) பித்தளை
2) அலுமினியம்
3) இரும்பு
4) வெள்ளி

நேற்றுமுன்தினம் பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (01)1.2 | 2.2 | 3.3 | 4.1 | (02)5.3 | 6.1 |
| (03)7.1 | 8.1 | (04)9.3 | 10.1 | (05)11.3 | 12.1 |
| 13.3 | 14.2 | 15.3 | 16.2 | 17.3 | 18.1 |
| 19.2 | 20.1 | 21.2 | 22.2 | 23.2 | 24.1 |
| 25.2 | (06)26.3 | 27.2 | 28.1 | (07)29.3 | 30.1 |
| 31.3 | 32.3 | 33.3 | 34.1 | 35.2 | (08)36.2 |
| 37.1 | (09)38.2 | 39.3 | 40.3 | 41.3 | 42.2 |
| 43.2 | | | | | |

இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்



தரம் - 4 பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - II
1 மணி 15 நிமிடம்

# கல்வி முரசு



எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

**(01) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக**

நாம் கல்விச்சுற்றுலா சென்ற வேளை அங்கு போயிருந்தோம். தூரத்தில் நின்று பார்த்த போது ஒரு பெரிய சிங்கம் படுத்திருப்பது போல காட்சி அளித்தது. அருகிலே சென்ற போதுதான் உண்மையான அமைப்பை கண்டுகொண்டோம்.

01. பந்தியில் இடம்பெற்றுள்ள முதலாவது வாக்கியத்தின் எழுவாய் சொல் யாது? ..........................

02. பந்தியில் இடம்பெற்றுள்ள உவமைத்தொடரை குறிப்பிடுக? ..........................

03. விசிறியும், மடக்கேறும் மாத்திரம் இடம்பெற்றுள்ள சொல்லை தெரிந்து எழுதுக? ..........................

04. பந்தியில் இடம்பெற்றுள்ள எதிர்க்கருத்து சொற்கள் இரண்டு தருக? ..........................

05. மெய்யான எனும் சொல்லுக்கான ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக? ..........................

06. பந்தியில் இடம்பெற்றுள்ள பெயரடைமொழியை எழுதுக? ..........................

**(02) இடைவெளியை நிரப்புக**

07. ஆழம் ..........................காலை விடாதே

08. ..........................அறியுமா கற்பூர வாசனை

09. இரக்கப்போனாலும் ..........................போ

10. ..........................கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய்

**(03) தடித்த சொல்லின் கருத்தை எழுதுக**

11. தையற்காரர்கள் **மும்முரமாகத்** துணிகளைத் தைத்துக் கொண்டிருந்தார்கள்? ..........................

12. வகுப்புத்தலைவன் சத்தியனை நினைத்தபோது ஒரே **எரிச்சலாக** இருந்தது ..........................

13. எனக்கு **அபயம்** அளியுங்கள் ..........................

**(04) பின்வரும் இணைமொழிகளில் எதிர்ச்சொல் இணைமொழிகளை தெரிவு செய்து எழுதுக**

மலையும்மடுவும், கள்ளங்கபடம், சாக்குப்போக்கு, அல்லும்பகலும், கனவுநனவு, கண்ணும்கருத்தும்

14. .......................... 15. .......................... 16. ..........................

**(05) இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை தெரிவு செய்து கோடிடுக**

17. காற்றில் நுண்ணுயிர்கள் பல .......................... (உள்ளது, உள்ளன)

18. உலகம் விசர்நாய்க்கடியின் துன்பத்தினின்றும் தப்பும் வழியை .......................... (அறிந்தனர், அறிந்தது)

19. நாட்டார் இலக்கியத்தில் ஒரு பகுதியாகத் .......................... (திகழ்வதே, திகழ்வனவே) பழமொழியும், விடுகதையும் எனலாம்

20. .......................... (பழமொழி, பழமொழிகள்) மக்களது அனுபவத்திரட்டாகத் திகழ்கின்றன

**(06) விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக**

21. வெயிலில் மலரும், காற்றில் உலரும் அது என்ன? ..........................

22. உயிர் இல்லாத நீதிபதி உரிய தீர்ப்பு வழங்குவார் அவர் யார்? ..........................

23. தீக்குளித்தாலும் திடமாக இருப்பவர் அவர் யார்? ..........................

(07) பின்வரும் தொடரை ஆங்கிலத்தில் எழுதுக

24. தயவுசெய்து அமைதியாய் இரு ..............................

(08) பின்வரும் சொற்களில் விடுபட்டுள்ள எழுத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக

25. vil......age 26. An........mals 27. Y........llow

(09) கருத்தினை தருக

28. please come to school every day ..............................

(10) சிங்களத்தொடரின் கருத்தினை தருக

29. மட்ட சருங்கலயக் அதலா தென்ன? ..............................

(11) சிங்களத்தில் கூறும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக

30. அரிசி ஒரு கிலோவின் விலை என்ன? ..............................

(12) மக்கள் மன அமைதி பெறவும் ஆறுதல் அடைவதற்கும் அண்மையிலே காணப்படுகின்ற பூங்காக்களை நாடிச் செல்வார்கள். அந்த வகையில் "நான் கண் குளிர் பார்த்து இரசித்த பூங்காவனம்" என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும் இலக்கணத்தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இடம்பெற வேண்டும்)

31. ..............................

32. ..............................

33. ..............................

(13) கணித வினாக்களுக்கு விடை தருக

34. 510 நெல்லிக்கனிகளை 5 குவியல்களாக பங்கிடும் போது ஒரு குவியலில் அடங்கும் நெல்லிக்கனிகள் எத்தனை?

..............................

35. விடை காண்க 1) XX - X x II = .............................. 2) IX + XI ÷ IV = ..............................

36. தசம எண்களுக்கு பொருத்தமான பின்னங்களை எழுதுக

1) 8.5 - .............................. 2) 1.7 - .............................. 3) 2.25 ..............................

37. ஒரு பையில் 19990 வித்துக்கள் இருந்தன. அதற்குள் மேலும் 10 வித்துக்கள் இடும் போது பையில் உள்ள வித்துக்களின் மொத்த எண்ணிக்கை யாது?

..............................

38. ஒரு பெரிய பாத்திரம் கொள்ளும் பருப்பின் அளவு 35kg 800g ஆகும். அப்பாத்திரத்தில் 14kg 200g பருப்பு இருந்தது எனின் அப்பாத்திரம் நிறைய எவ்வளவு பருப்பு தேவையாகும்?

..............................

39. தோடம்பழம் ஒன்று ரூபா 9.50 வீதப்படி 12 பழங்களை வாங்கிக்கொண்டு ரூபா 200 வழங்கினால் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?

..............................

40. சிவாவிற்கு தற்போது வயது 15 வருடங்களும் 3 மாதங்களுமாகும் சாரதாவிற்கு வயது 11 வருடங்களும் 6 மாதங்களும் ஆகின்றது. எனின் இருவரதும் வயது வித்தியாசத்தை காண்க?

.............................. வருடம் .............................. மாதம்

41. 120cm நீளமுள்ள ஓர் அளவை நாடாவின் நடுவில் 15cm நீளமுள்ள பகுதி சேதமடைந்துள்ளது. அப்பகுதியை அகற்றி மீதி இரு துண்டுகளும் 5cm வீதம் ஒன்றின் மீது ஒன்று வைத்து ஒட்டப்பட்டன தற்போது அளவை நாடாவின் நீளம் யாது?

..............................

42. ஒரு நோயாளி தினமும் காலை, இரவுவேளைகளில் 4 மருந்து வில்லைகள் வீதம் உட்கொள்வார் 96 மருந்து வில்லைகள் அடங்கிய பைக்கற்று ஒன்று இவருக்கு எத்தனை நாளுக்கு போதும்?

..............................



43. இங்கிலாந்தின் நேரம் இலங்கையின் நேரத்திலும் பார்க்க 6 மணித்தியாலங்கள் குறைவாகும். இங்கிலாந்தின் நேரம் பிற்பகல் 6 மணியாகும் போது இலங்கையின் நேரம் யாது?

..............................

44. விரித்து வைக்கப்பட்ட ஒரு புத்தகத்தின் வலப்பக்கத்தில் உள்ள பக்கஎண் 2099 அடுத்ததாக விரிக்கும் போது வரும் பக்கங்கள் இரண்டினதும் எண்கள் யாவை?

..............................

45. 36m சதுர பரப்பு கொண்ட ஒரு காணியின் ஒரு பக்க நீளம் யாது? ..............................

46. கூட்டுக 1.5 + 0.2 + 0.3 = ..............................

(14) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக

47. வீட்டுத்தோட்டத்தில் பயிர்களுக்கு சேதம் விளைவிப்பது

1) தேனீ 2) குளவி 3) இலைப்பூச்சி 4) தும்பிடுபூச்சி

48. பின்வரும் வித்துக்களில் விரைவாக முளைப்பது

1) கடலை 2) பப்பாசி 3) முந்திரி 4) மா

49. வீட்டுத்தோட்டத்தை பிராணிகளிடம் இருந்து பாதுகாக்கும் பாரம்பரிய முறை?

1) இரசாயன மருந்துகளை தெளித்தல்
2) ஆங்காங்கே சிறு வெள்ளைக் கொடிகளை பறக்கவிடுதல்
3) வேலியடித்தல்
4) தேனீக்களுக்கு பெட்டி வைத்தல்

50. பூச்சிகளில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கு பயன்படுத்தப்படும் சூழல்நேய கட்டுப்பாட்டு முறை எது?

1) புகையிலை அவித்த நீரை விசிறுதல்
2) தாவரங்களை அடிக்கடி கவ்வாத்து செய்தல்
3) அடிக்கடி நீர் தெளித்தல்
4) களைகளைப் பிடுங்கி எறிதல்

51. மீனெண்ணெய்யில் அதிகம் இருக்கும் போசணைச்சத்து

1) விற்றமின் D 2) விற்றமின் A 3) விற்றமின் C 4) விற்றமின் E

52. நீருடன் சேரும் போது ஊதா நிறத்தை தரக்கூடியது

1) மண்ணெண்ணெய் 2) தேங்காய்எண்ணெய் 3) கொண்டிஸ் 4) ஸ்பிரிட்

53. நீரின்மூலம் பரவலடையும் வித்து?

1) நாயுருவி 2) வேங்கை 3) பொன்னொச்சி 4) ஆம்பல்

54. வேரின் மூலமும், வித்து மூலமும் இனப்பெருக்கமடையும் தாவரம்?

1) கறிவேப்பிலை 2) பப்பாசி 3) கொய்யா 4) தேக்கு

55. பின்வரும் தாவரங்களுள் இலங்கைக்குரியது

1) ஆமணக்கு 2) வேம்பு 3) பருத்தி 4) தொரணை

56. வெசாக் பண்டிகையை இலங்கையில் ஆரம்பித்து வைத்த அரசன்

1) தேவநம்பியதீஸன் 2) துட்டகைமுனு 3) வசபன் 4) தாதுசேனன்

57. இலங்கையில் தேசியக்கீத கமிட்டியில் அங்கத்தவராக இருந்தவர்

1) D.P. ஜயதிலக்க 2) D.P. ஜயா 3) சித்திலெப்பை 4) ஆறுமுகநாவலர்

58. நஞ்சருந்திய ஒருவருக்கு செய்யவேண்டிய முதலுதவி

1) மண்ணெண்ணெய் அருந்தச் செய்தல் 2) சவர்க்கார நீரை பருகச் செய்தல்
3) தேங்காய்ப்பாலை பருகச் செய்தல் 4) சுடுநீரை குடிக்கக் கொடுத்தல்

59. எலியின் மூலம் பரவும் நோய் எது?

1) கொள்ளை 2) டெங்கு 3) மலேரியா 4) கழிச்சல்

60. தேசப்படங்களில் புகையிரதப்பாதையை குறிக்கப்பயன்படுத்தும் நிறம் யாது?

1) மஞ்சள் 2) நீலம் 3) கபிலம் 4) கறுப்பு

# திட்டமிட்ட பிரசாரங்கள் குறித்து உள்ளக விசாரணை வேண்டும்

## யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

எமது சங்கத்தை இழிவுபடுத்தும் வகையில் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்ட பிரசாரங்கள் தொடர்பில் பல்கலைக் கழகத்தில் உள்ளக விசாரணையை கோருவதுடன், சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானித்துள்ளதாக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தினர் கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவித்தனர்.

அண்மையில் யாழ். பல்கலைக்கழக ஆசிரிய சங்கத் தலைவர் இராசகுமாரனினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் உண்மைக்குப் புறம்பானவை எனவும் அதை முற்றாக மறுப்பதாகவும் தெரிவித்து விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு அதன் தலைவர், செயலாளர் ஆகியோரினால் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் சங்கத்தினரால் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

பல்கலைக்கழக கல்வி சார் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பில் ஏற்பட்ட முறைகேடுகள் பற்றிய குற்றச்சாட்டுக்கு பெறப்பட்ட தங்கள் கையொப்பங்களை முறைகேடுகள தொடர்பான விசாரணை மற்றும் தகுதி வாய்ந்த அதிகாரியை நியமிக்கக் கோரும் ஆவணத்திற்கு முறைகேடாக பயன்படுத்தியதாக 18 ஆசிரியர்கள் பல்கலைக்கழகப் பேரவைக்கு முறைப்பாடு செய்துள்ளனர். இக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட 05.05.2015 ஆம் திகதியிடப்பட்ட கடிதங்களை யாழ். பல்கலைக ஆசிரியர் சங்கத் தலைவரான இராசகுமாரனும் மற்றும் சிலரும் பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்களுக்கு 6 ஆம் திகதி நேரடியாக வழங்கினர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் அண்மைக்காலமாக நடை பெறும முறைகேடுகள் தொடர்பாக எமது தொழிற்சங்கம் 2011 ஆம் ஆண்டிலிருந்து பல முறைப்பாடுகளை சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிக் கொண்டிருக்கின்றது. அவற்றில் சில அறிக்கைகள் பல்கலைக்கழகத்தின் எல்லா சமூக உறுப்பினர்களிடையேயும் சேகரிக்கப்பட்ட கையெழுத்துககளை உள்ளடக்கியதாகவுள்ளது.

மேற்படி எமது முறைப்பாடுகளுக்கு முனனைய அரசிடமிருந்தோ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்தோ யாழ். பல்கலைக்கழக பேரவையிடமிருந்தோ எந்தவித பதிலும் கிடைக்கவில்லை.

தற்போதைய அரசினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு அமைக்கப்பட்டதும் எம்மால் முன்னர் அனுபபப்பட்ட அனைத்து அறிக்கைகளும் ஒன்றாகத் தொகுக்கப்பட்டது.

அந்த தொகுப்பின் முகவுரையில் நாம் எம்மால் 2011 ஆம் ஆண்டிலிருந்து சுமத்தப்படும் மேற்படி குற்றச்சாட்டுகள் தொடாபாக ஒரு பக்கச் சார்பற்ற விசாரணையை வேண்டி அவ்விசாரணைக்கு ஏதுவாக பல்கலைக் கழகத்திற்கு ஒரு தகுதி வாய்நத அதிகாரியை நியமிக்குமாறு கோரியிருந்தோம்.

இக்கோரிக் கடிதத்தில் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்க தலைவரினதும் செயலாளரினதும் கையொப்பங்கள் மட்டுமே உள்ளன.

2013 ஆம் ஆண்டு டிசம்பர் 4 ஆம் திகதி 86 பேரின் கையொப்பத்துடன் எம்மால் துணைவேந்தர் பேரவை உறுப்பினர்கள் மற்றும் நலன் விரும்பிகளுக்கு அனுப்பப்பட்ட ஆவணமும் மேற்படி தொகுப்பில் அதன் முழுவடிவில் ஒரு சான்றாக இணைக்கப்பட்டுள்ளதே தவிர 86 பேரிடமும் எமது தொழிற்சங்க கடிதத் தலைப்பில் பெறப்பட்ட கையொப்பங்கள் எந்த இடத்திலும் வேறு ஆவணத்திற்குரிய கையொப்பங்களாக காட்டப்படவில்லை.

அத்துடன் மேற்படி ஆவணம் எந்தவித மாற்றமுமின்றி எமது தொகுப்பில் இணைககப்பட்டுள்ளதுடன், ஆவணத்தில் கையொப்பமிட்ட 86 பேரும் தகுதி வாய்ந்த அதிகாரியைக் கோருவதாக நாம எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை.

இது தொடர்பான சகல ஆவணங்களும் எம்மிடம் உள்ளன. எமது சங்கமானது அங்கத்தவர்களது உரிமைகளுக்காகவும், பல்கலைக்கழகத்தினது நன்மைக்காகவும் குரல் கொடுத்து வருகிறது.

எந்தச் சலுகைக்காகவும் அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுப்பதை நிறுத்தியதும் இல்லை என யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (இ,25)



கிளிநொச்சி ஆனந்தபுரம் அன்னை முன்பள்ளியின் 5 ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வின் பதிவு... (90)

# கிழக்கு மாகாண ஆசிரியர்களின் வெளிமாகாண நியமனம் இரத்து

ஆசிரியர் டிப்ளோமா பயிற்சி முடித்த கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர்களுக்கு கிழக்கு மாகாணத்துக்கு வெளியே வழங்கப்பட்ட அனைத்து நியமனங்களும் உடனடியாக இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண முதலமைச்சரின் ஊடகப் பிரிவு நேற்றுமுன்தினம் பிற்பகல் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வெளி மாகாணங்களில் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த குறிப்பிட்ட ஆசிரியர்களை உடனடியாக கிழக்கு மாகாணத்திலுள்ள அவரவர் மாவட்டத்துக்கு மாற்ற வேண்டும் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் கல்வியமைச்சரைக் கேட்டிருந்தார்.

இந்த விடயம் தொடர்பாக புதன்கிழமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர அபிவிருத்தி அமைச்சருமான ரவூப் ஹக்கீம், கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட், கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் எஸ். தண்டாயுதபாணி ஆகியோர் நேற்று முன்தினம் காலை கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசத்துடன் விவாதித்தனர்.

அதன் பயனாக உடனடியாக அமுல்படுத்தும் வகையில் கிழக்கு மாகாணத்துக்கு வெளியே ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ள கிழக்கு மாகாணத்தவர்கள் அனைவருக்கும் கிழக்கு மாகாணத்துக்குள்ளேயே அவர வர் மாவட்டத்தில் நியமனம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே வெளி மாகாணங்களுக்கு நியமனம் பெற்றவர்கள் உடனடியாக தங்களது விபரததை நியமனக் கடிதப் பிரதி உட்பட கிழக்கு மாகாண முதலமைச்சரின் அலுவலகத்துக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். முதலமைச்சரின் மாவட்ட இணைப்பதிகாரிகளையும் மேற்படி விடயமாகத் தொடர்பு கொண்டு விபரங்களைக் கையளிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


## வாழ்க வளமுடன்

பெயர் : ஆர். நிசோனி
முகவரி: இல.17/9 பீச் றோட், குருநகர்.

அகவை 1 இல்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



## வாழ்க வளமுடன்

பெயர் : ச. கஜநிதன்
முகவரி: 1 ஆம் வட்டாரம், நயினாதீவு.

அகவை 2 இல்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்




## தினமுரசுக்கு வந்த கடிதம்

அண்மையில் செம்மலை மகா வித்தியாலயத்தில் ஆய்வு கூடத்தைத் திறப்பதற்கு வட மாகாண கல்வி அமைச்சர் வந்திருந் தார். வந்தவர் கட்டடத்தைத் திறந்து வைத்து விட்டுப் பேசினார்.

என்ன பேசினார் என்றால் கல்விப் பணிப்பாளருக்கு அடுத்த நிலையில் இருக்கும் அதிகாரிகள் ஒத்துழைப்பதில்லையாம். அவர்கள் ஏனோதானோ என்று செயற்படுகிறார்களாம். இப்படி அவரது பேச்சு அமைந்திருந்தது. பிள்ளைகள் கலந்து கொள்ளுகிற விழாவிலை எப்படிப் பேசுவது என்று தெரியாத ஒருவரையே நாங்கள் கல்வி அமைச்சராகத் தெரிந்து விட்டோமே என்று மனம் நொந்தேன். நிர்வாக விடயங்களை அலுவலகத்தில் பேசித் தீர்க்காமல் அரங்குக்குக் கொண்டு வரும் அரசியல் நாகரீகம் முடிவுக்கு வர வேண்டும்.

முல்லைத்தீவு வலயம் 18 ஆயிரம் மாணவர்களைக் கொண்ட வலயம். அது கடந்த காலங்களில் முன்னிலை வகித்தது. (குருகுலராஜா கல்விப் பணிப்பாளராக இருந்த சமயத்தில் வீழ்ச்சி நிலையிலேயே இருந்தது). தற்போது அது வீழ்ச்சி காண்கிறது என்றால் பொருத்தமற்ற அரசியல் நியமனமே அதற்குக் காரணமாகும். கல்வி நிர்வாக சேவை தரம் 1, 2 ஐச் சேர்ந்த அலுவலர் கள் பலரிருந்தும் அவர்களை ஒரு வார்த்தை கேட்காமல் அரசியல் நியமனம் பெற்ற, சங்கீத பாட விசேட ஆளணியைச் சேர்ந்தவர் வலயக் கல்விப் பணிப்பாளராக கல்வி அமைச்சரின் சிபார்சில் நியமிக்கப் பட்டார். இது தொடர்பில் இணையத் தளங்களில் அருவருக்கத்தக்க பல செய்திகள் வந்திருந்தன.

பொருத்தமான தகைமையும், ஆளுமையும் அற்றவர் வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்து, பிழையான தீர்மானங்களை எடுக்க முயற்சித்தால் அதனை சுற்றியிருப்பவர்கள் ஏற்க மாட்டார்கள். அதுதான் முல்லைத்தீவிலும் நடக்கிறது. பிழையான அதிபர் ஆசிரியர் இடமாற்றங்கள் பழிவாங்கல் அடிப்படையில் நடக்கிறது என்று அதிபர்களும், ஆசிரியர்களும் சொல்கிறார்கள். அத்தகைய ஒரு நிலைமையைக் கருதியே அதிபர் சங்கமும் அறிக்கை விட்டது.

பிழையான நிதிசார் நடவழக்கைக்கு ஒத்துழைக்கவில்லை என்பதால் கணக்காளர் கல்வி அமைச்சரிடம் கோள் மூட்டப்பட்டு கல்வி அமைச்சர் அவரைத் தொடர்பு கொண்டு எச்சரித்ததாகவும் தெரியவருகிறது. அதுபோல பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு உரிய கடமைகளைச் செய்வதற்கு அனுமதிக்காது, தாமே எல்லாவற்றையும் வைத்திருக்கிறார் என்றும் பொறுப்புக் கூறல் என்று வரும் போது தவறைத் தம் தலையில் கட்டி விடுகிறார் என்றும் சொல்லப்படுகிறது.

ஆகவே, தங்கள் குறுகிய நலனுக்காக 18 ஆயிரம் பிள்ளைகளின் கல்வியுடன் விளையாட வேண்டாம் எனக் கல்வி அமைச்சரிடம் கேட்டுக் கொள்கிறேன். இல்லையேல் முல்லை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் வீதிக்கு இறங்க வேண்டி வரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சி. கந்தசாமி
முல்லைத்தீவு.

# சென்னையில் பரவும் புதியவகை கண் நோய்

## மருத்துவ மனையை நிரப்பும் மக்கள் கூட்டம்

சென்னையில் பருவநிலை மாற்றங்களால் புதிய வகை கண் நோய் பரவுவதாகவும் அதனால் மருத்துவமனையில் கூட்டம் நிரம்பி வழிவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது. சென்னையில் தற்போது வைரஸ் பாதிப்பால் கண் நோய் பரவி வருகிறது. காற்றில் ஏற்படும் மாசு, சுற்றுச்சூழல் மாசு ஆகியவற்றால் இந்த வைரஸ் பாதிப்பு ஏற்படுகிறது.

இதனால் ஏற்படும் நோய் தொற்று விழி வெண்படலத்தை தாக்குகிறது. இதற்கு முறையாக சிகிச்சை மேற்கொள்ளாவிட்டால் பார்வை இழப்பு ஏற்படும் என மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். இது குறித்து எழும்பூர் அரசு கண் மருத்துவமனையின் இயக்குநர் நமீதா புவனேஸ்வரி கூறுகையில், கண் நோய் பாதிப்பு சென்னையில் அதிகரித்து வருகிறது.

எழும்பூர் அரசு கண் மருத்துவமனைக்கு தினமும் 5 முதல் 10 பேர் கண் நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக வருகின்றனர். இந்த எண்ணிக்கை அதிகரித்து வருவதோடு, மே மாதத்தில் தொடங்கி யூன், யூலை மாதம் வரை இந்த நோயின் பாதிப்பு இருக்கும்.



சிவந்த கண்கள், கண் உறுத்தல், கண் இமையில் வீக்கம், கண்களில் எரிச்சல் ஏற்பட்டு நீர்வடிதல் போன்றவை கண் நோய்க்கான அறிகுறிகளாகும்.

நோய் அறிகுறிகள் தென்பட்டதும் உடனே கண் மருத்துவர்களை நாடவேண்டும். இது குறித்து நடந்த ஆய்வின் முடிவில் இந்தக் கண் நோய்க்கு 'என்ட்ரோ' எனப்படும் புதிய வகை வைரஸ் காரணம் என கண்டறியப்பட்டுள்ளது என்றும் இது குறித்துமீண்டும் ஆய்வு செய்ய முடிவு செய்துள்ளோம்எனவும் தெரிவித்துள்ளார். மேலும், இந்த கண் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தனியார் மருத்துவமனையிலும் அதிக அளவு சிகிச்சை பெற்றுவரும் நிலையில், மருத்துவர்கள் பரிந்துரைக்கும் நோய் எதிர்ப்பு மருந்துகளை மட்டுமே எடுத்து கொள்ளவேண்டும் என எச்சரித்துள்ளனர்.

# ஐ.எஸ்.ஐ.எஸ் முக்கிய தளபதி விமான தாக்குதலில் பலி



ஈராக் மற்றும் சிரியாவின் சில பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் அந்த பகுதியை தனி நாடாக அறிவித்துள்ளனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ்.போராளிகளின் தலைவராக இருந்து வந்தவர் அபுபக்கர் அல்பக்தாதி. இவர் அமெரிக்கா கூட்டுப் படை குண்டுவீச்சில் காயமடைந்திருப்பதாகவும், இறந்துவிட்டதாகவும் இருவேறு தகவல்கள் வெளிவந்திருந்தன. ஆனால் அவர் இறந்தது இதுவரை உறுதி செய்யப்படவில்லை. காயமடைந்திருப்பது மட்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர் காயமடைந்ததை அடுத்து ஐ.எஸ். ஐ.எஸ்.போராளிகளின் துணை தலைவரான அபுஅலா அல்அபாரி போருக்கு தலைமையேற்றார்.

அவரும், முக்கிய தளபதிகளும் ஈராக்கில் உள்ள தல்அபா என்ற இடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஒரு மசூதி அருகே இரகசியமாக கூடி பேசிக்கொண்டிருந்தனர். இந்த தகவல் அமெரிக்க கூட்டுப்படையினருக்கு கிடைத்தது. அவர்கள் அந்த இடத்தில் சரமாரியாக விமானத் தாக்குதல் நடத்தினார்கள்.

இதில் அபுஅலா அல்அபாரி உட்பட 12இற்கும் மேற்பட்ட முக்கிய தளபதிகள் கொல்லப்பட்டதாக ஈராக் இராணுவத்துறை அறிவித்துள்ளது. அவர் கொல்லப்பட்டது ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்புக்கு பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது. ஆனால் அவர் இறந்ததை இதுவரை அமெரிக்கா உறுதி செய்யவில்லை. அவரது தலைக்கு அமெரிக்கா ரூ. 42 கோடி பரிசு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிசுவின் காலில் திரிசூல ரேகை

## வழிபடும் மக்கள்



மைசூருரில் 3 மாத குழந்தையின் காலில்திரிசூலரேகை உள்ள தகவல் பரவியதால் ஏராளமான மக்கள் அந்தக் குழந்தையை வழிபட்டுசெல்கின்றனர். ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த ரமேஷ், தேவி தம்பதியர் மைசூருரில் மளிகைக் கடை நடாத்தி வருகின்றனர்.

இந்த தம்பதியின் 3 மாத பெண் குழந்தை தேவியின், கால் பாதத்தில் திரிசூலம் போன்று ரேகை உள்ளது. அதுமட்டுமல்லாமல், குழந்தையின் நெற்றியில் குங்குமத்தால் வெற்றி திலகமிட்டது போல் உள்ளது. அந்தக் குழந்தையை குளிப்பாட்டும்போது, அது சிறிது மறைவது போல் இருந்தாலும், சிறிது நேரத்தில் அது மீண்டும் தெளிவாக தெரிகிறது. இதுகுறித்து அந்த பகுதியில் தகவல் பரவியதால், ஏராளமான பொதுமக்கள் அந்தக் குழந்தையை ஆச்சரியத்துடன் பார்த்துச் செல்வதோடு, அதை வழிபட்டு செல்கின்றனர்.

# உறங்கிய பாதுகாப்பு அமைச்சர் துப்பாக்கியால் சுட்டு மரணதண்டனை



வட கொரிய பாதுகாப்பு அமைச்சர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டதாக தென் கொரிய உளவுத்துறை தெரிவித்துள்ளது. அதிபர் கிம் ஜோங்கிடம் பணிவாக நடக்காததால் இந்த தண்டனை வழங்கப்பட்டதாக தெரியவந்துள்ளது.

வட கொரியாவின் பாதுகாப்பு அமைச்சர் ஹையோன் யோங் சோலுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட செய்தியை தென் கொரிய உளவுத் துறை அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தெரிவித்தது. விமானங்களை சுட்டு வீழ்த்தும் துப்பாக்கியால் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் முன்னிலையில் அவருக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டதாக அந்தத் தகவலில் தெரிவிக்கப்பட்டது.

தேசத்துரோகம் செய்து விட்டதாக கூறி இந்த தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் தண்டனை அளிக்கப்பட்ட ஹையோன் மீது எந்தக் குற்றச்சாட்டும் இல்லாத நிலையில், அதிபர் கிம் ஜோங் உன் தலைமையேற்ற பேரணியில் அவர் முன்னிலையில் சோர்வாக தூங்கியதாக புகார் எழுந்தது.

இந்த மரண தண்டனைக்கு இதுவே காரணமாக கருதப்படுகிறது.

உலகச் செய்திகள்

# ஒரே குடும்பத்தில் நால்வர் லண்டனில் மர்மமாக மரணம்



ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் மர்மமான முறையில்மரணமடைந்துள்ள சம்பவம் ஒன்று பிரித்தானியாவில் பெரும்சோகத்தினை ஏற்படுத்தியுள்ளது இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,பிரித்தானியாவின் கிழக்கு லண்டனில் சாட்வெல் ஹெல்த் பகுதியைச் சேர்ந்தவர் புல்லர்கட்டில் ரித்திஸ்குமார்.

இவருக்கு ஷிகி என்ற மனைவியும் நியா மற்றும் நேகா என்ற மகள்களும் இருந்தனர். இந்நிலையில் க்ருவ் சாலையில் உள்ள அவர்கள் வீட்டில் ஷிகி மற்றும் மகள்கள் நியா, நேகா ஆகியோர் இறந்து கிடந்த நிலையில் அவர்களின் சடலங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இதனைத் தொடர்ந்து அவர்களின் சடலங்களை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய போது அவர்கள் உடலில் எந்த காயங்களோ அடி தழும்புகளோ எதுவும் இல்லை என தெரியவந்துள்ளது.

இந்நிலையில் வால்டம்ஸ்டொ பகுதியில் உள்ள வுட்போர்ட் நீர்த்தேக்கம் அருகே தூக்கில் தொங்கிய நிலையில் ரித்திஸின் உடல் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். எனினும் அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் இறந்தவர்கள் பற்றி கூறிகையில், அவர்கள் இங்கு 8 ஆண்டுகளாக வசித்து வந்தனர், மிகவும் அமைதியானவர்களாகவும் மனிதநேயமிக்கவர்களாவும் காணப்பட்டார்கள் என தெரிவித்துள்ளனர். இம்மரணம் குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தொங்கிய சிறுவனின் தலை சிகிச்சை மூலம் சீரானது



இந்தியாவின் மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த மஹேந்திர அஹிர்வால் எனும்12 வயது சிறுவனுடைய தலை, கழுத்துப் பகுதியில் வளைந்து பின்புறமாகத் தொங்கிக் கொண்டிருந்தது. இந்த சிறுவனின் பெற்றோர் வறுமையில் வாடியதால்அவனது சிகிச்சைக்காக உலகெங்கும் உதவி கோரப்பட்டிருந்தது.

இந்நிலையில், புதுடில்லியில்உள்ள மருத்துவமனையில் இந்தச் சிறுவன் சிகிச்சை பெற்று குணப்படுத்தப்பட்டுள்ளான். அத்துடன், முதுகு அறுவை சிகிச்சை நிபுணரான ராஜகோபாலன் கிருஷ்ணன்என்பவர், சிறுவனது உடல் நலத்தை மேலும் தேற்றுவதற்கு தம்மால் முடியும்எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# சீனாவில் மோடிக்கு சிவப்பு கம்பள வரவேற்பு

சீன அதிபரின் சொந்த ஊருக்கு சென்ற இந்திய பிரதமர் மோடிக்கு சிவப்பு கம்பள வரவேற்பு வழங்கியுள்ளனர். 3 நாள் அரசுமுறை பயணமாக சீனா சென்றுள்ள் பிரதமர் மோடி, நேற்று அதிகாலை சீன அதிபரின் சொந்த ஊரை சென்றடைந்துள்ளார்.

அங்கு மோடிக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது. அதிபர் ஜிங்பிங்கை சந்தித்த மோடி பின்னர் அங்கு சியான் நகருக்கு தெற்கில் உள்ள பிரபல புத்த விகாரைக்கும் சென்றார் இதையடுத்து இன்று மீண்டும் ஜின்பிங்கை சந்திக்கும் மோடி, எல்லை பிரச்சினைகள் குறித்தும், இரு தரப்பு வர்த்தகம் பற்றியும் விரிவாக பேசவுள்ளார்.

இந்தியாவுக்கு சீனாவுக்கும் இடையேயான வர்த்தகம் கடந்த ஆண்டை விட 34 சதவீதம் குறைந்துள்ள நிலையில், இரு தலைவர்களும் சந்தித்து பேசுவதன் மூலம் வர்த்தக உறவுகளை சீராக்க முடியும் என்று நம்பப்படுகிறது.

# இந்திய மீனவர் அத்துமீறல் தீர்வுக்கான முயற்சிக்கு வரவேற்பு



இந்திய மீனவர்களின் அத்துமீறல் காரணமாக வடக்கு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை சுமுகமாக தீர்க்க விரும்புவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருப்பதனை தாம் வரவேற்பதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இந்திய மீனவப் பிரதிநிதிகளுடன் கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை- இந்திய மீனவர்களது பிரச்சினைகள் நீண்ட காலமாக தீர்வு காணப்படாத நிலையில் இருந்து வருகின்றது.

குறிப்பாக, இந்திய மீனவர்களது அத்துமீறியதும் தடைசெயப்பட்டதுமான தொழிற்துறை நடவடிக்கைகளால் வடபகுதியின் கடல்வளங்களும், கடற்பாறைகளும் அழிவடைந்து வரும் அதேவேளை, எமது கடற்றொழிலாளர்களது படகுகள், வலைகள் உள்ளிட்ட தொழிற்துறை சார்ந்த உபகரணங்களும் சேதமடைந்தும் வருகின்றன.

முன்னாள் ஜனாதிபதி மற்றும் முன்னாள் கடற்றொழில் அமைச்சர் ஆகியோரது அனுமதியுடன் கச்சதீவு புனித அந்தோனியார் கோவில் வருடாந்த உற்சவத்தின் போது இருதரப்பு மீனவர்களுடனும் எனது தலைமையில் கலந்துரையாடல்களை மேற்கொண்டு இணக்கம் காணப்பட்ட விடயங்கள் நாளடைவில் இந்திய மீனவர்களது நடவடிக்கைகளால் தோல்வி கண்டிருந்தமையை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இந்நிலையில், வடபகுதி கடற்றொழிலாளர்களது தொழிற்துறை பாதிப்பால் அவர்களது வாழ்வாதாரம், பொருளாதாரமும் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இதுவிடயத்தில் ஜனாதிபதி அதிக அக்கறை செலுத்தி உரிய தீர்வினை காண முன்வர வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன்.

இருநாட்டு மீனவர்களுக்கு மிடையே நீண்டகாலமாக நிலவி வரும் பிரச்சினைகளுக்கு இருதரப்பும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தான வகையில் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வந்திருப்பதை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் முழுமனதுடன் வரவேற்கும் அதேவேளை, இதற்கு எம்மாலான பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் வழங்கவும் தயாராகவிருக்கின்றோம் என்றும் செயலாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே மீனவர்களது பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் பொருட்டு பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் நேரத்தில் அத்துமீறியதும் தடைசெய்யப்பட்டதுமான தொழிற்துறைகளை இந்திய மீனவர்கள் கைவிட வேண்டுமென்பதுடன் தீர்வு முயற்சிகள் துரிதப்படுத்தப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கின்றேன் என தெரிவித்துள்ளார்.

## உள்ளூராட்சி...

திகதி நிறைவடைகின்றது.

2 உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் ஒக்ரோபர் 31 ஆம் திகதி நிறைவடையவுள்ளது.

நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைய, இந்த உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலத்தை நீடிக்காதிருக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இதேவேளை, தேர்தல் முறைமையை மாற்றுவதற்காக முன்வைககப்பட்டுள்ள 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் கண்டறிந்து அறிக்கையிடுவதற்காக அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. என்பதும் குறிப்பிடத்தக்கது. வடக்கில் உள்ள உள்ளூராட்சிசபைகள் எதிர்வரும் யூலை மாதம் 31ஆம் திகதிவரை இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய...

மற்றும் பழனி திகாம்பரம் ஆகியோர் உள்ளனர்.

இந்தக் குழுவினால் தகவல்கள் பெறப்பட்டு சமர்ப்பிக்கப்படும் அறிக்கையை ஆய்வு செய்த பின்னரே புதிய தேர்தலிலா? அல்லது நடைமுறையிலுள்ள தேர்தல் முறையிலா நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது என்ற முடிவு எடுக்கப்படும் என அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறினார்.

புதிய தேர்தல் முறைமை குறித்து மீள்பரிசீலனை செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை உப குழு தனது பணியை நேற்று முதல் ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசியல் கட்சிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள திருத்த யோசனைகள் குறித்து முதலாவது சந்திப்பின் போது கூடிய கவனம் செலுத்தப்பட்டதாக இக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்டுள்ளார்.

## மாணவி...

பாடசாலை முடிந்த பின்னர் அவர் வழக்கம்போல வீடு திரும்பாததைக் கண்ட பெற்றோர், பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு விசாரித்தபோது, அவர் பாடசாலைக்கு வரவில்லை என தெரிவிக்கப்பட்டதையடுத்து, அயலவர்களின் உதவியோடு அவரைத் தேடியதாகவும் கூறப்படுகின்றது.

இரவு முழுவதும் தேடியும் அவரைக் காணாத நிலையில், நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை ஐந்தரை மணியளவில் நாய்களின் உதவியோடு பற்றைகள் நிறைந்த இடத்தில் பாடசாலை சீருடையில் இந்த மாணவி சடலமாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளார்.

இந்த மாணவியின் மூத்த சகோதரனும் மற்றுமொருவருமே முதலில் சடலத்தைக் கண்டுபிடித்துள்ளனர். தனது தங்கையைக் கோரமான நிலையில் சடலமாகக் கண்டதையடுத்து, அந்த சகோதரன் மயக்கமடைந்து புங்குடுதீவு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிற்பகல் வரையில் அவருக்கு நினைவு திரும்பவில்லை என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்சம்பவம் பற்றி அறிந்த ஊர்காவற்றுறை பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டதுடன், சடலத்தை மருத்துவ பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பியுள்ளனர்.

புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவியாகிய வித்தியா கோரமாகக் கொல்லப்பட்டிருந்ததைக் கண்டித்து, புங்குடுதீவில் உள்ள 9 பாடசாலைகளையும் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வித்துறை அதிகாரிகள், பிரதேச சபை மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் வர்த்தகர்கள், பொதுமக்கள் என பலதரப்பட்டவர்களும் புங்குடுதீவு மகாவித்தியாலய மைதானத்தில் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## கொலையைக்...

தமது வீடுகளுக்கு முன்பாக கறுப்புக்கொடிகளை பறக்கவிட்டு மாணவி வித்தியாவின் ஆத்மா சாந்தியடைவதற்கு பிரார்த்திக்கவுள்ளன.

இதேவேளை, தீவக வலயத்தின் அனைத்து பாடசாலை அதிபர், ஆசிரியர் மாணவர்கள், ஊழியர்கள் அனைவரும் கறுப்பு பட்டியை அணிந்து பாடசாலைக்கு சமூகமளித்து அமைதியான முறையில் தமது எதிர்ப்புணர்வையும் வெளிப்படுத்தி துயரத்தை பகிர்ந்து கொள்ளவுள்ளனர்.

## வடக்கில்...

இதனால் இக்காலப்பகுதியில் அதிக மழை வீழ்ச்சி காணக் கூடியதாக இருக்கும்.

கடந்த செவ்வாய்க்கிழமை குடாநாட்டில் 38.7 மில்லி மீற்றர் மழை பெய்ததுடன் நேற்று முன்தினம் 36.9 மில்லிமீற்றர் மழை பெய்துள் ளது அத்துடன் நேற்று நண்பகல் 11.30 மணிவரையான நேரத்தில் 22.7 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளதுடன் இந்த ஆண்டில் இதுவரை 206 மில்லி மீற்றர் மழை யாழ். குடாநாட்டில் பெய்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## குடை...

சாவகச்சேரியில் இருந்து பலாலி நோக்கி வந்து கொண்டிருந்த இராணுவ வாகனமே இவ்வாறு குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

வாகனத்தில் பயணம் செய்த நான்கு இராணுவ வீரர்கள், படுகாயங்களுக்கு உள்ளாகி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## 20 ஆவது..

ஜனநாயக மக்கள் முன்னணியின் கொழும்பு மாவட்ட செயற்குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட ஜனநாயக தேர்தல் முறை தொடர்பிலான இந்த நிகழ்வை ஜ.ம.மு. தலைவரும், தேசிய நிறைவேற்று சபை உறுப்பினருமான மனோ கணேசன் தலைமையேற்று நடத்த, தேர்தல் முறை திருத்த சட்டமூலத்தை தயாரிப்பதில் முக்கிய பங்களித்து வரும் அசோகா அபேகுணவர்தன, கீர்த்தி தென்னகோன் ஆகியோர் விளக்க உரைகளை நிகழ்த்துவர். இந்த உரைகளுக்கு அவசியமான தமிழ் மொழி பெயர்ப்புகளும் வழங்கப்படும்.

தேர்தல்முறை மாற்றம் தொடர்பில் ஜ.ம.மு. உட்பட்ட கூட்டணிக் கட்சிகள் தயாரித்து அளித்துள்ள திருத்த ஆலோசனைகள் பற்றியும் இந்நிகழ்வில் ஆராயப்படவுள்ளது. சமூக முன்னோடிகள், ஊடகவியலாளர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சட்டத்தரணிகள், வர்த்தகர்கள் என அனைத்து பிரிவினரும் கலந்து கொண்டு நாடு முழுக்க பரபரப்பாக பேசப்படும் உத்தேச தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் அறிந்து கொள்ளும் சந்தர்ப்பத்தை முறையாக பயன்படுத்திக்கொள்ளுமாறு அனைவரையும் அழைப்பதாக ஜ.ம.மு. ஊடக செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## சிறுபான்மை...

செய்யும் வகையில் அத்தேர்தல் தொகுதிகள் பல பிரதிநிதிகளை தெரிவு செய்யும் (02அல்லது 03) தொகுதிகளாக அமையவேண்டும்.

ஜனாதிபதி செயலகத்தில் முன்மொழியப்பட்ட தேர்தல்முறை தொடர்பாக அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டதாவது, ஒவ்வொரு வாக்காளரும் இரண்டு வாக்குகள் அளிப்பதற்கு வழிவகுக்கவேண்டும். ஒரு வாக்கு ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் ஒரு வேட்பாளரை தெரிவுசெய்வதற்கும் மற்றைய வாக்கு ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் அவர் விரும்பும் கட்சிக்கு உரியதாகவும் அமையவேண்டும்.

அத்துடன் இரண்டு வாக்குகள் அளிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவதைக் காரணம் காட்டி மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களை 255 இலும் கூடுதலாக்க எத்தனிப்பதை தாம் ஏற்கவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல்முறை மாற்றம் தொடர்பான முழுமையான ஆலோசனை விபரம் வருமாறு:

புதிய தேர்தல்முறை சிறுபான்மை இனங்களுக்கும் சிறுகட்சிகளுக்கும் நாடாளுமன்றத்தில் உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கக் கூடியவகையில் அமைய வேண்டும்.

வடக்குக் கிழக்கில் கடந்த மூன்று தசாப்தமாக இயற்கை மரணவிகிதாசாரத்திலும் அதிகமான மரணங்கள் நடைபெற்றதாலும் பொருளாதார காரணங்களுக்கான குடியகல்வுகளிலும் பார்க்க அதிகளவிலான குடியகல்வுகள் நடைபெற்றதாலும் ஓர் குறிப்பிட்ட காலத்திற்கு அதனை ஈடு செய்யக் கூடியவகையில் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் அமைதல் வேண்டும்.

கடந்த 11.05.2015இல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட புதியதேர்தல் முறைக்கான முன்மொழிவுகள் தொடர்பாக:

ஒவ்வொரு வாக்காளரும் இரண்டு வாக்குகள் அளிப்பதற்கு வழிவகுக்கவேண்டும். ஒருவாக்கு ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் ஒருவாக்காளரைத் தெரிவு செய்வதற்கும் மற்றையவாக்கு ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் அவர் விரும்பும் கட்சிக்கு உரியதாகவும் அமையும்.

மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகை 255 இலும் கூடுதலாக்க கூடாது. ஒவ்வொரு வாக்காளரும் இரண்டுவாக்குகள் அளிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கினால் அது நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை கூட்டவேண்டிய தேவையை ஏற்படுத்தும் என்று அன்றைய கூட்டத்தில் கூறப்பட்ட கருத்து ஏற்புடையதுஅல்ல.

மொத்த 255 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 196 பேர் மாவட்ட விகிதாசாரஅடிப்படையில் கணக்கிடப்பட வேண்டும்.

ஏனைய 59 உறுப்பினர்களும் தேசிய ரீதியில் கட்சிகளுக்கு இடையில் பங்கிடப்படல் வேண்டும்.

தேர்தல் மாவட்ட ரீதியான போனஸ் ஒதுக்கீடு தற்போது நடைமுறையில் இருக்கும் முறையில் அமையவேண்டும். அவ்வாறு ஒதுக்கப்பட்ட உறுப்பினரை கட்சியின் செயலாளர் நியமிக்க அதிகாரம் உடையவராக இருத்தல் வேண்டும்.

தேர்தல் மாவட்ட ரீதியாக ஒவ்வொருகட்சிக்கும் கிடைக்க வேண்டிய பிரதிநித்துவம் விகிதாசார அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட பின் அக் கட்சிகளுக்குரிய பிரதிநிதிகளை தேர்தல் தொகுதிகளில் வென்றவர்களில் இருந்து நிரப்புதல் வேண்டும்.

ஒருகட்சிக்கு ஓர் தேர்தல் மாவட்டத்தில் கிடைக்க வேண்டிய உறுப்பினர்களிலும் பார்க்க அக்கட்சி அத் தேர்தல் மாவட்டத்தில் வென்ற தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை குறைவாயின், அவ் வித்தியாசத்திற்குரிய பிரதிநிதித்துவம் அக்கட்சிக்கு அவர்களால் கொடுக்கப்பட்ட அம் மாவட்டத்திற்கு உரிய விகிதாசார நிரலில் இருந்து அல்லது தேர்தல் தொகுதிகளில் அக்கட்சி தோற்ற நபரை நியமிப்பதற்கு உரித்துடையதாக வேண்டும்.

ஒரு கட்சிக்கு ஓர் தேர்தல் மாவட்டத்தில் கிடைக்க வேண்டிய உறுப்பினர்களிலும் பார்க்க அக்கட்சி அத் தேர்தல் மாவட்டத்தில் வென்ற தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை அதிகமாயின் அம் மேலதிக பிரதிநிதித்துவத்தை தேர்தல் ஆணையாளர் அக்கட்சிக்குரிய தேசியப்பட்டியல் பிரதிநிதித்துவத்தில் இருந்து ஒதுக்குவார். அக் கட்சிக்கு தேசியநிரலில் பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை எனின் அப் பிரதிநிதித்துவம் முதலில் மொத்த தேசியபட்டியலில் இருந்து (59) ஒதுக்கப்பட்டு அதன் பின்னரே தேசியப்பட்டியல் ஒதுக்கீடுகள் கணக்கிடப்படல் வேண்டும்.

புதியதேர்தல் தொகுதிகள் நிர்ணயிக்கப்படும் போது இயலுமானவரை சிறுபான்மையினரை அவர்களுடைய விகிதாசாரத்தை பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் அமையவேண்டும்.

கணிசமான சிறுபான்மையினர் வாழும் தேர்தல் தொகுதியில் அவர்களது பிரதிநித்துவத்தை உறுதிசெய்யும் வகையில் அத் தேர்தல் தொகுதிகள் பல பிரதிநிதிகளை தெரிவுசெய்யும் (2அல்லது 3) தொகுதிகளாக அமையவேண்டும் என்றும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாணவியின் மரணம்; நீதியான விசாரணை வேண்டும்



(புங்குடுதீவு)

புங்குடுதீவில் உயிரிழந்த மாணவியின் இல்லத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இழப்பால் துயருற்றிருக்கும் உறவுகளுக்கு ஆறுதலை தெரிவித்துள்ளார்.

மாணவியின் இல்லத்திற்கு விஜயம் மேற்கொண்ட செயலாளர் நாயகம், உயிரிழந்த மாணவியின் பெற்றோருக் கும் உறவுகளுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொண்டார்.

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தில் கல்வி கற்கும் சிவலோகநாதன் வித்தியா பாழடைந்த வீடொன்றி லிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இதனிடையே குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை துரிதப்படுத்தி குற்றவாளிகளை இனம் காணுமாறு பொலிஸாரிடம் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக் கொண்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.



புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவியின் படுகொலையைக் கண்டித்து நேற்று அப்பாடசாலை மாணவர்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதைக் காணலாம். (25)

## விபத்தில் வயோதிபர் படுகாயம்

வலிகாமம் தெற்கில் இடம்பெற்ற வீதி விபத்தில் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2.50 மணியளவில் மருதனார்மடம் - மானிப்பாய் வீதியில் (உடுவில் மகளிர் கல்லூரிக்கு சமீபமாக) இடம்பெற்றது. மருதனார்மடத்திலிருந்து மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த வாலிபர், எதிரே துவிச்சக்கர வண்டியை ஓட்டி வந்த வயோதிபர் மீது மோதியுள்ளார்.

காயமடைந்த வயோதிபர் உடுவில், ஆக்லேனைச் சேர்ந்த அருமைத்துரை (வயது - 64) எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த வயோதிபர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்து தொடர்பாக சுனாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வியாபார முகாமைத்துவ இளமாணி கற்கை நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாகத்தினால் வியாபார முகாமைத்துவ இளமாணிக் கற்கைநெறி (செயற்திட்ட முகாமைத்துவம்) எனும் புதிய கற்கைநெறி ஆரம்பிக்கப் பட்டுள்ளது என வியாபார கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி அம்பலம் புஸ்பநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

2014,2015 கல்வி ஆண்டில் வியாபார முகாமைத்துவ இளமாணிக் கற்கைநெறி (செயற்திட்ட முகாமைத்துவம்) எனும் புதிய கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இக்கற்கை நெறியானது விசேட அனுமதியின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளதால் 2014 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரத்தில் சித்தியெய்திய அனைத்துப்பிரிவு மாணவர்களும் (கலை, வர்த்தகம், விஞ்ஞானம், மற்றும் கணிதம்) விண்ணப்பிக்கலாம்.

இதற்கான மேலதிக விவரங்களினை பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள மாணவர்களுக்கான கையேட்டின் மூலம் அறிந்துகொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

## ஒன்றுகூடல்

(கோப்பாய்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் விசேட ஒன்றுகூடல் நிகழ்வு இலவச ஆயுர்வேத வைத்திய சேவைகளும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை 10.00 மணியளவில் கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

RRR Advertising Internatinal
வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் RRR Advertising விளம்பரப்படுத்தல் முகாமைத்துவம் தொடர்புடைய பயிற்சியுடனான வேலை வாய்ப்பு படித்த இளைஞர் யுவதிகளிற்கானது. A/L சித்தியடைந்த, அடைய முடியாத சகல இளம் சமுதாயத்தினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான சந்தர்ப்பம். இன்றே தொடர்பு கொள்பவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அடிப்படைச் சம்பளம் ரூபா 15,000

ETF, EPF Medical மற்றும்
கிளைகள் தனியாக திறந்து கொடுக்கப்படும்

கிளை உரிமையாளர்களுக்கு ரூபா 75,000 இற்கு மேற்பட்ட சம்பளத்துடன் தொழிலை மேற்கொள்ளலாம்.

தகைமைகள் - நேரில் தெரிவு செய்யப்படும்

உடன் தொடர்புகொள்ள :
0217905381



(R/274)

## யாழ்ப்பாணத்தில் மீன் மழை

நல்லூர் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை பெய்த மழையுடன் மீன்கள் பல விழுந்துள்ளன. கடந்த சில நாட்களாக குடாநாட்டில் பரவலாக மழை பெய்து வருகின்றது.

இதேபோன்று நேற்றுக் காலை வீரமாகாளி அம்மன் ஆலயப் பகுதி - பருத்தித்துறை வீதியில் பெய்த மழையுடன் பல மீன்களும் விழுந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. மழையுடன் விழுந்த மீன்களை அப்பகுதியைச் சேர்ந்த சிலர் வாளிகளில் எடுத்துச் சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

கடந்த பருவமழை காலத்தின் போது வீரமாகாளி அம்மன் கோயில் பகுதியில் பெய்த மழையுடன் மீன்கள் விழுந்தமை குறிப்பிடத்தக்கது

வடக்கு மாகாண
கூட்டுறவு அபிவிருத்திக்கான
100 நாள் வேலைத் திட்டம்

ஆரம்பம்: 15.05.2015

கூட்டுறவாளர்களின் மே தினத் தீர்மானத்திற்கு அமைவாக 100 நாள்களில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டங்கள்

01. கூட்டுறவு அமைப்புகளை வினைத்திறன்மிக்க கட்டமைப்புகளாகப் பலப்படுத்தும் வகையில் கூட்டுறவுச் சங்கங்களுக்கான புதிய நியதிச் சட்டம் ஒன்றை உருவாக்குதல்.
02. தொடர்ந்தும் நட்டத்தில் இயங்கிவரும் சங்கங்கள் எதிர்வரும் 03 மாத காலத்தினுள் வருமானம் ஈட்டும் செயற்பாடுகளில் இலாபம் ஈட்டத் தவறும் பட்சத்தில் அச்சங்கங்களின் பணிப்பாளர் சபையுடன் மேலதிகமாக நியமன உறுப்பினர்களை நியமித்தல்
03. நலிவடைந்துள்ள சங்கங்களின் நலிவுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றிலிருந்து மீளுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
04. ஆளணி வெற்றிடங்களை நிரப்புதல். ஆளணி அங்கீகாரம் இல்லாத சங்கங்களுக்குப் புதிய ஆளணி அங்கீகாரம் பெறுதல் மற்றும் ஆளணி அதிகரிப்புக்கு ஆவன செய்தல்.
05. புதிய 30 வீத சம்பள உயர்வினை இதுவரை பணியாளருக்கு வழங்காத சங்கங்களை வழங்கச் செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடல்.
06. இதுவரை பதவி நிர்ணயம் செய்யப்படாத பணியாளர்களுக்குப் பதவி நிர்ணயம் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.
07. மாவட்டங்கள் தோறும் மாவட்டக் கூட்டுறவுச் சபை ஊடாக வேலை வங்கி ஒன்றினை உருவாக்குதல்.
08. கூட்டுறவுத்துறையில் ஆயிரக்கணக்கானோருக்குத் தொழில் வாய்ப்பை உருவாக்கும் வகையில் செயற்திட்டங்களை உருவாக்குதல்.
09. தேர்தல் நடைபெறாதுள்ள சங்கங்களுக்குத் தேர்தலை நடாத்துதல்.
10. பயன்பாட்டிலுள்ள, பயன்பாட்டிலில்லாத அத்துடன் மற்றோர் வசம் உள்ள கூட்டுறவு அமைப்புகளின் சொத்து விபரங்களைச் சேகரித்து அவை தொடர்பான பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
11. பயன்பாடற்று இருக்கும் தொழிற்சாலைகளை இயக்குவதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
12. கூட்டுறவு தொடர்பான முறைப்பாடுகளைக் கூட்டுறவாளர்கள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்களிடம் இருந்து பெற்றுத் தீர்வுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
13. இளைய தலைமுறையினர் உட்பட அதிக எண்ணிக்கையானோரைப் புதிய அங்கத்தவர்களாகக் கூட்டுறவு அமைப்புகளில் உள்ளீர்த்தல்.
14. கூட்டுறவுச் சபைகளில் பணியாளர்களின் பிரச்சினையை ஆராயும் பொருட்டு இணக்க சபைகளை உருவாக்குதல்.
15. எவ்வித விசாரணையுமின்றி பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட பணியாளர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு காணல்.
16. கிராமிய வங்கி நடவடிக்கைகளை விரிவுபடுத்தல்
17. கூட்டுறவுச்சங்கக் கிளைகளின் வியாபார நடவடிக்கைகளை நுகர்வோரை மையமாகக் கொண்டு விரிவுபடுத்தல்.
18. கூட்டுறவுத்துறையை நவீனமயப்படுத்துவதற்குரிய ஆலோசனைச் சபைகளை மாவட்ட ரீதியாக உருவாக்கி இக்குழுவின பரிந்துரைக்கமைய நவீனமயப்படுத்தலுக்கான செயற்திட்டங்களை முன்னெடுத்தல்.
19. கூட்டுறவு அமைப்புகளின் நெறியாளர்கள். பணியாளர்கள் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் புதிய கண்ணோட்டத்துடன். செயற்படுவதற்கான பயிற்சிகளை வழங்கி. இலக்குகளை நிர்ணயித்து மாதந்தோறும் குறித்த இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
20. ஒவ்வொரு துறைசார்ந்த கூட்டுறவு அமைப்புகளிலும் சிறப்பாக செயற்படும் சங்கத்தைத் தெரிவு செய்து அச்சங்கத்தினூடாக புதிய தொழில் முயற்சி ஒன்றை உருவாக்குதல்.
21. கூட்டுறவு அமைப்பின் மேம்பாட்டிற்கென வெளிநாடுகள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளல்.
22. கூட்டுறவுப் பெரியார் அமரர் வி. வீரசிங்கம் அவர்களின் நினைவாகத் தபால் தலை (முத்திரை) வெளியிடுவதற்கான முயற்சியை மேற்கொள்ளுதல்
23. வேலைத் திட்டங்களை மீளாய்வு செய்தல். (சி.3989)

மேற்குறித்த வேலைத்திட்டங்கள் பற்றிய பூரண விபரங்களைத் தெரிந்து கொள்ள விரும்புவோரும் ஆலோசனைகள் மற்றும் முறைப்பாடுகளைத் தெரிவிக்க விரும்புவோரும் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

இணைப்பாளர்
கூட்டுறவு அபிவிருத்திக்கான 100 நாள் வேலைத்திட்டம்
வடமாகாண விவசாய, கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி,
கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல், நீர் வழங்கல்,
நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு
295, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மே 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.